வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு வார மலர்

Eelanadu

Email : news@eelanadu.lk மலர் : 05 02.06.2024 ஞாயிற்றுக்கிழமை இதழ் : 154 பக்கங்கள் : 16




மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390. ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer மணிகிறாம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

# வடக்கும் தெற்கும் பற்றி எரிய நிறைவேற்றதிகாரமே காரணம்

## சுட்டிக்காட்டுகிறது தேசிய மக்கள் சக்தி

கொழும்பு, ஜூன் 02

நாட்டில் வடக்கும், தெற்கும் பற்றி எரிவதற்கு இந்த நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையே காரணமாகும் என்று தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் பொருளாதாரம் மேம்படவும், போரை முடிவுக்கு கொண்டுவரவும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை பக்கபலமாக அமைந்தது என ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். ஆனால் இந்நாட்டில் பொருளாதாரம் வங்குரோத்தடைவதற்கு நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை காரணமாகும். 15

## ஒக்ரோபர் 5 அல்லது 12இல் ஜனாதிபதி தேர்தல் நடக்கும்!

கொழும்பு, ஜூன் 02

ஒக்ரோபர் 5 அல்லது 12 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும் என்று ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினரும், ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான ஆசு மாரசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதித் தேர்தலே முதலில் நடத்தப்படும் என்று அமைச்சரவைக்கு ஜனாதிபதி தெரியப்படுத்திவிட்டார். இராஜாங்க அமைச்சர்களுடன் நடைபெற்ற சந்திப்பின்போதும் இது பற்றி ஜனாதிபதி தெரியப்படுத்தினார்.

ஜனாதிபதி தேர்தலுக்கு பாதீட்டில் நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளது. இலங்கையில் பெரும்பாலும் சனிக்கிழமை நாளொன்றிலேயே தேர்தல் நடத்தப்படும். அந்தவகையில் ஒக்டோபர் 5 அல்லது 15

## அதிகாலைவேளை தம்பதியை தாக்கி பணம், நகை கொள்ளை!

### உடுப்பிட்டியில் துணிகர சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூன் 02

உடுப்பிட்டி பகுதியில் கணவன்-மனைவி மீது தாக்குதல் மேற்கொண்டு தங்கம், பணம் என்பன கொள்ளையிடப்பட்டுள்ளன.

வியாபார நடவடிக்கைகளை முடித்து விட்டு வீடு திரும்பிய வர்த்தகரை , வீட்டுக்கு அருகில் வைத்து தாக்கிய கொள்ளையர்கள் ஒரு தொகை பணத்தைக் கொள்ளையிட்டதுடன், வர்த்தகரின் மனைவியை தாக்கி அவரது நகைகளையும் கொள்ளையடித்து தப்பிச் சென்றுள்ளனர்.

உடுப்பிட்டிப் பகுதியில் நேற்று சனிக்கிழமை அதிகாலையில் அப்பகுதியை சேர்ந்த 15

## ரணில் அரசில் திருப்தியில்லை!

### அஜித் மன்னப்பெரும

கொழும்பு, ஜூன் 02

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டை ஓரளவு ஸ்திரப்படுத்தினாலும் திருப்தியடைய முடியாது என ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அஜித் மன்னப்பெரும தெரிவித்தார்.

உண்மையில் நாட்டை மீண்டும் கட்டியெழுப்பக் 15

## அரசியல்வாதிகளின் குடும்பங்களுக்கு 20 வெளிநாட்டு சேவை நியமனங்கள்?

கொழும்பு, ஜூன் 02

இலங்கை வெளிநாட்டு சேவையின் மூன்றாம் தரத்துக்கு 40 விண்ணப்பதாரர்கள் பரிந்துரைக்கப்பட்டபோதும் நேர்முகத் தேர்வில் 20 விண்ணப்பதாரர்கள் மாத்திரமே தெரிவு செய்யப்பட்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

பரீட்சையில் சித்தியடைந்த 117 விண்ணப்பதாரர்களில் 20 பேரை மாத்திரம் நியமித்துவிட்டு, எஞ்சிய 20 வெற்றிடங்களுக்கு அமைச்சர்களின் உறவினர்களை வேறு வழிகளில் நியமிக்க அரசாங்கம் தயாராகி வருகிறதா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

2021ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 9ஆம் திகதி அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட விளம்பரத்தின்படி, அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்ற விண்ணப்பதாரர்கள் தொடர்புடைய தேர்வுக்கு விண்ணப்பிக்க வாய்ப்பு வழங்கப்பட்டது.

அதன்படி, இரண்டு கட்ட எழுத்துப் பரீட்சை மற்றும் நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டதாக, அநீதி இழைக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் தெரிவித்தனர். 15

## நயினாதீவு-குறிகாட்டுவான் படகு சேவை நேற்றுமுதல் புதிய நேர அட்டவணையில்

யாழ்ப்பாணம், ஜூன் 02

நயினாதீவு - குறிகாட்டுவான் படகுச் சேவை நேற்று சனிக்கிழமை தொடக்கம் புதிய நேர அட்டவணையில் இயங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த அறிவிப்புடனான நேர அட்டவணையை வேலணை பிரதேச சபை நயினாதீவு உப அலுவலகத்தின் பொறுப்பதிகாரி வெளியிட்டுள்ளார்.

நயினாதீவு - குறிகாட்டுவான் இடையேயான படகுச் சேவை காலை 6.30 முதல் மாலை 5.30 மணிவரை ஒவ்வொரு 30 நிமிடத்துக்கும் ஒரு படகு புறப்படும்.

மற்றும் குறிகாட்டுவான் - நயினாதீவு இடையேயான படகுச் சேவை காலை 7 மணி முதல் மாலை 6.30 மணி வரை ஒவ்வொரு 30 நிமிடத்துக்கும் 15

## சாதாரண தரப் பரீட்சை பெறுபேறு செப்ரெம்பரில்!

கொழும்பு, ஜூன் 02

மே மாதம் நிறைவடைந்த கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையின் பெறுபேறுகள் எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்திற்குள் வெளியிட எதிர்பார்க்கப்படுவதாக பரீட்சை ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்தார்.

387,648 பாடசாலை பரீட்சார்த்திகளும் 65,331 தனியார் விண்ணப்பதாரர்களும் அடங்கலாக 452,979 பரீட்சார்த்திகள் இவ்வருடம் பரீட்சைக்குத் தோற்றியதாக அவர் கூறினார். கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை மே மாதம் 6 ஆம் திகதி முதல் ஆரம்பமாகி நடைபெற்றது. (அ)

## தொழிநுட்ப ரீதியான மாற்றத்தை எம்மால் ஏற்படுத்த முடியவில்லை!

### கூறுகிறார் அநுரகுமார திசாநாயக்க

கொழும்பு, ஜூன் 02

தொழிநுட்ப ரீதியான மாற்றத்தை ஏற்படுத்த இயலாதவர்களாக தாம் உள்ளதாக தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தியின் பொறியியலாளர்சங்கத்தின் மாநாடு நேற்று கொழும்பில் இடம் பெற்றது. அதன்போது உரையாற்றுகையிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உலக நாடுகள் பல தொழிநுட்பத்தால் ஏற்படுத்திக் கொண்ட பாரிய மாற்றங்களை எம்மால் 15

## ரணிலால் மக்கள் ஆணையுள்ள ஜனாதிபதியாக வரவேமுடியாது

### அடித்து கூறுகிறார் ஹர்ஷண ராஜகருணா

கொழும்பு, ஜூன் 02

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் எந்த சந்தர்ப்பத்திலும் மக்கள் ஆணையுள்ள ஜனாதிபதியாக முடியாது என பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷண ராஜகருணா தெரிவித்தார்.

எதிர்கட்சித்தலைவர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் எந்த சந்தர்ப்பத்திலும் தேர்தலின் ஊடான மக்கள் ஆணையை பெற்றுக்கொள்ள முடியாது என்பதாலேயே தேர்தல்களை காலம் தாழ்த்த வேண்டும் என்ற நிலைப்பாட்டை வெளியிடுகின்றனர். 15

## சிறிகொத்தவை உரிமை கோருகிறது சஜித் அணி

கொழும்பு, ஜூன் 02

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவை ஐக்கிய மக்கள் சக்திக்கு வழங்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அக்கட்சியின் தேர்தல் முகாமையாளர் சுஜீவ சேனசிங்க, நாங்கள் முன்னாள் ஐக்கிய தேசியக் கட்சியினர் என்பதால் சிறிகொத்தவை உரிமைக் கோருவதற்கு எமக்கு உரிமை உள்ளது என கூறியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தற்போதைய நிலை குறித்து அவர் கவலை தெரிவித்துள்ளார்.

"ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் மனச்சாட்சியின்படி செயற்பட்டு சிறிகொத்தவை எங்களிடம் ஒப்படைப்பார் என நம்புகிறோம். 15

## மக்கள் ஆணை பெறாதவர்கள் ஜனநாயக விரோதிகள் ஆவர்!

### கருணாகரம் எம்.பி தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஜூன் 02

ஒரு ஜனநாயக நாட்டில் குறிப்பிட்ட காலத்துக்குப் பின்பு தேர்தல்களை நடத்தி மக்களின் ஆணையை பெற வேண்டும். அவ்வாறு நடைபெறாமல் விட்டால் அவர்கள் ஜனநாயக விரோதிகள் ஆவர் என மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் அமைந்துள்ள அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சிங்கள பௌத்த தலைவர்களுக்கும் தற்போதுள்ள ஜனாதிபதிக்கும் தேர்தல்களை ஒத்திப் போடுவது 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடமாற்றம் நடைமுறைக்கு வராவிட்டால் தொடர்ச்சியாக தொழிற்சங்க போராட்டம்

## வடக்கு மாகாண அரச சாரதிகள் சங்கம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 02

**வடக்கு மாகாண சபையின் இணைந்த சேவை உத்தியோகத்தர்களுக்கான வருடாந்த இடமாற்றம், 01.06.2024 முதல் நடைமுறைக்கு வராத சந்தர்ப்பத்தில் 03.06.2024 தொடக்கம் 07.06.2024 வரை தொடர்ச்சியான தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளோம் - இவ்வாறு வடக்கு மாகாண அரச சாரதிகள் சங்கம் அறிவித்துள்ளது.**

கடந்த ஐந்து வருடங்களாக தடைப்பட்டிருந்த சாரதிகளின் இடமாற்றமானது கடந்த வருடம் பிரதிப் பிரதம செயலாளரால் (நிர்வாகம்) விண்ணப்பம் கோரப்பட்டு இடமாற்றப் பட்டியலும் வெளியிடப்பட்டிருந்தது. இருந்த போதிலும் ஆளுநரின் கோரிக்கைக்கு இணங்க இடமாற்றம் நிறுத்தப்பட்டிருந்தது. இதனால் ஏமாற்றமடைந்த நாம் 05. 02. 2024 தொடக்கம் 10. 02 .2024 வரை தொடர் தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபட திட்டமிட்டிருந்தோம். போராட்ட ஏற்பாட்டினைத் தொடர்ந்து எமது நியாயமான கோரிக்கையை செவிமடுத்து 01. 06. 2024 தொடக்கம் இடைநிறுத்தப்பட்ட இடமாற்றமானது நடைமுறைப்படுத்தப்படுமென எழுத்து மூலமான உறுதிமொழியை பிரதிப் பிரதம செயலாளர் (நிர்வாகம்) வழங்கியிருந்தார். குறித்த கால இடைவெளியில் எமது சாரதிகள் அனைவரும் நோயாளர் காவு வண்டி(அம்புலன்ஸ்) பயிற்சியினையும் நிறைவு செய்திருந்தனர். ஆனால், இதுவரை இடமாற்றத்தை நடைமுறைப் படுத்துவதற்கான கட்டளைக் கடிதம் எதுவும் திணைக்களங்களுக்கு அனுப்பப்படவில்லை.

இதனால் 01. 06. 2024 இடமாற்றம் நடைமுறைப்படுத் தப்படுமா? என்ற சந்தேகம் எமக்கு ஏற்பட்டுள்ளது. குறித்த திகதியில் இடமாற்றம் நடைமுறைக்கு வராத சந்தர்ப்பத்தில் 03. 06 .2024 தொடக்கம் 07. 06. 2024 வரை தொடர்ச்சியான தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளோம். குறித்த போராட்டமானது நாளை திங்கட்கிழமை காலை 08 மணியளவில் ஆளுநர் செயலகத்துக்கு அருகாமையில் ஆரம்பிக்கப்பட்டு பேரணியாகச் சென்று மகஜர் கையளிப்புடன் தொடர்ந்து பிரதம செயலாளர் அலுவலகத்துக்கு பேரணியாகச் சென்று மகஜர் கையளிப்பு இடம்பெறும். தொடர்ந்து 07. 06. 2024 வரை தொடர்ச்சியான தொழிற்சங்கப் போராட்டம் இடம்பெறும் என்று வடக்கு மாகாண அரச சாரதிகள் சங்கம் அறிவித்துள்ளது. (எ)

# சம்பிக்க ரணவக்க விபத்து வழக்கில் பொலிஸாரின் நடத்தை சட்டவிரோதம்

## இழப்பீடு வழங்க உயர்நீதிமன்றம் உத்தரவு



கொழும்பு, ஜூன் 02

பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க விபத்து வழக்கில் பொலிஸாரின் நடத்தை சட்டவிரோதம் என்றும் இழப்பீடு வழங்க வேண்டும் என்றும் உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

2016 ஆம் ஆண்டு முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவின் வாகனம் விபத்துக்குள்ளான சம்பவம் தொடர்பில் பொலிஸார் சட்டவிரோதமாகச் செயல்பட்டதாக உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

வாகனச் சாரதியைக் கண்டுபிடிப்பதற்காக பாட்டலி சம்பிக்க ரணவக்கவின் சாரதியின் மனைவி, அவர்களது குழந்தை மற்றும் சாரதியின் மாமியார் ஆகியோரை சட்டவிரோதமாக தடுத்து வைக்கப்பட்டிருந்ததாக உயர் நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது.

கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவின் முன்னாள் பதில் பணிப்பாளர் நெவில் சில்வா மற்றும் பிரதான பொலிஸ் பரிசோதகர் மெத்தானந்த ஆகியோர் சட்டவிரோதமாக கைது செய்தமை மற்றும் சாரதியின் சுதந்திரத்தை கட்டுப்படுத்தியமை தொடர்பில் குற்றஞ் சுமத்தப்பட்டுள்ளனர்.

இரண்டு அதிகாரிகளும் மனுதாரருக்கு தலா 2 இலட்சத்து 50,000 ரூபாய் இழப்பீடு வழங்க உத்தரவிடப்பட்டது.

மேலும், மனுதாரருக்கு இழப்பீடாக அரசு 10 ஆயிரம் ரூபாய் வழங்கவும் உத்தரவிட்டது.

அத்துடன், இரண்டு அதிகாரிகளுக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணையைத் தொடங்குமாறு பொலிஸ் ஆணைக்குழுவுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. (எ)

# ஜனாதிபதி விபத்தில் பலி! நாசவேலை எதுவுமில்லை

## ஈரான் திட்டவட்டமாக அறிவிப்பு

தெஹ்ரான், ஜூன் 02

ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி பலியான ஹெலிகொப்டர் விபத்தின் பின்னணியில் நாசவேலை எதுவும் இல்லை என ஈரான் அரசு திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி, கடந்த மாதம் 19 ஆம் திகதி அண்டை நாடான அஜர்பைஜானில் புதிதாக கட்டப்பட்ட அணையைத் திறந்து வைப்பதற்காக சென்றார்.

பின்னர் அவர் அங்கிருந்து இராணுவ ஹெலிகொப்டரில் ஈரானுக்கு திரும்பிய நிலையில், ஈரானின் கிழக்குப் பகுதியிலுள்ள ஜோல்பா நகருக்கு அருகே மலைப்பகுதியில் ஹெலிகொப்டர் விழுந்து நொறுங்கியது.

இதில் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி, ஈரான் வெளிவிவகார அமைச்சர் உசைன் அமீர் அப்துல்லாஹியன் உட்பட 8 பேர் சம்பவ இடத்திலேயே பலியாகினர்.

ஈரான் - இஸ்ரேல் இடையே மோதல் வலுத்து வரும் நிலையில் இந்தச் சம்பவம் நடந்ததால் இது உண்மையில் விபத்தா? அல்லது திட்டமிட்டு நடத்தப்பட்ட சதித் தாக்குதலா? என்கிற கேள்வி எழுந்தது.

இந்தச் சூழலில் விபத்து தொடர்பாக விசாரணை நடத்தி வரும் ஈரான் ஆயுதப் படைகளின் தலைமை, ஹெலிகொப்டர் விபத்தில் சிக்கியது உண்மைதான் என்றும், தாக்குதலுக்கான எந்த ஆதாரமும் இல்லை என்றும் கடந்த வாரம் தெரிவித்தது.

இந்த நிலையில் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி பலியான ஹெலிகொப்டர் விபத்தின் பின்னணியில் நாசவேலை எதுவும் இல்லை என ஈரான் அரசு திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

ஹெலிகொப்டரில் குண்டு வெடித்து இருக்கலாம் என்று எழுந்த யூகங்களுக்கு ஈரான் அரசு இவ்வாறு பதிலளித்துள்ளது.

இதுதொடர்பாக ஈரான் ஆயுதப் படைகளின் தலைமையகம் வெளியிட்டிருக்கும் அறிக்கையில், "ஹெலிகொப்டரின் சிதைவுகள் மற்றும் மீதமுள்ள பாகங்கள் மற்றும் சம்பவம் நடந்த இடத்தில் சிதைவுகள் சிதறிக் கிடந்த விதம் ஆகியவற்றின் சோதனை முடிவுகளைப் பார்க்கும்போது ஹெலிகொப்டரில் நாசவேலை, குண்டு வெடிப்பு எதுவும் நிகழவில்லை என்பது உறுதியாகியுள்ளது" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# யாழ். நூலகம் எரிக்கப்பட்டு 43 வருடங்கள்: யாழ்ப்பாணத்தில் நேற்று நினைவேந்தல்





யாழ்ப்பாணம், ஜூன் 02

தென்கிழக்காசியாவின் மிகப் பெரிய நூலகமாக திகழ்ந்த யாழ்ப்பாணம் பொது நூலகம் எரிக்கப்பட்டு நேற்றுடன் 43 ஆண்டுகள் நிறைவடைந்ததை நினைவு கூரும் நினைவேந்தல் யாழ். பொது நூலகத்தில் நேற்று இடம்பெற்றது.

யாழ். மாநகர சபையின் ஆணையாளர் ச. கிருஷ்ணேந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்த நினைவேந்தலில் யாழ். பொது நூலகத்தின் பிரதம நூலகர் சிவகரன் அனுசியா, நூலக ஊழியர்கள், மாணவர்கள், பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

நூலகம் எரிக்கப்பட்ட போதும் அதனுடன் தொடர்புடைய வன்முறைகளின்போதும் உயிரிழந்தவர்களுக்கு சுடரேற்றி மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. (எ)

# விபத்தில் இருவர் மரணம்; சாரதிகள் இருவர் கைது

ஹொரணை, ஜூன் 02

ஹொரணை மற்றும் தெலிக்கட தொடங்கொட பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இரு வீதி விபத்துக்களில் பெண்ணொருவரும், ஆண் ஒருவரும் உயிரிழந்தனர்.

இந்த விபத்துக்களில் 76 வயதுடைய வயோதிபப் பெண் ஒருவரும், 38 வயதுடைய ஒருவருமே உயிரிழந்தனர்.

ஹொரணை புளத்சிங்கள வீதியின் பெல்லப்பிடிய சந்திக்கு அருகில் ஹொரணை பகுதியிலிருந்து மத்துகம நோக்கிப் பயணித்த தனியார் பேருந்து ஒன்று பயணிகளை இறக்கிவிட்டு மீண்டும் பயணித்த போது குறித்த பேருந்திலிருந்து இறங்கிய இந்தப் பெண் பேருந்துக்கு முன் பக்கமாக வீதியைக் கடக்க முற்பட்ட போது பேருந்தில் மோதுண்டு விபத்துக்குள்ளானார்.

அதேபோன்று, தொடங்கொட, தெலிகட பிரதேசத்தில் வக்வெல்ல பகுதியிலிருந்து தொடங்கொட நோக்கிப் பயணித்த இராணுவத்துக்குச் சொந்தமான ட்ரக் வாகனம் ஒன்றில் மோட்டார் சைக்கிள் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது. விபத்தில் படுகாயமடைந்த இந்த நபர் கராப்பிட்டிய மருத்துவமனையில் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த விபத்துக்கள் தொடர்பில் பேருந்து மற்றும் ட்ரக் சாரதிகள் கைதுசெய்யப்பட்டனர். (எ)

# ஐ. எஸ். பயங்கரவாதிகளுடன் தொடர்பு; புஸ்பராஜ்கிடம் 72 மணிநேரம் விசாரணை

கொழும்பு, ஜூன் 02

இந்தியாவில் ஐ. எஸ். பயங்கரவாதிகள் என்ற சந்தேகத்தில் கைதான 4 இலங்கையர்களுடன் தொடர்பைப் பேணிய ஜெராட் புஸ்பராஜை 72 மணிநேரம் தடுத்து வைத்து விசாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஐ. எஸ். ஐ. எஸ். பயங்கரவாதிகளுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் இந்தியாவில் வைத்து கைது செய்யப்பட்ட நான்கு இலங்கையர்களுடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணியதாக சந்தேகிக்கப்படும் தெமட்டகொடையைச் சேர்ந்த ஜெராட் புஸ்பராஜ் ஒஸ்மன் ஜெராட் என்பவர் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

இந்த நிலையில், அவரை 72 மணிநேரம் தடுத்து வைத்து விசாரணை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஐ. எஸ். ஐ. எஸ் அமைப்புடன் தொடர்புகளைப் பேணிய சந்தேகத்தில் 4 இலங்கையர்கள் கடந்த 20 ஆம் திகதி இந்தியாவின் அஹமதாபாத் விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டிருந்தனர்.

இவர்களுடன் நெருங்கிய தொடர்புகளை வைத்திருந்ததாகவும் அவர்களுக்கு உதவி வழங்கியதாகவும் கூறப்படும் தெமட்டகொடை பிரதேசத்தைச் சேர்ந்த ஜெராட் புஸ்பராஜ் ஒஸ்மன் ஜெராட் என்பவர் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் மற்றும் பயங்கரவாத புலனாய்வுத் திணைக்களத்தின் கூட்டு நடவடிக்கையின் கீழ் கொழும்பில் வைத்து கைது செய்யப்பட்டார்.

இந்த நிலையில், கைது செய்யப்பட்ட சந்தேக நபரை 72 மணிநேரம் தடுத்து வைத்து விசாரணை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியாவில் கைதான இலங்கையர்கள்

# மதத் தீவிரவாதிகள் இல்லை!

## பாதுகாப்புச் செயலாளர் விளக்கம்

கொழும்பு, ஜூன் 02

**இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் ஐ. எஸ். ஐ. எஸ். பயங்கரவாதிகளுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இலங்கையர்கள் நால்வரும், போதைப் பொருளுக்கு அடிமையானவர்கள் என்றும் அவர்கள் மதத் தீவிரவாதிகள் இல்லை என்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமால் குணரட்ன தெரிவித்துள்ளார்.**

இது குறித்து முழுமையான விசாரணைகள் இடம்பெறுகின்றன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் எங்களின் புலனாய்வுப் பிரிவினர் எச்சரிக்கையுடன் உள்ளனர் எனத் தெரிவித்துள்ள அவர் இந்தியாவுக்குச் சென்ற நான்கு இலங்கையர்கள் குறித்து முழுமையான விசாரணைகள் இடம்பெறுகின்றன. அவர்களின் சகாக்கள் கூட விசாரிக்கப்பட்டுள்ளனர் எனவும் கூறினார்.

தொடரும் விசாரணைகள் குறித்து என்னால் கருத்துத் தெரிவிக்க முடியாது. ஆனால், இந்தியாவில் கைது செய்யப்பட்டுள்ள நால்வரும் மதத் தீவிரவாதிகள் இல்லை. அவர்கள் போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் என்பதை மட்டும் இப்போது கூறமுடியும்.



இந்தியாவிலிருந்து கிடைத்த தகவலின்அடிப்படையில் விசாரணைகள் இடம்பெறுகின்றன.

பாதுகாப்புச் செயலாளர் என்ற அடிப்படையில் உயிர்த்த ஞாயிறுதினத் தாக்குதல் போன்ற சம்பவங்கள் மீண்டும் இடம்பெறாது நாங்கள் எங்கள் பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வுடன் உள்ளோம் என்பதை பொது மக்களுக்கு உறுதியாகத் தெரிவிக்க முடியும்- என்றார். (எ)

# பஸ் கட்டணங்கள் குறைக்கப்படாது!

## தேசிய போக்குவரத்து ஆணைக்குழு

கொழும்பு, ஜூன் 02



டீசல் விலை குறைக்கப்பட்டுள்ள போதிலும் பஸ் கட்டணங்கள் குறைக்கப்படமாட்டாதென தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் தலைவர் சஷி வெல்கம தெரிவித்துள்ளார்.

டீசல் விலை 307 ரூபாவாக குறைந்தால் மாத்திரமே பஸ் கட்டணங்களைக் குறைக்க முடியும். டீசல் விலை 4 சதவீதம் குறைந்தால் மாத்திரமே பஸ் கட்டணங்களைக் குறைக்க முடியும். ஆனால் இம்முறை டீசல் விலை 2. 8 சதவீதமாகவே குறைக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் நடைமுறைப்படுத்தப்பட்ட ஒரு லீற்றர் ஒட்டோ டீசலின் விலை 16 ரூபாயால் குறைக்கப்பட்டுள்ளதுடன் அதன் புதிய விலை 317 ரூபாவாகும்.

எனவே, டீசல் விலை குறைக்கப்பட்டுள்ள போதிலும் பஸ் கட்டணங்கள் குறைக்கப்படமாட்டாதென அவர் தெரிவித்தார். (எ)

# கட்சிகளை அழிப்பது எம் நோக்கம் இல்லை

## என்கிறார் றிசாத் பதியுதீன்



மாளிகைக்காடு, ஜூன் 02

பொது மக்களின் பரிதாபகரமான நிலையக்கருத்திற்கொண்டே அம்பாறை மாவட்டத்தில் நாம் காலடி எடுத்து வைத்தோம் என்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தேசிய தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான றிசாத் பதியுதீன் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்தில் இருந்த அரசியல் வெறுமையை போக்கி பொது மக்களுக்கு விமோசனத்தைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்பதற்காகவே நாம் காலடி எடுத்து வைத்தோமேயொழிய வேறு பாராளுமன்ற உறுப்பினர்களை இல்லாமல் ஆக்குவதற்கோ அல்லது இன்னொரு கட்சியை அழிக்க வேண்டும் என்பதற்கு வந்தவர்கள் நாம் அல்ல என்றும் அவர் குறிப்பிட்டார்.

முன்னாள் உயர்கல்வி பிரதியமைச்சர் மயோன் முஸ்தபாவின் மகள் றிஸ்லி முஸ்தபா அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியுடன் இணைந்து கொள்ளும் நிகழ்வு மாளிகைக்காடு பாவா ரோயலி வரவேற்பு மண்டபத்தில் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. இந்த நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

எதிர்வரும் எந்தத் தேர்தல் ஆயினும் இந்தச் சமூகத்தின் தேவைகளை அறிந்து அதற்கான வேலைத் திட்டங்களை நிறைவேற்றுபவர்களைத் தான் கட்சி வேட்பாளர்களாக நிறுத்தி அவர்களில் யார் வென்றாலும் வென்றவர்கள் பொறுப்புடன் செயல்பட வேண்டும் என்ற உறுதிமொழியுடன் இருக்கும் வேட்பாளர் பட்டியலை கட்சி தயார் செய்ய எண்ணியுள்ளது - என்றார். (எ)

# லயன் வீட்டுக் கூரைகள் 2 மாதத்தில் புனரமைப்பு

மாத்தளை, ஜூன் 02

மாத்தளை, ரத்தோட்டை, பிட்டகந்த தோட்டத்தில் லயன் வீடுகளில் வாழும் மக்களின் கூரைகளைப் புனரமைக்கும் பணிகளை சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் ஊடாக முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கக் கப்பட்டுள்ளது.

இந்தப் புனரமைப்புப் பணிகளை இரண்டு மாத காலப்பகுதிக்குள் நிறைவு செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன் தெரிவித்தார்.

இந்தப் பகுதிகளில் வாழும் மக்களின் மிக நீண்ட கால தேவையாக கருதப்படும் மேற்படி வேலைத் திட்டத்தை முன்



னெடுத்துத் தருமாறு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் முக்கியஸ்தர்கள் விடுத்த வேண்டுகோளுக்கு அமையவே குறித்த வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பின் தங்கிய மற்றும் தோட்டப்புறங்களில் வாழும் மக்களுக்குத் தேவையான நிவாரண நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும், தங்களுக்கு ஆலோசனைகள் வழங்கியுள்ளதாக சுட்டிக்காட்டி அமைச்சர், இதற்கமையவே இந்த வேலைத் திட்டத்தை சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் ஊடாக இரண்டு மாத காலப்பகுதிக்குள் முன்னெடுக்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (எ)

# உள்நாட்டுத் துப்பாக்கியுடன் நுவரெலியாவில் ஒருவர் கைது

நுவரெலியா, ஜூன் 02

நுவரெலியா - அம்பேவல பகுதியிலுள்ள வீடொன்றிலிருந்து உள்ளூரில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் நபரொருவர் வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அம்பேவல 7 ஆம் கட்டைப் பகுதியைச் சேர்ந்த 33 வயதுடைய நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபரின் வீட்டில் துப்பாக்கி இருப்பதாக நுவரெலியா பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கமைய பொலிஸார் வீட்டைச் சுற்றிவளைத்து சோதனை நடவடிக்கையை மேற்கொண்டு வீட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்த துப்பாக்கியை கைப்பற்றினர்.


மேலும், கைது செய்யப்பட்ட சந்தேகநபரை மேலதிக விசாரணையின் பின்னர் நுவரெலியா மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் கூறினர். (எ)

# மலையகத்தில் கடும் பனிமூட்டம் சாரதிகளுக்கு அவசர அறிவித்தல்

ஹற்றன், ஜூன் 02

மலையகத்தில் பல பகுதிகளில் அதிக பனிமூட்டம் சூழ்ந்து காணப்படுகிறது. இதனால் சாரதிகள் அவதானமாக வாகனங்களைச் செலுத்துமாறு பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

நுவரெலியா - ஹற்றன் பிரதான வீதியில் பிலக்பூல் சந்தி, வெண்டிகோனர், பங்களாஹத்த, நானுஓயா, ரதல்ல குறுக்கு வீதி, நுவரெலியா - கண்டி வீதியில் பம்பரக்கலை, டொப்பாஸ், குடாஓயா, லபுக்கலை, கொண்டக்கலை பாதை நுவரெலியா - உடபுசல்லாவ வீதியில் ஆவேலியா, பொரலந்த, கந்தப்பளை, இராகலை பாதை , நுவரெலியா - பதுளை- வீதியில் தர்மபால சந்தி, மாகாஸ்தோட்ட, கட்டுமான, சீத்தாஎலிய, ஹக்கலை மற்றும் பொரகாஸ் உட்பட அம்பேவல, மீப்பிலிமான, பட்டிபொல மற்றும் உலக முடிவு வீதி போன்ற இடங்களில் வழமைக்கு மாறாக அதிகளவான பனி மூட்டம் காணப்படுகின்றது. இத



னால் சாரதிகள் வாகனங்களைச் செலுத்துவதில் பெரும் சிரமங்களைச் சந்தித்து வருகின்றனர்.

நுவரெலியா - ஹற்றன் ஏ 7 பிரதான வீதியில் சென்ற வாகனங்கள் அதிக ஒலி எழுப்பியவாறும், வாகன விளக்குகளை ஒளிரவிட்டும் செல்வதை அவதானிக்க முடிந்தது. மேலும், தொடர்ந்து மழை பெய்வதால் அதிக குளிருடன் கூடிய கால நிலை காணப்படுகிறது.குறிப்பாக சனி மற்றும் ஞாயிறு விடுமுறை நாட்களில் வெளி மாவட்டத்தில் இருந்து பெரும் எண்ணிக்கையிலானவர்கள் நுவரெலியாவுக்கு வாகனங்களில் வருகை தந்துள்ளனர்.

எனவே, குறித்த சாரதிகளுக்கும் எதிரே வரும் வாகனங்கள் தெரியாதபடி கடும் பனிமூட்டம் நிலவுவதால் விபத்துக்களைத் தடுக்கும் நோக்கில் மிகவும் அவதானமாக தங்களது வாகனங்களைச் செலுத்த வேண்டும் எனவும், வாகனங்கள் செலுத்தும் போது தங்களுக்கு உரியத்தான பக்கத்தில் வாகனங்களின் முகப்பு விளக்குகளை ஒளிரச்செய்தவாறு வாகனங்களைச் செலுத்த வேண்டும் எனவும் நுவரெலியா போக்குவரத்து பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டுக்கு எதிராக செயல்பட்டால் அரசாங்கத்திலிருந்து விலகுவோம்

## ஜனாதிபதிக்கு பெரமுன எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 02

**நாட்டுக்கு எதிரான செயல்பாடுகளை முன்னெடுப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தைத் தோற்றுவிக்கவில்லை. தவறான வழியில் ஜனாதிபதி செயல்பட்டால் அரசாங்கத்திலிருந்து விலகுவோம்- இவ்வாறு எச்சரித்துள்ளார் பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம்.**



இவ்வாறான நிலை ஏற்பட்டால் ஜனாதிபதிக்குப் பாராளுமன்றத்தில் ஆதரவு கிடைக்காது. அரசாங்கத்தையும் முன்னெடுத்துச் செல்ல முடியாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

ஜனாதிபதித் தேர்தலையும், பொதுத் தேர்தலையும் இரண்டாண்டுகளுக்கு பிற்போட்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு மீண்டும் வாய்ப்பளிக்க வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் ரங்கே பண்டார குறிப்பிட்ட கருத்தின் பின்னணியில் பொதுஜன பெரமுனவின் முக்கியஸ்தர் பஸில் ராஜபக்ஷ உள்ளார் என அரசியல் தரப்பில் முன்வைக்கப்படும் கருத்துக்கள் முற்றிலும் பொய்யானவை.

தேர்தல்களைப் பிற்போடும் கலாசாரம் ராஜபக்ஷக்களுக்கு கிடையாது. தேர்தல்களை உரிய காலத்துக்கு முன்னர் நடத்தி மக்களாணையை உறுதிப்படுத்தியவர்கள் ராஜபக்ஷக்களே. மக்களாணையை கண்டு ராஜபக்ஷக்கள் ஓடவில்லை. தேர்தல்களை பிற்போடவுமில்லை.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் பொதுத் தேர்தலை நடத்தினால் சிறந்த அரசியல் சூழல் தோற்றம் பெறும் என்று ஜனாதிபதியிடம் வலியுறுத்தினோம். இருப்பினும் அவர் அரசமைப்பின் பிரகாரம் ஜனாதிபதித் தேர்தல் முதலில் நடத்தப்படும் என்று குறிப்பிட்டார். அதற்கும் நாங்கள் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. எந்தத் தேர்தலுக்கும் நாம் தயாராக இருக்கிறோம்.

பொதுஜன பெரமுனவின் சார்பில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட ஒருவரல்ல பலர் தயாராகவுள்ளனர். பலரில் சிறந்த ஒருவரை தெரிவு செய்வோம். எமது வேட்பாளரை இந்த மாதம் அறிவிப்போம். ராஜபக்ஷக்கள் தலைமையிலான அரசாங்கத்தை மக்கள் மீண்டும் தோற்றுவிப்பார்கள் என்ற நம்பிக்கையுள்ளது.- என்றார். (எ)

# ஆறு மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 02

நாட்டில் தற்போது நிலவும் சீரற்ற காலநிலையால் 6 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

கொழும்பு, கண்டி, கேகாலை, குருநாகல், நுவரெலியா மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கே இவ்வாறு மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த எச்சரிக்கையானது நேற்றுச் சனிக்கிழமை காலை 8 மணி முதல் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி வரை அமுலில் இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# சினோபெக் எரிபொருள் விலையிலும் திருத்தம்!

கொழும்பு, ஜூன் 02

சினோபெக் நிறுவனம் தனது எரிபொருட்களின் விலைகளில் திருத்தங்களை மேற்கொண்டுள்ளது.

நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் தனது எரிபொருட்களின் விலைகளில் திருத்தத்தை மேற்கொண்டிருந்த நிலையில் சினோபெக் நிறுவனம் இந்த அறிவிப்பை விடுத்துள்ளது.

இந்த விலைத் திருத்தத்தின் படி, சினோபெக் நிறுவனம் விற்பனை செய்யும் ஒரு லீற்றர் ஒட்டோ டீசலின் விலை சிபெட்கோ மற்றும் லங்கா ஐ.ஓ.சி. விலையை விட 3 ரூபாய் குறைவாகவும், ஏனைய எரிபொருட்களின் விலை சிபெட்கோ மற்றும் ஐ.ஓ.சி. விலைக்கு சமமாகவும் உள்ளது.

ஒக்ரைன் 92 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 13 ரூபாவால் குறைக்கப்படவுள்ள நிலையில் அதன் புதிய விலை 355 ரூபாவாகும்.

அதேபோல், ஒரு லீற்றர் டீசலின் விலை 13 ரூபாவால் குறைக்கப்படவுள்ள நிலையில் அதன் புதிய விலை 314 ரூபாவாகும்.

இதேவேளை, சூப்பர் டீசல் மற்றும் ஒக்ரைன் 95 ரக பெற்றோலின் விலைகளில் எவ்வித மாற்றமும் மேற்கொள்ளப்படவில்லை. (எ)

# தங்கம் விலையில் மாற்றம்

கொழும்பு, ஜூன் 02

நாட்டில் தங்கத்தின் விலையில் மாற்றங்கள் ஏற்பட்டு வரும் நிலையில் நேற்றுச் சனிக்கிழமை 24 கரட் ஒரு கிராம் தங்கம் 24,100 ரூபாயாகவும், 24 கரட் 8 கிராம் (ஒரு பவுண்) தங்கம் ஒரு இலட்சத்து 92,500 ரூபாயாகவும் விற்பனை செய்யப்படுவதாக அகில இலங்கை நகை வியாபாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

மேலும், 22 கரட் ஒரு கிராம் தங்கம் 22,250 ரூபாயாகவும், 22 கரட் 8 கிராம் (ஒரு பவுண்) தங்கம் ஒரு இலட்சத்து 78,000 ரூபாயாகவும் விற்பனை செய்யப்படுவதாக அந்தச் சங்கம் மேலும் தெரிவித்துள்ளது. (எ)

# கல்விசாரா ஊழியர் பிரச்னைக்கு மத்திய நிலையில் தீர்வு தேவை

## சுரேன் ராகவன் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூன்

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர் சங்கங்களுடன் நாளை திங்கட்கிழமை பேச்சுகள் நடத்தப்படவுள்ளன. ஒரு மத்திய நிலையில் இருந்து இதற்குத் தீர்வு காண்பதே எனது எதிர்பார்ப்பாகும் என்று உயர் கல்வி இராஜாங்க அமைச்சர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட அரசாங்கம் சிறந்த தீர்வை வழங்கத் தயாராகவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

"தற்போது பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். இது ஒரு துரதிஷ்டவசமான விடயமாகும். ஏனென்றால் இதன் ஊடாக எதிர்கால சந்ததியினரான மாணவர்களே பாதிக்கப்படுகின்றனர். நாளாந்தம் சுமார் 150 மில்லியன் ரூபாய் நேரடியான நஷ்டம் ஏற்படுகின்றது. இது நிதி ரீதியிலான நஷ்டம் மாத்திரமே. மனித நேரமும் இதன்மூலம் வீணடிக்கப்படுகிறது. எனவே இன்னும் ஒரு மணித்தியாலத்தையேனும் வீணடிக்க அரசாங்கத்துக்குத் தேவையில்லை. பெற்றோர் என்ற வகையில் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும் இதன் பாதிப்புத் தெரியும் என்று நினைக்கிறேன். எனவே அவர்களும் இதனைத் தொடர்ந்து கொண்டு செல்ல விரும்பமாட்டார்கள். இதற்கு சரியான தீர்வை எவ்வாறு எட்டுவது என்பதையே நாம் இப்போது பார்க்க வேண்டும்.



வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளவர்களின் சம்பள உயர்வு உள்ளிட்ட கோரிக்கைகளை எதிர்வரும் ஆறு மாதங்களுக்குள் நிறைவேற்ற சுமார் 1.1 பில்லியன் ரூபாய் தேவைப்படுகின்றது. நான் இதுபற்றி விரிவான அறிக்கையொன்றைத் தருமாறு கேட்டிருக்கின்றேன். மேலும் நாம் எவ்வாறு இந்தப் பிரச்னைக்குத் தீர்வுகாண முடியும் என்பது குறித்து நிதி அமைச்சு மற்றும் திறைசேரியின் உயர் அதிகாரிகளுடனும் கலந்துரையாடியுள்ளேன். வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள தொழிற்சங்கத் தலைவர்களுடன் நான் நாளை கலந்துரையாடவுள்ளேன். ஒரு மத்திய நிலையில் இருந்து இதற்குத் தீர்வு காண்பதே எனது எதிர்பார்ப்பாகும்.- என்றார். (எ)

# உணவல்லா பணவீக்கம் 1.3 சதவீதமாக குறைந்தது

கொழும்பு, ஜூன் 02

கொழும்பு நகர் பிரதேசங்களின் மாதாந்த நுகர்வோர் சுட்டெண்ணுக்கமைய உணவு பணவீக்கம் 0.0 சதவீதத்தால் குறைவடைந்துள்ளதுடன், உணவில்லா பணவீக்கம் 1.3 சதவீதமாக உயர்வடைந்துள்ளது.

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம், கொழும்பு நகர் பிரதேசங்களின் மாதாந்த நுகர்வோர் பணவீக்கத்தை முன்னிலைப்படுத்திக் கடந்த மே மாதத்துக்கான கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணை 2021 - 100 என்ற குறியீட்டு சுட்டெண்ணுடன் வெளியிட்டுள்ளது.

இதற்கமைய ஏப்ரலில் 1. 5 ஆக காணப்பட்ட கொழும்பு நகர் பிரதேசங்களின் நுகர்வு பணவீக்கம் கடந்த மே மாதம் 0. 9 சதவீதமாகக் குறைவடைந்துள்ளது. அத்துடன் உணவு பணவீக்கம் 0.0 சதவீதமளவில் குறைவடைந்துள்ளது. கடந்த ஏப்ரல் மாதம் உணவு பணவீக்கம் 2. 9 சதவீதமாகக் காணப்பட்டது.

கடந்த ஏப்ரல் மாதம் 0.9 சதவீதமாக காணப்பட்ட உணவல்லாத பணவீக்கம் கடந்த மே மாதம் 1. 3 சதவீதமாக உயர்வடைந்துள்ளது. (எ)

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனத்தின் உரிமையாளர் கைது

குருநாகல், ஜூன் 02

குருநாகல் சுரதிஸ்ஸ மாவத்தையில் சட்டவிரோதமான முறையில் இயங்கி வந்த வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனத்தின் உரிமையாளர் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

சவுதி அரேபியா, ஓமான், குவைத் உள்ளிட்ட மத்திய கிழக்கு நாடுகளுக்கு வேலை வாய்ப்புக்கு ஆட்சேர்ப்பு செய்து வருவதும் தெரியவந்துள்ளது.

இந்த வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் நிறுவனத்திலிருந்து போலியான 110 கடவுச்சீட்டுகள், வேலைவாய்ப்பு விண்ணப்பங்கள் மற்றும் பல ஆவணங்களை பொலிஸார் கைப்பற்றினர். (எ)

# மொறட்டுவ பல்கலையிடம் சைட்டம் மருத்துவ நிறுவனம்

கொழும்பு, ஜூன் 02

தெற்காசிய தொழில்நுட்ப மருத்துவ நிறுவனம் (SAITM) மற்றும் நெவில் பெர்னாண்டோ போதனா மருத்துவமனை (NFTH) என்பன மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்திடம் எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் கையளிக்கப்படும் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

2025 ஆம் ஆண்டு ஜனவரியிலிருந்து கல்விப் பணிகளை ஆரம்பிப்பதற்கு முன்னதான திட்டமிடலுக்கென மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்திடம் இவை கையளிக்கப்படவுள்ளன. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
02.06.2024 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், வைகாசி 20

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## தேசிய மக்கள் சக்தி (ஜே.வி.பி) என்ன கூற வருகின்றது?

தேசிய மக்கள் சக்தியின் செல்வாக்கு அதிகரித்து வருவதாக பல கணிப்புக்கள் கூறுகின்றன. இவற்றின் உண்மைத் தன்மை பற்றி உறுதிப் படுத்த முடியாவிட்டாலும் கூட, பிரதான கட்சிகள் மீதான அதிருப்தி, ஜே.வி.பியின் செல்வாக்காக மாறியிருந்தால், அதில் ஆச்சரியப்பட முடியாது.

1965களில், உருவான இடதுசாரி ஆயுத இயக்கமான ஜே.வி.பி, வன்முறையின் மூலம் அதிகாரத்தை கைப்பற்றும் இரண்டு முயற்சிகளை மேற்கொண்டு, இரண்டிலுமே தோல்வியுற்றது. முதல் முயற்சியில் தோல்வியுற்ற போது, அதன் தலைவர் ரோகண விஜயவீர கைது செய்யப் பட்டு சிறையிலடைக்கப்பட்டார் - இரண்டாவது நடவடிக்கையின் போதும், விஜயவீர கைதுசெய்யப்பட்டார் - ஆனால் பின்னர், கொல்லப்பட்டார்.

ஜே.வி.பி அடிப்படையில் ஒரு மார்க்சிய அமைப்பு. பொதுவாக சிகப்பு அரசியல் என்றாலே அவர்கள் அடிப்படையிலேயே அமெரிக்க எதிர்ப்பா ளர்களாக இருப்பது சாதாரணமானது. ஆனால், ஜே.வி.பியின் அரசியல் அணுகுமுறையில் அமெரிக்க எதிர்ப்பை விடவும் இந்திய எதிர்ப்பே மேலோங்கியிருந்தது. இந்திய எதிர்ப்பிற்கும் இடதுசாரித்துவ அரசியலுக் கும் தொடர்பில்லை. அவ்வாறாயின் ஜே.வி.பியின் இந்திய எதிர்ப்பை எவ்வாறு புரிந்துகொள்ள முடியும்?

உண்மையில் ஜே.வி.பியின் இந்திய எதிர்ப்பு, சிங்கள - பௌத்த தேசியவாத மரபிலிருந்து வந்த ஒன்றாகும். இன்று தங்களை ஜே.வி. பின் முன்னைய அரசியல் அடித்தளத்திலிருந்து, அதிக தூரம் விலகிச் சென்றவிட்டதான தோற்றம் ஒன்றையே அநுரகுமார திசாநாயக்க தலை மையிலான தேசிய மக்கள் சக்தி காண்பித்துவருகின்றது. ஒரு தாராள வாத முகத்தையே அநுரகுமார காண்பித்து வருகின்றார். இவ்வா றானதொரு பின்புலத்தில்தான், அண்மையில் அநுரகுமாரவின் இந்திய விஜயமும் இடம்பெற்றிருந்தது.

ஆனாலும் அதிகாரத்தை கைப்பற்றும் முயற்சியில் என்னதான் சித்து விளையாட்டுக்களில் ஈடுபட்டாலும் கூட, சில வேளைகளில் உண்மை முகம் வெளியில் வந்துவிடுவதுண்டு. தேசிய மக்கள் சக்தியின் பிரதான உறுப்பினர்களில் ஒருவரான ஹந்துன்நெத்தி, டெஸ்லா நிறுவனம் மற்றும் எக்ஸ் (முன்னர் டுவிட்டர்) தளத்தின் உரிமையாளரும் உலகின் முதல்தர பணக்காரருமான எலன் மஸ்கின் இலங்கை விஜயத்தை எதிர்த்துப் பேசியிருக்கின்றார். ரணில் விக்கிரமசிங்க பொருளாதார அடியாட்களான எலன் மஸ்க், ஜோர்ஜ் சோரஸ் போன்றவர்களை நாட்டுக்குள் கொண்டுவர முயற்சிக்கிறார் என ஹந்துன்நெத்தி விமர் சித்திருக்கின்றார். இவர்களின் வரவை எதிர்ப்பவர்கள் எதிர்காலத்தில் அமெரிக்க இந்திய முதலீட்டுத் திட்டங்களை எதிர்க்கமாட்டார்கள் என்று எவ்வாறு நம்ப முடியும்?

பொருளாதார அடியாள் என்பது, அமெரிக்க உளவுத்துறையின் மேற் பார்வையின் கீழ் மேற்கொள்ளப்படும் பொருளாதார நகர்வுகளை குறிப்ப தற்கு பயன்படுத்தப்படும் ஒரு சொற்பிரயோகமாகும். அமெரிக்க தேசிய புலனாய்வு அமைப்பின் கீழ், ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றியவரான ஜான் பெர்கின்ஸ் என்பவர், "ஒரு பொருளாதார அடியாளின் வாக்குமூலம்" என்னும் தலைப்பில் நூலொன்றை எழுதியிருக்கின்றார். இந்த நூலில், பெர்கின்ஸ் குறிப்பிட்டிருக்கும் பல்வேறு கருத்துக்கள் மிகவும் சர்ச்சைக் குரியவை. அதாவது, அமெரிக்க நிறுவனங்கள் எவ்வாறு மூன்றாம் உலக நாடுகளை திட்டமிட்டு சுரண்டும் நோக்கில் செயற்படுகின்றன என்பதை தன்னுடைய பணி அனுபவங்களில் வாயிலாக அவர் விவரிக்க முயற்சித்திருக்கின்றார் ஆனால், அதற்கான ஆதாரங்கள் எவையும் தெளிவாக இல்லை.

அடிப்படையில் சதிக்கோட்பாடுகளின் வழியாக விடயங்களை நோக்கு வதாகவே தெரிகின்றது எனினும் அமெரிக்க எதிர்ப்பாளர்கள் அந்த நூலை தங்களுக்கான உசாத்துணையாக பயன்படுத்துகின்றனர். "பொருளாதார அடியாள்" என்னும் கருத்து, இந்த நூலின் பின்னணி யில்தான் பிரபலமான பேசுபொருளானது. அந்தச் சொல் கொண்டே, எலன் மஸ்க்கை, தேசிய மக்கள் சக்தி எதிர்த்து பேசியிருக்கின்றது. இது தேசிய மக்கள் சக்தியின் அரசியல் மனோநிலையை தெளிவாக காண்பிக் கின்றது. அவர்களுக்கும் இருக்கும் அமெரிக்க இந்திய எதிர்ப்பு எப்போது வேண்டுமனாலும் வெளிப்படும்.

## வாகன வருமான வரிப்பத்திரம் வழங்கும் செயல்பாடு ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜுன் 02

மேல் மாகாணம் தவிர்ந்த ஏனைய மாகாணங்களுக்கு இடையிலான வாகன வருமான வரிப் பத்திரம் வழங்கும் செயல்பாடுகள் 03. 06. 2024 ஆம் திகதி முதல் நாடளாவிய ரீதியில் ஆரம்பிக்கப் படுகின்றது.

வாகன வருமான வரிப் பத்திரமானது ஏற்கனவே உள்ள நடைமுறைகளுக் குட்பட்டு நாடளாவிய ரீதி யில் மேல் மாகாணம் தவிர்ந்த ஏனைய அனைத்து மாகாணங்களுக்குமான வாகன வருமானவரிப் பத்தி ரம் வழங்கும் செயல்பாடா னது எந்தவொரு பிரதேச செயலகங்களது கரும பீடங்களிலும் பெற்றுக்கொள் ளக் கூடியதாக காணப்படும்.

மேலும், இதுவரை கால மும் வாகன வருமான வரிப் பத்திரமானது இணையவழி மூலம் இலகு ரக வாகனங்க ளுக்கு மட்டுமே பெற்றுக் கொள்ளக் கூடியதாக காணப் பட்ட போதிலும் இனிவரும் காலங்களில் இணையவழி மூலம் Ambulance, Hearse, lorry Trailer, Motor Lorry, Private Coaches & Special Purpose Vehicles போன்ற வாகனங்க ளுக்கும் பெற்றுக்கொள்ளக் கூடியதாக காணப்படும். (இணைய வழி வாகன வரு மானவரி பெற்றுக்கொள்வ தற்கான இணைப்பு - https://web.erl2.gov.lk/) என்று வடக்கு மாகாண மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள ஆணையாளர் திருமதி சி. சுஜீவா அறிவித்துள்ளார். (எ)

## வெளிநாட்டு சிகரெட்களுடன் வர்த்தகர் கைது

கொழும்பு, ஜுன் 02

சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்ட 38 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் பெறுமதியான வெளி நாட்டு சிகரெட்களுடன் வர்த்தகர் ஒருவர் கட்டு நாயக்கா விமான நிலை யத்தில் வைத்து நேற்று முன் தினம் இரவு கைது செய் யப்பட்டுள்ளார்.

நீர்கொழும்பு பிரதேசத் தைச் சேர்ந்த 38 வயதுடைய வர்த்தகரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் டுபாயிலிருந்து விமானம் மூலம் கட்டு நாயக்கா விமான நிலை யத்தை வந்தடைந்துள்ளார்.

இதன்போது, விமான நிலைய அதிகாரிகளால் மேற் கொள்ளப்பட்ட சோதனை யில் இவர் கொண்டுவந்த பயணப்பொதியிலிருந்து 38, 400 சிகரெட்கள் அடங்கிய 192 சிகரெட் பெட்டிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதனையடுத்து, சந்தேக நபரான வர்த்தகர் கட்டு நாயக்கா விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந் தேகநபர் பொலிஸ் பிணை யில் விடுவிக்கப்பட்டுள்ளது டன், எதிர்வரும் 5 ஆம் திகதி நீர்கொழும்பு நீதிமன்றில் முன்னிலையாகுமாறு கட்டு நாயக்கா பொலிஸார் தெரி வித்தனர். (எ)

## கூரிய ஆயுதத்தால் தாக்கி குடும்பஸ்தர் படுகாயம்!

### யாழில் நேற்று அதிகாலை சம்பவம்

யாழ்ப்பாணம், ஜுன் 02

வடமராட்சி, உடுப்பிட்டி யில் கூரிய ஆயுதத்தால் தாக் கப்பட்டு படுகாயமடைந்த நிலையில் ஒருவர் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள் ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுச் சனிக்கிழமை அதிகாலை இடம்பெற்றது.

உடுப்பிட்டியைச் சேர்ந்த இறைச்சிக் கோழி வியாபா ரம் செய்யும் 42 வயதுடைய வரே இவ்வாறு தாக்குதலில் படுகாயமடைந்துள்ளார்.

இவர் வியாபாரம் முடித்து விட்டு அதிகாலையில் தனது வீட்டுக்குச் சென்றபோது வழியில் பதுங்கியிருந்த இனந்தெரியாத நபர்களால் தாக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில், இவர் சத்தம் கேட்ட போது அவ ரது மனைவி வீட்டுக்கு வெளியே ஓடி வந்து பார்த் துள்ளார். அப்போது அவ ரது மனைவியையும் தாக்கி அவரிடமிருந்த தங்க நகை களையும் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

இச்சம்பவத்தில் படுகாய மடைந்த நபர் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப் பட்டுள்ளதுடன் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலி ஸார் மேற்கொண்டு வருகின் றனர். (எ)

## நாட்டுத் துப்பாக்கி வெடித்து துணுக்காய் இளைஞன் பலி!

முல்லைத்தீவு, ஜுன் 02

முல்லைத்தீவு மாவட்டம் மல்லாவி பொலிஸ் பிரிவுக் குட்பட்ட துணுக்காய் கல்விளான் பகுதியில் நேற்று முன் தினம் இரவு உடைமை யில் வைத்திருந்த நாட்டுத் துவக்கு வெடித்ததில் சம்பவ இடத்திலேயே இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்

குறித்த சம்பவம் இரவு 07 மணியளவில் இடம்பெற்றுள் ளது

சம்பவத்தில் கண்ணையா அன்பழகன் (வயது-19 ) என்ற இளைஞரே உயிரிழந்த வராவார்

உயிரிழந்தவரின் சடலம் மல்லாவி ஆதார வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள் ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மல்லாவி பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (அ)


## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுபாஷ் சந்திர போஸ்

# அறிவியல்: ஒரே நேரத்தில் வானில் தெரியப்போகும் 6 கோள்கள்!



நிலவோடு சேர்த்து சூரிய குடும்பத்தைச் சேர்ந்த 6 கோள்கள் வருகின்ற ஜூன் 3 மற்றும் 4 ஆகிய தேதிகளில் வானில் தெரியும் என்றும், அவற்றை யார் வேண்டுமானாலும் நேரடியாகப் பார்க்க முடியும் என்றும் தமிழ்நாடு அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மையத்தின் சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

நாம் வாழும் இந்த பூமி எவ்வளவு ஆச்சரியங்களையும், அதிசயத்தையும் வைத்திருக்கிறதோ, அதே அளவு விண்வெளியும் பெரும் ரகசியங்களைத் தன்னுள்ளே வைத்துள்ளது.

அந்த ஆச்சரியமூட்டும் அதிசயங்களை, அவ்வப்போது ஏதாவது ஒரு நிகழ்வின் மூலம் நமக்கு காட்டிக்கொண்டே இருக்கிறது.

அப்படி வருகின்ற ஜூன் 3, 4 ஆகிய இரண்டு நாட்களில் அதிகாலை நேரத்தில் சூரியன் உதிப்பதற்கு முன்பு நிலவோடு சேர்த்து சூரிய குடும்பத்தைச் சேர்ந்த புதன், வியாழன், சனி, நெப்டியூன், செவ்வாய், யுரேனஸ் ஆகிய 6 கோள்கள் வானத்தில் தோன்றும் என்று தமிழ்நாடு அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மையம் தெரிவித்துள்ளது.

எதனால் இந்த நிகழ்வு நடக்கிறது, இது ஒரு அரிய நிகழ்வா என்ற கேள்விகளை தமிழ்நாடு அறிவியல் மற்றும் தொழிநுட்ப மையத்தின் இயக்குநர் லெனின் தமிழ்க் கோவனிடம் முன்வைத்தோம்.

இந்நிகழ்வு குறித்து விளக்கிய அவர், "இது அவ்வப் போது நடக்கும் ஒரு நிகழ்வுதான். சுற்றுப்பாதையில் சுற்றி வரும் 8 கோள்களும் தொடர்ந்து சுற்றிக்கொண்டிருக்கும் நிலையில், அதன் சுழற்சியின் ஒரு கட்டத்தில் அனைத்துக் கோள்களும் ஒரே நேர்கோட்டில் சந்தித்துக் கொள்ளும் நிகழ்வே இது," என்றார்.

"இப்படியான நிகழ்வின்போது குறிப்பிட்ட எல்லா கோள்களையும் நேரடியாகப் பார்க்கும் வாய்ப்பு நமக்கு அமையும்."

விஞ்ஞானி த.வி.வெங்கடேஸ்வரன் கூறுகையில், "ஒரு மைதானத்தில் நடக்கும் ஓட்டப் பந்தயத்தை நடுவில் இருந்து நீங்கள் பார்க்கும்போது ஓட்டப்பந்தய வீரர்கள் ஒவ்வொருவரையும் அவர்கள் ஓடிவரும் வேகத்திற்கு ஏற்ப வெவ்வேறு திசைகளில் பார்க்க முடியும். ஆனால் ஏதோவொரு புள்ளியில் ஒரு சிலர் மட்டும் ஒரே நேர்க்கோட்டில் தெரிவார்கள். அதுபோன்ற நிகழ்வுதான் இதுவும்," என்று விளக்குகிறார்.

**எப்போது இந்த நிகழ்வு நடைபெறுகிறது?**

ஜூன் 3 மற்றும் 4ஆம் தேதி நடக்கவுள்ள இந்த நிகழ்வின்போது, நிலா உள்பட மேற்கூறிய 6 கோள்களும் சூரிய உதயத்திற்கு முன்பு வானில் தெரிய உள்ளதாக தமிழ்நாடு அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மையம் தெரிவித்துள்ளது.

மேலும், "இவை ஜூன் 1ஆம் தேதியில் தொடங்கி 4ஆம் தேதி வரை, வானில் கிழக்கு திசையில், சூரியன் உதிப்பதற்கு முன்பு உலகில் உள்ள அனைத்துப் பகுதி மக்களின் கண்களுக்கும் தெரியும்" என்கிறார் த.வி.வெங்கடேஸ்வரன்.

என்னதான் நிலா மற்றும் 6 கோள்களும் ஒரே நேர்கோட்டில் வந்து காட்சியளித்தாலும், எல்லா கோள்களையும் மனிதர்களால் நேரடியாகப் பார்த்துவிட முடியாது. சூரிய உதயத்தைப் பொறுத்தே அது சாத்தியப்படும் என்கிறார் லெனின் தமிழ்க்கோவன்.

'அடிவானத்தில் தோன்றும் இந்தக் கோள்களை மேடான இடத்தில் நின்று பார்க்கலாம். ஆனால், தற்போது பருவகாலம் என்பதாலும் இவற்றைப் பார்ப்பதில் இடையூறு ஏற்பட வாய்ப்புள்ளதாக" கூறுகிறார் அவர்.

சூரிய ஒளியின் வெளிச்சம் வந்துவிட்டாலும் இந்தக் கோள்கள் தெரியாமல் போக வாய்ப்புள்ளதாகவும் கூறுகிறார் அவர்.

மேலும், இவற்றில் "புதன் கோள் சூரியனுடன் சுற்றிக் கொண்டிருக்கும் என்பதால் அதைக் கண்டுபிடிப்பது கடினம். நெப்டியூன் மற்றும் யுரேனஸ் ஆகிய கோள்கள் 300 கோடி கி.மீ. தொலைவில் இருப்பதால், அவற்றை மிகப்பெரிய தொலைநோக்கிகள் கொண்டு மட்டுமே பார்க்க முடியும். சாதாரணமாக வெறும் கண்ணுக்கோ அல்லது பைனாகுலருக்கோ தெரியாது" என்கிறார் அவர்.

இதே கருத்தை முன்வைத்த வெங்கடேஸ்வரன், "வியாழன், புதன், செவ்வாய், சனி ஆகிய கோள்களை வெறுங் கண்ணால் பார்க்க முடியும்" என்கிறார்.

**எங்கிருந்து இந்த கோள்களைப் பார்க்கலாம்?**

மேற்கூறிய கோள்கள் கண்ணுக்குத் தெரிவது சூரிய வெளிச்சம் மற்றும் மேகங்களின் நிலையைப் பொறுத்து மாறலாம்.

இருப்பினும், இவற்றைப் பார்க்க விரும்புபவர்கள் குடியிருப்புப் பகுதிகளில் இருந்துகொண்டு இவற்றைப் பார்ப்பது கடினம். மாறாக கடற்கரை, உயரமான மலைகள் அல்லது எந்த கட்டடமும் அருகில் இல்லாத பெரிய கட்டடங்களில் இருந்து இவற்றை நேரடியாகப் பார்க்கலாம் என்கிறார் த.வி.வெங்கடேஸ்வரன்.

## இந்தவார ராசிபலன் 02.06.2024 - 08.06.2024

ஞாயிற்றுக்கிழமை
குரோதி வருடம் - வைகாசி 13
நல்ல நேரம்: 7.30 - 08.30
ராகு காலம் : 4.30 - 06.00
திதி : திரிதியை

**மேஷம்** [ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

அஸ்வினி -- இந்த வாரம் பொருளாதார நிலை சீராகி மகிழ்ச்சி ஏற்பட்டாலும், தேவையற்ற செலவுகள் ஏற்படும் வழக்குகளில் நிச்சயம் வெற்றி கிடைக்கும். விஐபி களின் ஏற்படும் நட்பின் மூலம் ஆதாயங்கள் பெறும் நிலை உருவாகும். உங்கள் வாழ்க்கையில் நீங்கள் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியிலும் வெற்றியின் மகிழ்ச்சியை அனுபவிப்பீர்கள். உங்கள் குடும்பத்தில் நடக்கும் சுபகாரிய நிகழ்ச்சிகள் மூலம் மகிழ்ச்சி பொங்கும்.

**ரிஷபம்** [ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

இந்த வாரம் சிலருக்கு அனைத்து வசதிகளுடன் கூடிய அழகிய இல்லம் அமையும். திடீர் பயணங்களால் அலைச்சல்கள் அதிகரிக்கும். மேலதிகாரிகளை அனுசரித்துச் செல்வது, உங்கள் பணி உயர்வு மற்றும் முன்னேற்றத்திற்கு நல்லது. அனைத்து முயற்சிகளிலும் எப்பாடுபட்டாவது வெற்றி அடைவீர்கள். சிலருக்குப் புதிய பதவிகள் தேடிவரும். அந்தஸ்து உயரும். விவசாயிகளுக்கு ஆதாயம் கிட்டும். மாணவர்களுக்குத் தேர்வு முடிவுகள் மகிழ்ச்சி தருவதாக இருக்கும். ஓய்வெடுத்து, அதேபோல் இன்பமும் துன்பமும் கலந்தது தான் வாழ்க்கை.

**மிதுனம்** [ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

இந்த வாரம் இல்லத்தில் மகிழ்ச்சி பொங்கும். வாழ்க்கையில் முன்னேற்றங்கள் மற்றும் கௌரவத்தையும் அடைவீர்கள். தொலை தூரப் பயணங்களின் நன்மை ஏற்படும். சிலருக்கு வெற்றிகரமான தொழில் முன்னேற்றங்கள் ஏற்படும். எதிர்பாராத தனவரவு உண்டு. தொழிலில் விஸ்தரிப்பு நடவடிக்கைகள் மூலம் வருமான வாய்ப்புகள் பெருகும். தந்தைவழி உறவுகளால் வீண் தொல்லைகள் ஏற்படலாம். எச்சரிக்கையோடு இருத்தல் அவசியம். வியாபாரத்தில் புதிய யுக்திகளை புகுத்தி, இலாபத்தை அதிகரிப்பீர்கள்.

**கடகம்** [ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

இந்த வாரம் புதிய வாகனம் வாங்கும் யோகம் ஏற்படும். எதிரிகள் கை ஓங்கும் ஆதலால், எதற்கும், அவர்களிடம் இருந்து விலகி இருப்பது நல்லது. அரசு அலுவலகத்தில் உங்கள் நற்குணங்கள் அனைவரின் பாராட்டையும் பெறும். மாணவர்களுக்கு கல்வியில் தேர்ச்சி உண்டாகும். செலவுகளைக் குறைத்து பணத்தை சேமிப்பது, பிற்காலத்தில் உதவும். வியாபாரத்தில் போட்டிகளைச் சமாளிக்க கடினமாக உழைக்க வேண்டிய நிலை ஏற்படும்.

**சிம்மம்** [ மகம், பூரம், உத்திரம் 1 ]

குடும்பத்தில் உள்ளவர்களை அனுசரித்து சென்றால் அவர்களின் உதவிகள் கேட்காமலே கிடைக்கும். ஆடம்பரச் செலவுகளை குறைத்தால் கடன் சிக்கல்களில் இருந்து மீளலாம். மாணவர்கள் தங்கள் கல்வியில் முழு கவனம் செலுத்தினால் மட்டுமே அதிக மதிப்பெண்கள் பெற இயலும். வேலையில் சிரத்தையும், கடின உழைப்பு தொழிலில் நல்ல முன்னேற்றங்களைத் தரும். அப்போதுதான் உங்கள்

**கன்னி** [ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

இந்த வாரம் குடும்ப சந்தோஷம் குறைவில்லாது நிறைந்திருக்கும். கணவன் மனைவி இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். ஞானிகள் மற்றும் பெரியோர்களின் ஆசியால் நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும் வெற்றி அடையும். பக்கத்து வீட்டார், நண்பர்கள் மற்றும் சகோதரரால் உங்கள் பிரச்சனைகளுக்கு ஒரு முடிவு வரும். பிள்ளைப்பேறு, தொழில் வாய்ப்புகள், லாட்டரி யோகங்கள், புண்ணியத்தல தரிசனங்கள் ஆகியவை ஏற்படும். விஷயத்தைப் பொறுத்தவரை திருப்திகரமான வாரமாக இருக்கும்.

**துலாம்** [ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

இந்த வாரம் எதிர்பாராத தனவரவு ஏற்றம் காண்பீர்கள். அரசு வகையில் எதிர்பார்த்த ஆதாயம் மற்றும் உதவிகளால் தொழிலில் முன்னேற்றம் ஏற்படும். உங்கள் திறமை மிக்க செயல்களால் வெற்றிகளும், பாராட்டுதல்களும் குவியும். உங்கள் வாழ்க்கையில் மனைவி மூலமாக முன்னேற்றத்துக்கான நல்ல ஆலோசனைகள் கிடைக்கும். இல்லத்தில் மகிழ்ச்சி பொங்க, மங்கல காரியங்கள் ஈடேறும். அரசு பணி புரிபவர்களுக்கு அதிகாரிகளின்

**விருச்சிகம்** [ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

இந்த வாரம் நீங்கள் முக்கிய விருந்துகளில் கலந்து கொண்டு நண்பர்களுடன் மகிழ்ச்சியுடன் பொழுதை கழிப்பீர்கள். எல்லா வகையிலும் சிறப்பான பலன்களை எதிர்பார்க்கலாம் அரசியல்வாதிகளிடம் மற்றும் அரசாங்கத்திடமும் எதிர்பார்த்த அனுகூலங்கள் அனைத்தும் தாமதமின்றி கிடைக்கும். தொழில் சம்பந்தமான முயற்சிகள் வெற்றியை நோக்கிச் செல்லும். நண்பர்கள் விரும்பி வந்து உதவி செய்வார்கள்.

**தனுசு** [ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

இந்த வாரம் உங்களுக்கு நல்ல பல கருத்துக்களை கேட்பதின் மூலம் ஞான தன்மை அதிகரிக்கும். பக்தி மார்க்கத்தில் செல்ல மனைவியின் பூரண ஒத்துழைப்பு கிடைக்கும். தூர தேசங்களில் இருந்து எதிர்பார்த்த நல்ல தகவல்கள் வரும். சுபகாரியச் செலவுகள் ஏற்படும். புதிய முயற்சிகள் பண வருமானம் அதிகரிக்கும். வாடிக்கையாளரிடம் நட்புப் பாராட்டும் வியாபாரிகளுக்கு அதிக இலாபம் கிடைக்கும். அதிகாரிகள் நட்பால் ஆதாயம் பெறுவீர்கள்.

**மகரம்** [ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

இந்த வாரம் நீங்கள் தொழில் விஷயமாக தீட்டிய முக்கியத் திட்டங்கள் நிறைவேற எடுத்த முயற்சிகள் யாவும் அரசு உதவியுடன் அனுகூலமாக முடியும். தொடர் முயற்சி காரணமாக, வியாபாரிகளுக்கு வங்கிக் கடன்கள் தாமதமின்றி உடனடியாக கிடைக்கும். குழந்தைகளின் ஆரோக்கியத்தில் மிகுந்த கவனம் தேவை. வியாபாரிகள் தங்கள் வாக்கால் வாடிக்கையாளர்களை கவர்ந்து இலாபத்தைப் பெருக்குவர். பிரிவும், பகையும் ஏற்படலாம்.

**கும்பம்** [ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

இந்த வாரம் உங்களுக்குப் பணிச்சுமை காரணமாக நேரத்துக்கு உணவருந்த முடியாத நிலை ஏற்படும். மது, மாமிசம் அருந்துபவர்களுக்கு அஜீரண தொல்லைகள் எழலாம். உறவினர் வருகையால் விருந்து, மகிழ்ச்சி கொண்டாட்டம், ஆரவாரம், என வீட்டில் மகிழ்ச்சி பொங்கும். தொலை தூரச் சுபச்செய்திகள் எதிர்பார்க்கலாம். வாழ்க்கையில் நற்பலன்களை எதிர்பார்க்கலாம் இந்த நாட்களில் உங்கள் திறமை மிக்க செயல்பாடுகளால் அனைவரின் பாராட்டையும் பெறுவீர்கள். பதவி உயர்வும் எதிர்பார்க்கலாம்.

**மீனம்** [ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

இந்த வாரம் வீட்டில் சுப நிகழ்ச்சிகள் களைகட்டும். அதன் காரணமாக சந்தோஷம் பொங்கும். ஏமாற்றத்தை தவிர்க்க கூட்டாளிகளிடம் எச்சரிக்கையாக இருப்பது நல்லது. மனைவியுடன் கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்பு இருப்பதால் சமாதானமாகப் போவது சிறப்பு. போட்டி தேர்வுகளில் எதிர்பார்த்த வெற்றி கிட்டும் பெண்களால் இலாபம் ஏற்படும். பொருளாதார நிலையைப் பொறுத்தவரை சிரமமான காலம். அதன் காரணமாக சேமிப்புகளில் இருக்கும் பணத்தில் கை வைக்க வேண்டிய நிலை ஏற்படும். பழைய பொருட்களை விற்பனை செய்யும் வியாபாரிகள் நல்ல வருமானத்தை அடைவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘யாழ்ப்பாணத்தில் நூலகம் ஒன்று எரிந்திருக்கிறது’

ஜே. ஆர். ஜயவர்த்தன

மாலி




‘இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த காட்டுமிராண்டிகளும் வெட்கப்படும்படியான’ அச் செயலின் நாற்பத்து மூன்று ஆண்டுகள்.

நேற்றைய தினம், ஜூன் முதலாம் திகதி, யாழ்ப்பாண பொது நூலகம் எரிக்கப்பட்ட நாள். யாழ்ப்பாணத்தில், மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தல்களுக்கான கடைசி பிரச்சாரக் கூட்டத்தில், முதல் நாள் மே 31ஆம் திகதி ஏற்படுத்தப்பட்ட அசம்பாவிதங்களையடுத்து யாழ்ப்பாண நகரில் ஆரம்பித்த தீ வைப்புச் சம்பவங்களில், மறுநாள் ஜூன் முதலாம் திகதி இரவு ‘ஈழநாடு’ அலுவலகமும் பொது நூலகமும் தீவைக்கப்பட்டன. அச்சுயத்திரங்கள் ஈழநாடு அலுவலகத்தில் எரிந்து கருகியபோது, அரும் பொக்கிஷங்களுமாக, 95 ஆயிரத்துக்கும் மேற்பட்ட நூல்கள் பொது நூலகத்தில் எரித்து சாம்பராக்கப்பட்டன.

வண்ணார்பண்ணை நாச்சிமார் கோவிலடியில் நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் நான்கு பொலிஸார் சுடப்பட்டதில் இக் களேபரம் தொடங்கியது. இவர்களில் இருவர் மரணமடைந்திருந்தார்கள். அன்று இரவு, நகரில் பல கடைகளுடன், யாழ்ப்பாண வைத்தியசாலையின் தாதியர் பயிற்சிக் கல்லூரிக்கு முன்பாக பருத்தித்துறை வீதியில், கூட்டணியின் யாழ்ப்பாணம் எம். பி., வெ. யோகேஸ்வரனின் இல்லமும், யாழ். பிரதான வீதியில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைக் காரியாலயமும் முற்றாக தீவைக்கப்பட்டன.

மே 4ஆம் திகதி நடைபெற்ற தேர்தல் கடமைகளுக்கான தேர்தல் உத்தியோகத்தர்கள் என்ற போர்வையில், தென்னிலங்கையிலிருந்து 39 பஸ் வண்டிகளில் கொண்டுவரப்பட்ட காடையர்களும் பொலிஸாருமாக இந் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். ஜே. ஆர். ஜயவர்த்தன அரசாங்கத்தின் சிரேஷ்ட அமைச்சர்களான சிறில் மத்தியூவும், காமினி திஸாநாயக்கவும் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து, இந் நடவடிக்கைகளை கண்காணித்தனர். ஜனாதிபதி ஜயவர்த்தன இவர்களை அனுப்பிவைத்திருந்தார். அமைச்சர்கள் லலித் அத்துலத்முதலி, விமலா கன்னங்கரா ஆகியோரும் வந்திருந்தனர். யாழ் நூலக எரிப்பில், சிறில் மத்தியூவுடன் காமினி திஸாநாயக்க, லலித் அத்துலத்முதலி ஆகியோரை ஜனாதிபதி பிரேமதாஸ பின்னர் நேரடியாகவே குற்றம் சுமத்தினார். நூலகம் எரிக்கப்பட்ட வேளையில் பொலிஸ் மா அதிபருங்கூட யாழ்ப்பாணத்திலிருந்தார்.

ஒரு வாரத்துக்கும் மேலாக யாழ்ப்பாணத்தில் இச் சம்பவங்கள் தொடர்ந்தன.

தேர்தல் அலுவல்களில் திருகோணமலையில் இருந்த எதிர்க்கட்சித் தலைவர் அ. அமிர்தலிங்கம், 3ஆம் திகதி யாழ்ப்பாணம் வந்தபோது, அன்று நள்ளிரவின் பின்னர் அவரும் நல்லூர் எம். பி., மு. சிவசிதம்பரம், மானிப்பாய் எம். பி., வி. தர்மலிங்கம், சாவகச்சேரி எம். பி., வி. என். நவரத்தினம் ஆகியோரும் கைதுசெய்யப்பட்டு, பலாலி இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டனர். பின்னர், மறுநாள் தேர்தல் தினம் 4ஆம் திகதி காலையில், இவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

மே 9ஆம் திகதி, யாழ்ப்பாணத்தின் இச் சம்பவங்கள் தொடர்பில் அமிர்தலிங்கம் பாராளுமன்றத்தில் வழக்குரைத்தார். அமிர்தலிங்கத்தின் மிகச் சிறந்த பாராளுமன்ற விவாதங்களில் ஒன்று இது. இரண்டாயிரம் ஆண்டுக்கு முன்னரான காட்டுமிராண்டிகளை அவர்தான் அங்கு காண்பித்தார். அமிர்தலிங்கம் பேச எழுந்தவுடனேயே, ஒழுங்குப் பிரச்னை ஒன்றை எழுப்புவதாக எழுந்த பாணந்துறை எம். பி. டாக்டர் நெவில் பெர்னான்டோ, ‘கொலைகாரர்கள் இச் சபையில் பேசமுடியுமா?’ என்றார்.

‘விசர் நாய்களைக் கூண்டில் அடையுங்கள்’ என்று, மறுவிநாடி அதிர்ந்த அமிர்தலிங்கத்தின் கர்ஜனையில், நெவில் பெர்னான்டோ தனது கூற்றை வாபஸ்பெற வைத்தார் சபாநாயகர்.

அமைச்சர்கள் சிறில் மத்தியூ, காமினி திஸாநாயக்க ஆகியோர்மீது யாழ்ப்பாணத்தின் இச் சம்பவங்கள் தொடர்பில் சபையில் நேரடியாகவே குற்றம் சுமத்தினார் அமிர்தலிங்கம். சபையில் ஏற்பட்ட பலத்த அமளியில், இதுதொடர்பில் அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணைக்கு ஏற்கனவே தீர்மானித்ததில், இந்த இரு அமைச்சர்களையும் இச் சபையின் ‘தரையில் உருட்டுவோம்’ என்றார்.

ஏனைய எதிர்க்கட்சிகளான சிறிலங்கா சுதந்திர கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவற்றுடன் இணைந்து, அரசாங்கத்துக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணைக்கு சபாநாயகரிடம் முன்னறிவித்தல் கொடுக்கப்பட்டது. அப்போது, அரசாங்கம் எதிர் கொண்ட இந்த நெருக்கடியை தவிர்க்கும் ‘கிழ நரி’யின் தந்தரமாகவே, அரசாங்கத்தின் 32 எம். பி.க்கள் ஒப்பமிட்ட, எதிர்க்கட்சித் தலைவர் அமிர்தலிங்கத்துக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டது. 1981 ஜனவரியில் மதுரை தமிழாராய்ச்சி மாநாட்டுக்கு சென்றிருந்த வேளையில், இந்திய பத்திரிகைகளான ‘இந்தியன் எக்ஸ்பிரஸ்’, ‘தினத்தந்தி’ ஆகியவற்றுக்கு அளித்த பேட்டியில் அமிர்தலிங்கம் தெரிவித்திருந்த கருத்துக்கள் தொடர்பில், அவர்மீது இந்த நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டுவரப்பட்டது.

இரண்டு நம்பிக்கையில்லா பிரேரணைகளும் சபை ஒழுங்கு பத்திரத்தில் விவாதத்துக்கான திகதி குறிப்பிடப்படாமலேயே இடம்பெற்றிருந்தபோது, எதிர்க்கட்சித் தலைவருக்கு எதிரான பிரேரணை முதலில் விவாதத்துக்கு வந்தது. டாக்டர் நெவில் பெர்னான்டோ பிரேரணையை முன்மொழிந்தார்.

ஒரே தினத்திலேயே இரண்டு நம்பிக்கையில்லா பிரேரணைகளுக்குமான முன்னறிவித்தல் சபாநாயகரிடம் கொடுக்கப்பட்டிருந்தாலும், எதிர்க்கட்சித் தலைவருக்கு எதிரான பிரேரணை முன்னறிவித்தலை தாம் முதலில் பெற்றதாக தெரிவித்து, சபாநாயகர் பாக்கீர் மார்க்கார் அதனை நியாயப்படுத்தினார்.

யாழ்ப்பாண நூலகமும், ஈழநாடு நிறுவனமும் எரிக்கப்பட்ட மூன்று வாரங்களில் இலங்கையில் சர்வசன வாக்குரிமையின் ஐம்பது ஆண்டுகள் நிறைவையொட்டிய பொதுநல நாடுகள் அமைப்பின் இரண்டு நாள் கருத்தரங்கு கொழும்பில் பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இவ் வேளையில் அமிர்தலிங்கம் அமெரிக்கா, இங்கிலாந்து, ஜேர்மனி, இந்தியா ஆகிய நாடுகளுக்கு பயணம் மேற்கொண்டிருந்தார். யாழ். நூலக எரிப்பு தொடர்பில் இங்கிலாந்தில் அமிர்தலிங்கத்தின் பிரச்சாரம், கொழும்பில் ஜயவர்த்தனவுக்கு தலையிடியானது.

யாழ்ப்பாண சம்பவங்களுக்கு கண்டனம் தெரிவித்து, தமிழர் விடுதலைக் கூட்டணி மாநாட்டைப் பகிஷ்கரிக்க தீர்மானித்திருந்தது. ஆனாலும், 25 நாடுகளின் 115 பிரதிநிதிகள் இம் மாநாட்டில் கலந்துகொண்டபோது, கொழும்பில் மு. சிவசிதம்பரமும் வி. என். நவரத்தினமும் விரிவான பிரசுரங்களுடன், இவர்களிடையே தீவிர பிரச்சாரங்களில் ஈடுபட்டனர்.

ஜூன் 25ஆம் திகதி, இந்த மாநாட்டைத் தொடக்கிவைத்து பேசுகையில் தான் ஜே. ஆரின் ‘பிரபலமான’ பேச்சொன்றான அப் பேச்சு இடம்பெற்றது: ‘பிரிட்டிஷ் பாராளுமன்றத்திலிருந்து எமக்கு பல கடிதங்களும் தந்திகளும் வந்திருக்கின்றன. இவை, உண்மை தெரியாமல் அனுப்பப்பட்ட கண்டனங்கள். ஆனால், நான் இவர்களுக்கு கூறுகிறேன், உங்கள் அலுவல்களை நீங்கள் கவனியுங்கள். எங்கள் விடயங்களில் தலையிட வேண்டாம். ஐரிஷ் பிரச்னைக்கு நீங்கள் முதலில் தீர்வைக் காணுங்கள்.’

‘யாழ்ப்பாணத்தில் நூலகம் ஒன்று எரிந்திருக்கிறது. இது தொடர்பில் நாம் விசாரணை செய்வோம்’ - ஜே. ஆர். சொன்னார்.

ஜே. ஆரின் பேச்சின் பின்னரான இடைவேளையில், பத்திரிகையாளர் கூடத்தில் அவரின் அப்பேச்சு சிலாகிப்புக்குள்ளாகியிருந்தது.

கிளாரன்ஸ் பெர்னான்டோ அப்போது ‘றொய்ரேர்ஸ்’ செய்தி நிறுவனத்தின் நிருபராகவிருந்தவர். சிரேஷ்ட பத்திரிகையாளர் - மதிப்பானவர். அவர் சொன்னார்

‘அமிர்தலிங்கம் இல்லாத துணிச்சல் ஜே. ஆருக்கு. அமிர்தலிங்கம் இங்கு இருந்திருந்தால், ஜே. ஆர். இப்படிப் பேசித் தப்பித்திருக்க முடியாது’.

ஆக, இவை எல்லாவற்றினதும் ‘அறுவடை’தான் 1983 ஜூலை கலவரம்.

# பாரதிய ஜனதாக் கட்சி ஆட்சியமைக்குமா?

நியூசிலாந்து சிற்சபேசன்

இந்தியப் பொதுத்தேர்தல் முடிவு ஜூன் 4ம் திகதி வெளியாகின்றது. நூறுகோடியை எட்டிப்பிடிக்கக்கூடிய எண்ணிக்கையில் வாக்காளர்கள் காணப்படுகின்றனர். அதிலே கணிசமானவர்கள் வாக்குச்சாவடிப் பக்கம் திரும்பிப்பார்ப்பதே அரிதாகின்றது. இருந்தாலும்கூட, “திரும்பிப்பார்த்தோர்” எப்படியான தீர்ப்பை எழுதினர் என்பதே வானுயர்ந்துநிற்கும் கேள்வியாகும்.

இரண்டு பெரிய கட்சிகளும், தேர்தல் ஆரம்பமாக முன்னர் கட்டியெழுப்பிய பிம்பம் கரைந்திருக்கின்றது. பாரதிய ஜனதாக் கட்சியினுடைய வெற்றி தொடர்பில் மட்டுமன்றி, காங்கிரஸ் கட்சியின் தோல்வி தொடர்பிலுமான கணிப்பீடு ஆட்டம் கண்டிருக்கின்றது. இரண்டு கட்சிகளுடைய வெற்றிக்குறியீடு “ஏணியும் பாம்பும்” விளையாடுகின்றது.

காஷ்மீரில் 370ஆவது சட்டக்கூறு நீக்கம், முத்தலாக் தடைச்சட்டம், உத்தராகண்டில் பொதுச் சிவில் சட்டம், பொருளாதார வளர்ச்சி உள்ளிட்ட விடயங்கள் பாரதிய ஜனதா அரசு மீதான அபிப்பிராயத்தை வழிப்படுத்தின. அயோத்தி இராமர் கோவில் விவகாரம் மாறுபட்ட, அதேவேளையில் - காத்திரமான உணர்வலையை ஏற்படுத்தியது.

அத்தகையதொரு பின்னணியிலேயே, 400 ஆசனங்களிலே வெற்றி என்னும் கோஷத்தை பாரதிய ஜனதாக் கட்சி உரத்துச் சொல்ல ஆரம்பித்திருந்தது. ஆனால், ஏப்ரல் 19ல் ஆரம்பமாகிய வாக்குப்பதிவு, அடுத்தடுத்த கட்டங்களைத் தொட்டபோது, 400 என்னும் இலக்கு கரையத் தொடங்கிவிட்டது.

ஊழலற்ற கட்சி என்ற பிம்பத்தை பாரதிய ஜனதா உருவாக்கியிருந்தது. அதனுடைய பெறுபேறுகளை அறுவடை செய்யத் தயாராகிய வேளையில், தேர்தல் பத்திர விவகாரம் வெளிப்பட்டது. கனவுகளைச் சின்னாபின்னமாக்கியது.

பட்டகாலேபடும் என்பதுபோல, தேர்தல் பத்திர விவகாரத்தோடு கைகோர்த்துக்கொண்டு உட்கட்சியிலே கனன்றுகொண்டிருந்த விஷயமொன்றும் விஸ்வரூபமெடுத்தது. ஒண்டவந்த பிடாரி ஊர்ப்பிடாரியை விரட்டிய கதையாக, தேர்தலில் போட்டியிடுகின்ற வாய்ப்பை, பிறகட்சிகளிலிருந்து பிரிந்துவந்து பாரதிய ஜனதாவில் சேர்ந்தவர்கள் தட்டிச்சென்றனர். அஃது உட்கட்சியிலே கசப்பை ஏற்படுத்தியது. அதனுடைய பிரதிபலிப்பு குஜராத், இமாசலப்பிரதேசம் உள்ளிட்ட வட இந்திய மாநிலங்களில் வெளிப்படத் தொடங்கின.

விட்டகுறை தொட்டகுறையாக, பழைய பிரச்சினைகளும் “வரிசை” கட்டி வரத்தொடங்கின.


விவசாயிகள் டெல்லிக்கு போராட வந்தபோது, அவர்களைத் தலைநகரின் எல்லைப்புறங்களிலேயே அரசு தடுத்துவிட்டது. டெல்லிக்குள் நுழைய அனுமதிக்கவில்லை. அதனால், பாரதிய ஜனதாக் கட்சியினரை தமது மாநிலத்திற்குள் நுழைய அனுமதிக்க மாட்டோம் என ஹரியாணா, பஞ்சாப் விவசாயிகள் தேர்தல்வேளையிலே பொங்கியெழுந்தனர்.

மணிப்பூர் கலவரம் கறைபடிந்த வரலாறாகிவிட்டது. அதனால், வடகிழக்கு மாநிலங்களில் தலைவைத்துப்படுப்பதே திண்டாட்டமாகிவிட்டது. சிவசேனா, தேசியவாத காங்கிரஸ் போன்றவற்றிலே ஏற்பட்ட பிளவுகளிலே

(14ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்பார்க்கும் பாரிய தேர்தல் வெற்றியை மோடியால் பெறமுடியுமா?



♦ வீரகத்தி தனபாலசிங்கம்

உலகின் அல்லது மனிதகுலத்தின் மிகப்பெரிய ஜனநாயகச் செயன்முறை என்று வர்ணிக்கப்படும் இந்திய லோக்சபா தேர்தல் அதன் இறுதி ஏழாவது கட்ட வாக்குப்பதிவுடன் நேற்று சனிக்கிழமை முடிவுக்கு வந்தது. சுதந்திரத்துக்கு பின்னரான 18 வது லோக்சபாவைத் தெரிவுசெய்வதற்கு இந்திய மக்கள் வாக்களித்திருக்கிறார்கள். நாளை மறுதினம் செவ்வாய்கிழமை முடிவுகள் வெளியாகும்.

பாரதிய ஜனதா கட்சி வெற்றிபெறும் என்பதிலோ அல்லது நரேந்திர மோடி மீண்டும் பிரதமராக வருவார் என்பதிலோ சந்தேகமில்லை. 543 ஆசனங்களைக் கொண்ட லோக்சபாவில் தனது பாரதிய ஜனதா கட்சி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியை 400க்கும் அதிகமான ஆசனங்களில் வெற்றிபெறச் செய்யுமாறு இந்திய மக்களுக்கு அழைப்பு விடுத்தவாறு மோடி தேர்தல் பிரசாரங்களை ஆரம்பித்தார். 2019 பொதுத் தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணிக்கு லோக்சபாவில் 353 ஆசனங்கள் ( பாரதிய ஜனதாவுக்கு மாத்திரம் 303 ஆசனங்கள் ) கிடைத்தன.

இந்த தடவை தேசிய ஜனநாயக கூட்டணியினால் 370 ஆசனங்களுக்கும் கூடுதலாக கைப்பற்றி மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெறமுடியுமா அல்லது முன்னைய பெரும்பான்மையை தக்கவைக்கக்கூடியதாக இருக்குமா என்பதே அவதானிகள் எழுப்பும் கேள்வி.

பிரமாண்டமான வெற்றியை பெறமுடியும் என்ற நம்பிக்கையுடன் பாரதிய ஜனதா தேர்தல் பிரசாரங்களை தொடங்கிய போதிலும், வாக்குப்பதிவின் முதல் நான்கு கட்டங்களில் வாக்களிப்பு வீதம் கணிசமானளவுக்கு குறைவாக இருந்ததால் மோடி குழப்பமடைந்தார் போன்று தோன்றியது. இதற்கு பல்வேறு காரணங்கள் கூறப்பட்டன. கடும் வெப்ப காலநிலை, சில மாநிலங்களில் அரசியல் கட்சிகளுக்கு இடையில் பலமான போட்டி இல்லாதமை என்பனவும் அந்த காரணங்களில் அடங்கும்.

எதிர்பார்க்கின்ற பெருவெற்றி கிடைக்காமல் போகக்கூடும் என்ற சந்தேகத்தில் இறுதிக்கட்ட தேர்தல் பிரசாரங்களில் இந்திய சனத்தொகையில் 20 சதவீதத்தினராக விளங்கும் முஸ்லிம் சமூகத்துக்கு எதிராக மோடி நிகழ்த்திய உரைகள் ஒரு இந்தியப் பிரதமருக்கு பொருத்தமானவையாக இருக்கவில்லை. இந்துக்களின் வாக்குகளை சாத்தியமானளவு உச்சபட்சத்துக்கு பெறும் நோக்கில் முஸ்லிம்களுக்கு எதிரான உணர்வுகளை அருவருக்கத்தக்க முறையில் அவர் தூண்டிவிட்டதைக் காணக்கூடியதாக இருந்தது.

ஏற்கெனவே இரு பொதுத்தேர்தல்களில் பாரதிய ஜனதாவை வெற்றிக்கு வழிநடத்திய மோடி மீண்டும் பிரதமராக வந்தால் சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமர் ஜவஹர்லால் நேருவுக்கு பிறகு தொடர்ச்சியாக மூன்று தடவை பிரதமராகும் முதல் இந்திய அரசியல் தலைவர் என்ற பெருமையை தனதாக்கிக் கொள்வார்.

ஆனால், நேருவைப் போன்றோ அல்லது அவரது மகள் இந்திரா காந்தியைப் போன்றோ முழு இந்தியாவிலும் பரந்தளவில் ஆதரவைக் கொண்ட ஒரு மகத்தான தேசியத்தலைவர் என்ற பெருமைக்குரியவராக மோடியையும் பழைய காங்கிரஸ் கட்சியைப் போன்று உண்மையான ஒரு தேசிய அரசியல் கட்சியாக பாரதிய ஜனதாவையும் கருதமுடியாது.

இந்துத்வாவின் செல்வாக்குடைய மாநிலங்களின் குறிப்பாக இந்திமொழி பேசும் மாநிலங்களின் எல்லைகளுக்கு அப்பால் மோடியினதும் பாரதிய ஜனதாவினதும் மக்கள் செல்வாக்கு விரிவடையவில்லை. நேரு மிகவும் உறுதியாக வெறுத்த மதவெறியை மோடி உணர்ச்சிபூர்வமாகக் கொண்டாடுகிறார். இந்தியாவின் பெருமைக்குரிய மரபாகப் பேணப்பட்டுவந்த மதசார்பின்மைக் கோட்பாடு மோடியின் பத்து வருடகால ஆட்சியில் ஆபத்துக்கு உள்ளாகியிருக்கிறது.

இந்திரா காந்திக்கு பிறகு தன்னைச் சுற்றி தனிநபர் வழிபாட்டுக் கலாசாரம் ஒன்றைக் கட்டியெழுப்பியிருக்கும் ஒரு பிரதமராக மோடியைப் பார்க்க முடிகிறது. தனது கட்சியை விடவும் மக்கள் மத்தியில் செல்வாக்கு கொண்டவராக அவர் விளங்குகிறார்.

காங்கிரஸே இந்தியா, இந்தியாவே காங்கிரஸ் என்று நேரு சொன்னார். இந்திய மக்களும் அரசியல்வாதிகளும் அவரைப் பெரிதும் மதித்தபோதிலும், தன்னைச் சுற்றி தனிநபர் வழிபாட்டு கலாசாரத்தை அவர் கட்டியெழுப்பியதாக ஒருபோதும் குறை கூறப்படவில்லை.

இந்தியாவே இந்திரா , இந்திராவே இந்தியா என்று காங்கிரஸின் தலைவராக இருந்த தேவ் காந்த் பரூவா பிரகடனம் செய்தார். அவ்வாறு மட்டுமீறி துதிபாடுவதை தான் விரும்பவில்லை என்று நேருவின் மகள் கூறியதாக பதிவு எதுவும் இல்லை.

ஆனால் மோடியை போற்றுபவர்கள் மோடியே இந்தியா, இந்தியாவே மோடி என்று இன்னமும் கூறவில்லை. ஆனால், இந்தியா அடைந்திருப்பதாகக் கூறப்படும் வெற்றிகளுக்கு எல்லாம் அவரே காரணம் என்று பாரதிய ஜனதா தலைவர்கள் தேர்தல் பிரசாரங்களின் போது கூறாமல் ஒரு நாளும் கடந்ததில்லை எனலாம்.

காங்கிரஸ் உட்பட 37 அரசியல் கட்சிகள் சேர்ந்து அமைத்த 'இந்தியா' கூட்டணியினால் ஆரம்பத்தில் ஒரு வகையான நம்பிக்கையை ஏற்படுத்தக்கூடியதாக இருந்த போதிலும், பாரதிய ஜனதாவின் பிரமாண்டமான பிரசார இயந்திரத்தை வலுவாக எதிர்த்து நிற்கக்கூடியதாக பெரிய ஒரு அரசியல் இயக்கமாக அது விளங்கவில்லை என்பதே பொதுவான அபிப்பிராயம்.

"இந்தியா" கூட்டணியில் காங்கிரஸும் இரு கம்யூனிஸ்ட் கட்சிகளுமே தேசிய தோற்ற அமைவைக்கொண்ட கட்சிகள். ஆனால், காங்கிரஸ் பெரிய தேசிய இயக்கம் என்ற முன்னைய அந்தஸ்தில் இப்போது இல்லை. கம்யூனிஸ்ட் கட்சிகளைப் பொறுத்தவரையில் அவை மாநிலக் கட்சிகளை விடவும் சிறியவையாகிவிட்டன. "இந்தியா" கூட்டணி பெரும்பாலும் மாநிலக் கட்சிகளைக் கொண்ட கூட்டமைப்பாகவே இருக்கிறது.



மீண்டும் பிரதமராக வந்தால் சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமர் ஜவஹர்லால் நேருவுக்கு பிறகு தொடர்ச்சியாக மூன்று தடவைகள் பிரதமராக வரும் பெருமையை மோடி தனதாக்கிக் கொள்வார். ஆனால் நேருவைப்போன்று தேசிய அளவில் பரந்தளவு மக்கள் ஆதரவைக் கொண்ட தேசியத் தலைவராக மோடியை நோக்கமுடியாது. நேரு வெறுத்த மதவெறியை மோடி உணர்ச்சிபூர்வமாகக் கொண்டாடுகிறார்.

இந்தியா கூட்டணியில் உள்ள கட்சிகள் 2019 பொதுத் தேர்தலில் லோக்சபாவில் 91 ஆசனங்களையே கைப்பற்றின. இது பாரதிய ஜனதா கைப்பற்றிய ஆசனங்களில் மூன்றில் ஒரு பங்காகும். இந்த தடவை இந்தியா கூட்டணி எவ்வளவு ஆசனங்களில் வெற்றிபெறும் பெறும்?

2019 பொதுத்தேர்தலில் காங்கிரஸும் பாரதிய ஜனதாவும் 202 லோக்சபா ஆசனங்களில் நேருக்குநேர் மோதிக்கொண்டன. அவற்றில் 16 ஆசனங்களில் மாத்திரமே காங்கிரஸினால் வெற்றிபெறக்கூடியதாக இருந்தது. இந்த தடவை காங்கிரஸ் நான்கு மாநிலங்களில் மாத்திரமே சுயாதீனமாக பலம்கொண்டதாக விளங்கியதாகக் கூறப்பட்டது. அவற்றில் கர்நாடகா , கேரளா மற்றும் தெலுங்கானா ஆகியவை தென்னிந்திய மாநிலங்கள். மற்றைய மாநிலம் வடக்கில் உள்ள பஞ்சாப்.

அதனால் "இந்தியா" கூட்டணி பாரதிய ஜனதாவுக்கு கணிசமான சவாலை தோற்றுவிப்பதற்கு தமிழ்நாடு உட்பட எட்டு மாநிலங்களில் உள்ள பிராந்திய கட்சிகளிலும் அவற்றின் தலைவர்களிலுமே தங்கியிருக்க வேண்டியிருந்தது. மேற்கு வங்காளம், டில்லி, பஞ்சாப், உத்தரப்பிரதேசம், பீஹார், மகாராஷ்டிரா மற்றும் ஆந்திரப்பிரதேசம் ஆகியவையே அந்த மாநிலங்களாகும்.

இந்த 12 மாநிலங்களிலும் மொத்தமாக 369 லோக்சபா ஆசனங்கள் இருக்கின்றன. இவற்றில் கணிசமான ஆசனங்களை இந்தியா கூட்டணியினால் கைப்பற்றமுடியுமானால் , பாரதிய ஜனதாவின் வெற்றியை தடுக்க முடியாவிட்டாலும், மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெறுவதைத் தடுக்கமுடியும் என்று இந்திய அவதானிகள் கருதுகிறார்கள்.

இந்த 12 மாநிலங்களில் ஆறு மாநிலங்களில் ( தெலுங்கானா, மேற்கு வங்காளம், தமிழ்நாடு, ஆந்திரப்பிரதேசம், பீஹார் மற்றும் கேரளா ) பாரதிய ஜனதா குறிப்பிடத்தக்க அளவு செல்வாக்கைக் கொண்டிருக்கவில்லை. ஒடிஷா மாநிலத்தையும் சேர்த்து இந்த மாநிலங்களில் மொத்தம் 204 லோக்சபா ஆசனங்கள் இருக்கின்றன. கடந்த இரு பொதுத் தேர்தல்களிலும் பாரதிய ஜனதா இந்த ஆறு மாநிலங்களிலும் ஐம்பதுக்கும் அதிகமான ஆசனங்களில் வெற்றி பெறவில்லை. 2014 ஆம் ஆண்டில் 29 ஆசனங்களிலும் 2019 ஆம் ஆண்டில் 47 ஆசனங்களிலுமே அது வெற்றிபெற்றது.

சுமார் ஆறு தசாப்த காலமாக இரு பெரிய திராவிட இயக்கக் கட்சிகளினால் மாறிமாறி ஆட்சிசெய்யப்பட்டு வருகின்ற தமிழ்நாடு மாநிலத்தில் பாரதிய ஜனதாவினால் எந்த தாக்கத்தையும் இதுவரையில் ஏற்படுத்த முடியவில்லை. இங்கு ஒரு சிறிய வெற்றியையாவது பெற்றுவிட வேண்டும் என்பது மோடியின் இலக்காக இருக்கிறது. முன்னர் ஒருபோதும் காட்டாத அக்கறையை இந்த தடவை அவர் தமிழ்நாட்டு தேர்தல் பிரசாரங்களில் காட்டினார். ஒரு ஆசனத்தைப் பெற்றால் கூட அவருக்கு அது பெரிய வெற்றியாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

ஏப்ரில் 21 முதற்கட்ட வாக்குப்பதிவு இடம்பெற்ற மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்று. இங்கு தேர்தல் பிரசாரங்களின்போது மோடி பாக்குநீரிணையில் இருக்கும் சின்னஞ்சிறிய கச்சதீவை இலங்கைக்கு இந்திரா காந்தி விட்டுக் கொடுத்ததை நினைவுபடுத்தி இந்தியாவுக்கு பாதகமான அந்த செயலுக்கு காங்கிரஸ் கட்சியும் திராவிட முன்னேற்றக் கழகமுமே பொறுப்பு என்று குற்றஞ்சாட்டினார்.

மோடி மீண்டும் பிரதமராக வந்தவுடன் கச்சதீவை இலங்கையிடம் இருந்து மீட்பதற்கான நடவடிக்கைகளில் இறங்குவார் என்று தமிழ்நாட்டு பாரதிய ஜனதா தலைவர்கள் தேர்தல் பிரசாரங்களின் போது கூறினார்கள். மாநிலத்தில் வாக்குப்பதிவு முடிவடைந்த பிறகு அவர்கள் அதைப் பற்றி பேசியதாக செய்திகள் வரவில்லை.

ஆனால், கச்சதீவு தொடர்பிலான மோடியினதும் பாரதிய ஜனதா தலைவர்களினதும் அந்த பிரசாரம் தமிழ்நாட்டு மக்கள் மத்தியில் பெரிதாக எடுபட்டதாகக் கூறமுடியாது. பாரதிய ஜனதாவின் இந்துத்வா கொள்கைக்கு எதிரான அரசியல் சக்திகள் தமிழ்நாட்டை விடவும் வேறு எந்த மாநிலத்திலும் கூடுதலான அளவுக்கு பலம்வாய்ந்தவையாக இருக்கின்றன என்று கூறமுடியாது.

இந்திரா காந்தி கச்சதீவை இலங்கைக்கு விட்டுக் கொடுத்த காரணத்தினாலேயே தமிழக மீனவர்கள் பெரும் நெருக்கடியை எதிர்நோக்குகிறார்கள் என்று மோடி கூறினார். குறைந்த பட்சம் தமிழ்நாட்டுக் கரையோர தொகுதிகளிலாவது பாரதிய ஜனதா வேட்பாளர்கள் வெற்றிபெறாவிட்டாலும் கணிசமான வாக்குகளையாவது பெற்றார்களா என்பது நாளை மறுதினம் தெரிந்து விடும்.

அரை நூற்றாண்டு காலத்தில் கச்சதீவு குறித்து சர்ச்சை கிளப்பிய முதல் இந்தியப் பிரதமர் மோடியே. இது குறித்து ஆசிரிய தலையங்கம் எழுதிய கொழும்பு ஆங்கில வாரப்பத்திரிகை ஒன்று அவர் தமிழ்நாட்டு வாக்குகளை இழுவைப்படகைப் பயன்படுத்தி வாரி அள்ளுவதற்கு முயற்சிக்கிறார் என்று நகைச்சுவையாக குறிப்பிட்டது கவனிக்கத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணிலின் 'சடுகுடு' அதிரடிகளில் சிக்குப்படும் சிங்கள தலைகளும் தள்ளாடும் தமிழ்த் தேசியமும்!

பனங்காட்டான்

ரணில் விக்கிரமசிங்கவின் தந்திரோபாய அரசியல் விளையாட்டின் இன்னொரு கட்டம் இப்போது ஆரம்பமாகியுள்ளது. ஜனாதிபதி தேர்தல் அதிகாரபூர்வ அறிவிப்புக்கு முன்னரான இடைக்கால அதிரடி என்றும் இதனைச் சொல்லலாம்.

ரணிலைத் தலைவராகக் கொண்ட ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டார திடுதிப்பென, தமது சொந்தக் கருத்து போன்று பகிரங்கமாகத் தெரிவித்த விடயமே இப்போதைய ரகளைக்குக் காரணம்.

இந்த வருடத்தில் நடைபெறவேண்டிய ஜனாதிபதி தேர்தலையும் அடுத்தாண்டு நடுப்பகுதிக்குள் இடம்பெற வேண்டிய நாடாளுமன்றத் தேர்தலையும் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தி இரண்டு வருடங்களுக்கு பின்போடலாம் என்ற கருத்தை ரங்கே பண்டார தெரிவித்துள்ளார். இந்த அறிவித்தலைத் தமது தனிப்பட்ட அபிப்பிராயம் போன்றே இவர் வெளியிட்டிருந்தாலும், ஐக்கிய தேசிய கட்சியின் செயலாளராக இவர் இருப்பதால் அந்தத் தொப்பியுடன் ஊடகங்களில் இவரது அறிக்கை வெளியானது.

இவரது அறிவித்தல் வந்த வேகத்தைவிட, இதற்கான எதிர்ப்புகள் பல முனைகளிலிருந்தும் சினைப்பர் வேகத்தில் வந்தன. ஐக்கிய தேசிய கட்சியின் முக்கியஸ்தர்களும் இதில் அடங்குவர். ரங்கே பண்டாரவின் இரு வருட நீடிப்பு ஆலோசனை வெளியான சில மணித்தியாலங்களில் நூற்றுக்கணக்கான தொலைபேசி அழைப்புகள் ரணிலுக்குப் பறந்தன. அனேகமாக சகல அரசியல் கட்சியினரும் அவருடன் உரையாட ஆவல்பட்டனர்.

'ரங்கே பண்டாரவின் அறிவிப்புப் பற்றி ஐக்கிய தேசிய கட்சிக்கு எதுவும் தெரியாது. அந்த அறிவிப்பை கட்சி நிராகரிக்கிறது. அப்படியான எந்த முன்னெடுப்பையும் ரணில் விக்கிரமசிங்க மேற்கொள்ளவில்லை. ஜனநாயக விழுமியங்களின்படி அவர் நடந்து கொள்வார்" என்று ஜனாதிபதி சார்பில் பொதுவான ஓர் அறிக்கை வெளியிடப்பட்டது.


மறுபக்கத்தில் ரங்கே பண்டார சும்மா இருக்கவில்லை. அவர் சும்மா இருக்கக்கூடிய பேர்வழியும் அல்ல. அரசியலுக்கு வருவதற்கு முன்னர் பொலிஸ் உத்தியோகத்தராகக் கடமையாற்றியவர். 'சர்வதேச நாணய வங்கி, உலக வங்கி மற்றும் கொடையாளிகள் இலங்கையில் பொருளாதார முன்னேற்றம் கருதியே உதவுவார்கள். இதுவே இன்று முக்கியம். நாடு பொருளாதாரத்தில் ஸ்திரத்தன்மை அடையும்வரை இரண்டு தேர்தல்களையும் பின்போடலாம். இதற்காக சர்வஜன வாக்கெடுப்பை நடத்துவது ஜனநாயக வழிமுறை" என்பது ரங்கே பண்டார தெரிவித்துவரும் கருத்து.

1977ம் ஆண்டில் ஆட்சியைக் கைப்பற்றி 1978ல் ஜனாதிபதியாகத் தம்மைத் தாமே அமர்த்திய ஜே.ஆர். ஜெயவர்த்தன, 1982ல் நடைபெறவிருந்த ஜனாதிபதி தேர்தலையும், 1983ல் நடைபெறவிருந்த நாடாளுமன்றத் தேர்தலையும் சர்வஜன வாக்களிப்பின் வாயிலாக பிற்போட்டார். இதனை ஞாபகத்தில் வைத்து ஜே.ஆரின் பெறாமகன் முறையான (மச்சாளின் மகன்) ரணிலையும் தற்போதைய நாடாளுமன்றத்தையும் மேலும் இரண்டாண்டுகளுக்கு தொடர வைக்க முயற்சி எடுத்திருக்கிறார் ரங்கே பண்டார. அன்று ஜே.ஆருக்கு நாடாளுமன்றத்தில் ஆறில் ஐந்து பெரும்பான்மை இருந்ததையும், இன்று ரணில் பொதுஜன பெரமுனவின் ஆதரவிலேயே ஜனாதிபதி கதிரையில் தொங்கியிருப்பதையும் ஏனோ ரங்கே பண்டார மறந்துவிட்டார்.

இவர் முன்வைத்திருக்கும் ஆட்சி நீடிப்பு தொடர்பாக ஜனாதிபதியின் ஆலோசகரான ஆசு மாரசிங்க தமது கருத்தை வெளியிட்டுள்ளார். 'தேசத்தின் ஸ்திரத்தன்மைக்கான ஒரு கருத்தையே ரங்கே பண்டார முன்வைத்துள்ளார். இது தொடர்பாக நாடாளுமன்றத்தில் திங்கட்கிழமை அவர் விபரித்துக் கூறவிருக்கிறார். இவரது கருத்தை பலரும் தவறாக விமர்சிக்கிறார்கள். இருக்கக்கூடிய ஒரு வழிமுறையை மட்டுமே அவர் கூறியுள்ளார். ஒளிமயமான எதிர்காலத்துக்கு இது ஒரு வழி. மக்கள் மூன்றுவேளை உணவையும், நியாயமான விலையில் அத்தியாவசிய பொருட்களையுமே கேட்கிறார்கள். தேர்தலைக் கேட்டு அவர்கள் வீதியில் இறங்கவில்லை" என்பது ரங்கே பண்டாரவின் கருத்தை நியாயப்படுத்தும் ஜனாதிபதியின் ஆலோசகரின் கூற்று.

இவ்வகையான ஜனாதிபதி தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பான அறிவிப்புகள் வெளிவந்து கொண்டிருக்கையில் மறுபக்கப் பார்வைகளும் தாராளமாகக் காணப்படுகிறது. இதனை கூர்ந்து கவனிக்கின் இதன் பின்னாலுள்ள புதிர்களும் எழும்பவிருக்கும் பன்முகக் கேள்விகளும் வெளிச்சத்துக்கு வரும்.

ஜனாதிபதி தேர்தல் நடைபெற வேண்டிய காலவரம்பை தேர்தல் ஆணையம் அறிவித்துவிட்டது. அனேகமாக எதிர்வரும் அக்டோபர் 17ல் இது நடைபெறுமென எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால், நிறைவேற்று அதிகாரபூர்வ ஜனாதிபதி தேர்தலை இன்னும் உத்தியோ



அரசியல் ரணிலுக்கு ஒரு விளையாட்டு. எப்போது எந்தக் காயை எங்கே நகர்த்துவது என்பது அவரது ரணத்தில் ஊறிய கலை. முன்னாள் பொலிஸ்காரரான தற்போதைய ஐக்கிய தேசிய கட்சியின் செயலாளர் ரங்கே பண்டாரவை வைத்து இப்போது புது நாடகத்தை ஆரம்பித்துள்ளார். இது வென்றாலென்ன தோற்றாலென்ன, ரணிலின் இலக்குக்கு இது வெற்றியே.



கபூர்வமாக அறிவிக்கவில்லை. அவர் போட்டியிடுவது பற்றியும் அறிவிப்பு வரவில்லை. ஆனால், அவர் போட்டியிடுவார் என்ற நம்பிக்கையளிக்கும் செயற்பாடுகள் அதன் சாத்தியத்தை வெளிப்படுத்தியுள்ளது. கடந்த சில வாரங்களாக அவர் மேற்கொண்டு வரும் உள்நாட்டு சூறாவளிப் பயணங்கள் இதற்கு நல்ல சான்று.

இலவச அரிசி வழங்கல், உறுமய என்ற பெயரில் பொதுமக்களுக்கு காணிப்பத்திரங்கள் வழங்குதல், மாவட்ட ரீதியாக பல்வேறு அபிவிருத்தி வேலைகளுக்கு கோடிக் கணக்கில் நிதி வழங்கும் அறிவிப்பு போன்ற இவரது செயற்பாடுகள் தேர்தலை நோக்கியே என்பது தேர்தல் கண்காணிப்புக் குழுவின் குற்றச்சாட்டு.

தேர்தல் பிரகடனம் இன்னமும் வெளிவராததால் இப்போதைய ஜனாதிபதியின் பணிகளை தேர்தலுடன் இணைத்துப் பார்க்கக்கூடாது என்பது ஜனாதிபதியின் ஆலோசகர் ஆசு. மாரசிங்கவின் பதில். சட்டப்படி இவர் கூறுவது சரியானாலும், நடைமுறையில் தேர்தலுக்கான இலவசங்களாக இவைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதை மறைக்க முடியாது.

[illegible] விட்டா [illegible] பிற்போட விரும்பும் ஆலோசனையை வெறுமனேயே ஒருபுறம் ஒதுக்கிவிட்டு தொடர முடியாது. ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணிலுக்குத் தெரியாமல் இவ்வாறான ஒரு முன்னெடுப்பை ரங்கே பண்டார எடுத்திருக்கமாட்டார் என்று நிச்சயமாக சொல்ல இடமுண்டு. ரணில் அமைதியாக ஓர் எறியில் பல காய்களை வீழ்த்தும் போக்கில் இவ்விடயத்தை கையாளுகிறார் என்றே சொல்ல வேண்டும்.

ரங்கே பண்டாரவின் முன்னெடுப்புக்கு ரணில் அங்கீகாரம் வழங்குவதற்கு பல காரணங்கள் உண்டு. பொதுவாக அரசியலில் இவ்வாறான முன்னெடுப்புகளை நாடிபிடித்துப் பார்க்கும் ஒரு நடவடிக்கை என்பார்கள். ஆதரவு கிடைத்தால் அதனை தொடரலாம். இல்லையெனில் அதனை தாம் நிராகரிப்பதாகக் கூறி, தம்மை ஓர் உண்மையான ஜனநாயகவாதியாக படம் காட்டுவது இதன் முதலாவது அம்சம்.

ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக மற்றைய கட்சிகள் ஆரம்பித்திருக்கும் துரித பரப்புரைகளையும், கட்சிகளின் கூட்டிணைவுகளையும் திடுதிப்பாக திசை திருப்பி அவர்களின் தேர்தல் முன்னெடுப்புகளை மூழ்கடித்து வைக்கும் தந்திரோபாய முயற்சிகளில் இது ஒன்று என்பது அடுத்தது.

அடுத்தாண்டு பொதுத்தேர்தலில் வெற்றி பெறும் சாத்தியமில்லையென கருதும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அவர்களின் பதவிக் காலத்தை நீடிக்க வைத்தால் அவர்களை தம்பக்கம் இணைத்து ஜனாதிபதி தேர்தலில் தமது ஆதரவுத் தளத்தை மேலும் அதிகரிக்கச் செய்யலாம் எனும் எதிர்பார்ப்பு இன்னொன்று. (ஜனாதிபதித் தெரிவு நாடாளுமன்ற வாக்களிப்பில் ரணிலை எதிர்ப்பதாக தமிழ் தேசிய கூட்டமைப்பு தீர்மானித்த போதிலும், சில பலாபலன்கள் கருதி கூட்டமைப்பின் எம்.பிக்கள் சிலர் ரகசியமாக ரணிலை ஆதரித்து வாக்களித்தமை இதற்கு நல்லதொரு உதாரணம்.)

தேர்தலை பிற்போடும் காலத்தில் தங்கள் வலைக்குள் அகப்படும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வரியற்ற வாகன இறக்குமதி லைசென்ஸ், மதுபான விற்பனை நிலைய லைசென்ஸ் என்பவைகளை கையூட்டாக வழங்கி காரியத்தைச் சாதிக்கலாமென்று நினைப்பது மற்றொன்று. இவ்வாறு பல வழிகளில் காரியங்களை வெற்றியாக்க முடியும். இவைகளை உணர்ந்து ஜனநாயக விழுமியத்துக்கு அமைய தேர்தல்களைப் பின்போடும் விடயத்தை ரங்கே பண்டார நாடாளுமன்றத்தில் விபரிக்க அனுமதிப்பதனூடாக ரணில் அன்ட் கம்பனியின் உள்நோக்கத்தை உணர்ந்துகொள்ள முடிகிறது.

ரணிலின் மாயவலைக்குள் தமிழ்த் தேசியம் என்ற போர்வையில் நடமாடும் மக்கள் பிரதிநிதிகளும் வீழ்ந்துவிட்டதை ரணிலின் அண்மைய வடக்கு விஜயத்தின் போது நேரில் பார்க்க முடிந்தது. தமிழர்களின் பிரச்சனை அரசியல் தீர்வல்ல - அபிவிருத்தியே அவர்கள் வேண்டுவது என்று செல்லுமிடமெங்கும் கூறி வந்த ரணிலை பின்தொடர்ந்த மக்கள் பிரதிநிதிகள் அவர் அருகிலிருந்து ஒளிப்படம் எடுப்பதில் தங்கள் கவனத்தை முழுமையாக்கினர்.

தமிழர்களின் பிரதிநிதிகள் என்று கூறுபவர்களின் தலையை ரணில் எவ்வாறு சுற்றினார் என்பதற்கு இரண்டு உதாரணங்கள். யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையை தேசிய வைத்தியசாலையாக மாற்றப் போவதாக ரணில் அறிவித்தார். இது போதாதென்று வவுனியா வைத்தியசாலையை போதனா வைத்தியசாலையாக்கப் போவதாகவும் அறிவித்தார்.

மாகாண சபைத் தேர்தல்களை விரைவாக நடத்த வேண்டுமென்று கூவிக் கூவி கேட்டுவரும் தமிழ்த் தேசிய பிரதிநிதிகள், மாகாண சபைகளின் கீழ் இயங்க வேண்டிய வவுனியா வைத்தியசாலையை எவ்வாறு லாவகமாக மத்திய அரசாங்கத்தின் கீழ் ரணில் கொண்டு செல்கிறார் என்பதை புரியாமல், தமிழர் பிரதேச அபிவிருத்தியில் தொடர்ந்து ரணில் தொடர்ந்து செயற்பட வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்ததை என்னென்று சொல்லலாம்.

காணி அதிகாரம் மாகாண சபைகளுக்கு வழங்கப்படும் என்று ரணில் கூறிவர, மறுதரப்பில் அதே வாரம் படையினருக்கு காணிகளை வழங்குவதற்கு அரசாங்க அதிகாரிகள் அளவீடு செய்ய செல்வதும் பொதுமக்கள் அதனை எதிர்த்து போராடுவதும் அவர்களது நாளாந்த போராட்டமாக மாறிவருகிறது.

சுருக்கமாகச் சொல்லப்போனால் ரணிலின் சடுகுடு அரசியல் அதிரடிகள் அவரது பாணியில் தொடர்கிறது. சிங்களத் தலைமைகள் அதற்குள் சிக்குப்பட்டு மீளுவதற்கான வழி தேடி போராடுகின்றனர். தமிழ்த் தேசிய தலைவர்கள் அதற்குள் அகப்பட்டு தத்தளித்துக் கொண்டிருக்கின்றனர். இதுவே தொடர்கதையாகுமானால், தேர்தல்கள் என்பதும், மாகாண சபைகள் என்பதும் ரணிலின் விருப்பப்படியாகவே முடிவுபெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரும்பாலான தமிழ் அரசியல்வாதிகளுக்கு சுயநிர்ணய உரிமை பற்றிய அறிவு கிடையாது!

ச. வி. கிருபாகரன்
- பிரான்ஸ்

2009ம் ஆண்டு மே மாதம் தொடக்கம், பல தமிழ் அரசியல்வாதிகள், உள்நாட்டு வெளிநாட்டு தமிழ் செயற்பாட்டாளர்கள், வேறு பலரின் அலட்டல்களில் ஒன்று, 'சுயநிர்ணய உரிமை'. உண்மையை கதைப்பதனால் இவர்களில் பெரும்பான்மையானவர்களிற்கு சுயநிர்ண உரிமை என்றால் என்ன? இதில் எத்தனை பகுதிகள் உண்டு, இவற்றை எப்படியாக ஐக்கிய நாடுகள் சபை, சர்வதேச சமூதாயம், மற்றைய நிறுவனங்களினால் கையாளப்படுகின்றனா என்ற அடிப்படை அறவு இல்லாது தினமும் புலம்புகிறார்கள்.

இதில் இன்னும் வேடிக்கை - ஒரு நாடு இரு தேசம், ஒற்றையாட்சிக்கு வெளியில் தீர்வு, சமஸ்டி, தேர்தல் வந்தால் பகிஸ்கரிப்பு என அலட்டுவது வழமையாகியுள்ளது. இவை யாவற்றையும் கேட்டு அனுபவிக்க வேண்டும் என்பது வடக்கு கிழக்கை தாயாகமாக கொண்ட தமிழ் மக்களின் தலைவிதி. சிங்கள பௌத்த அரசுகளின் திட்டமிடப்பட்ட, பிரித்து ஆளும் தந்திரத்திற்குள், வடக்கு கிழக்கு வாழ் இஸ்லாமிய மக்கள் அகப்படும் வரை, யாதர்தமாக சரித்திர ரீதியாக ஆராயும் பொழுது, வடக்கு கிழக்கு வாழ் முஸ்லீம்களும் தமிழர்களே. இன்றும் அவர்கள் தமிழர்களாகவே வாழ்கிறார்கள்.

முதலாவதாக, சுயநிர்ணய உரிமை என்றால் என்ன? இங்கு பல வரவிலக்கணக்கங்கள் ஒவ்வொருவரும் விரும்பியவாறு கொடுக்கப்பட்டிருந்தாலும், ஐக்கிய நடுகள் சபையின் வேறுபட்ட சாதனங்களின் அடிப்படையில் ஆராயும் பொழுது, மிக சுருக்கமாக, "சுயநிர்ணயம் என்பது, மக்கள் தங்கள் சொந்த இலக்குகளைத் தேர்ந்தெடுப்பது மற்றும் நிர்ணயிப்பது, வாழ்க்கை முடிவுகளை எடுப்பதில் ஈடுபடுவது, சுயமாக அவர்களின் இலக்குகளை அடைய வேலை செய்வது ஆகியவை அடங்கும்.

சுயநிர்ணஉரிமை இரண்டு பரிமாணங்களாக உள்ளன. ஒன்று உள்வாரியான சுயநிர்ணய உரிமை, மற்றையது வெளிவரியான சுயநிர்ணய உரிமை. உள்வாரியான சுயநிர்ணய உரிமை என்று கூறும்பொழுது, ஏற்கனவே உள்ளடக்கப்பட்ட பிரதேசங்கள் மாநிலத்திற்குள், சுயநிர்ணய உரிமையைப் பயன்படுத்துவதைக் குறிக்கிறது. வெளிவரயான சுயநிர்ணய உரிமை என்பது சர்வதேச சமூகத்திற்குள் மக்கள் தங்கள் நிலத்தை எல்லைகளை வரையறுக்கும் உரிமையைக் குறிக்கிறது. அதாவது இலங்கைதீவின் மக்களை பொறுத்தவரையில் - மாகாணசபை, முன்னைய மாநாகரசபை, பட்டின சபை, கிரமச்சபை, இன்றை பிரதேசசபை போன்றவை யாவும் ஒரு உள்வாரியன சுயநிர்ணய உரிமையாகவே கணிக்கப்படும். இவற்றை சுயநிர்ணய உரிமை பற்றி மொட்டையாக கதைப்பவர்கள் புரிந்த கொள்ள வேண்டும்.

### தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம்

இதே வேளை, தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம். இவர்கள் ஒரு தேசிய இனத்திற்கான அடையாளங்களான - தனிப்பட்ட மொழி, கலை கலாச்சரம், எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட தமக்கான ஒரு பிரதேசம் அல்லது தாயகம், ஒரு நீண்ட சரித்திரம் போன்றவற்றை கொண்டுள்ளார்கள். ஆகையால் வடக்கு கிழக்கு வாழ் தமிழ் மக்கள், ஒரு தேசிய இனம் என்ற அடிப்படையில், தமிழீழம் என்ற தனி நாட்டிற்கான, அதாவது, வெளிவரியான சுயநிர்ணத்திற்கு உரித்துள்ளவர்கள் என்பதில் எந்தவித ஐயமுமில்லை.

இதை சிங்கள பௌத்தவாதிகள் நன்றாக அறிந்து தெரிந்துள்ள காரணங்களினாலேயே, கடந்த ஏழு தசாப்பங்களிற்கு மேலாக எந்த அரசியல் தீர்வையும் வடக்கு கிழக்கு வாழ் மக்களிற்கு கொடுக்காது, சில தமிழ் பஞ்சோத்திகளை அரவணைத்து கொண்டு, வடக்கு கிழக்கு வாழ் மக்களுக்கு பலவிதப்பட்ட அட்டுழியங்கள் புரிந்த வண்ணம் உள்ளார்கள்.

இதில் விசேடமாக உள்வாரியான ஒழுங்கான திருப்தியான கட்டமைப்பை கொண்ட இனம், தமது வெளிவாரியான உரிமை, அதாவது தனி நாட்டு பிரகடனம் செய்ய முடியும். இதற்கு பல கிழக்கு ஐரோப்பிய நாடுகள், விசேடமாக முன்னையா யூகோஸ்லாவிய அருமையான உதாரணமாக உலகில் விளங்குகிறது.

இவற்றை பெரும்பாலான தமிழ் அரசியல்வாதிகள் உட்பட, பல தமிழ் குபேரர்கள் புரிந்து கொள்ள முடியாத காரணத்தினால், வடக்கு கிழக்கு வாழ் மக்களை ஒரு 'சிறுபான்மை' இனமாக காண்பிக்கும் துர்பாக்கியத்தை எம்மால் காண முடிகிறது. சர்வதேச சட்டங்களிற்கு அமைய ஒரு சிறுபான்மை இனத்திற்கு, 'சிறுபான்மை' உரிமைகளையே அவ்வினம் அனுபவிக்க முடியும் என்பதை இவர்கள் அறவே அறியவில்லை.

> “வடக்கு கிழக்கு வாழ் பிரதேசங்களில் - இராணுவமயம், சிங்களமயம், பெத்த மயம், சிங்கள குடியேற்றம் ஆகியவற்றை மிக வெற்றிகரமாக செய்து முடிந்த பின்னர், அரசியல் தீர்வு என்ற கேள்விக்கே இடமிராது. இதற்கு ஏற்ற முறையில் எமது தமிழ் தலைமைகளும், புலம் புலன் பெயர்ந்த தமிழர்களும் பயணிக்கிறார்கள்.

### சிறுபான்மை இனம் அல்ல

இலங்கைதீவின் தெற்கின் சிங்கள பௌத்தவாதிகளை பொறுத்த வரையில், வடக்கு கிழக்கு வாழ் தமிழ் மக்கள் ஒரு சிறுபான்மை இனம் என்பது மட்டுமல்லாது, கிழக்கை தவிர்ந்து வடக்கு பற்றியே ஊளறுகிறார்கள். வடக்கு கிழக்கு தாயக மக்கள் ஓர் தேசிய இனம். நிட்சயம் சிறுபான்மை இனம் அல்ல என்பதை யாவரும் புரிந்து கொள்ள வேண்டும். சில சந்தர்பங்களில் 'எண்ணிக்கையில் நாம் ஒரு சிறுபான்மை இனமென சர்வதேச ரீதியாக, வேற்று இன மக்களிற்கு கூறுவதில் எந்த தவறுமில்லை. 'எண்ணிக்கையில்' என்னும் பொழுது அரசியல் தெரிந்த வெளிநாட்டவர்கள், புரிந்து கொள்வார்கள்.

வடக்கு கிழக்கு வாழ் தமிழ் அரசியல்வாதிகள், தமது அரசியல் கொள்கைகளை வெளிப்படுத்தும் பொழுது அவை யாவும், சிங்கள பௌத்த அரசியல்வாதிகளிற்கும் சர்வதேசத்திற்கும் ஒரு சாம்பாறகவே காணப்படுகிறது. காரணம் எந்தவித வரையறையற்று - ஒரு நாளைக்கு சுயநிர்ணய உரிமை, வேறு ஒரு நாள், ஒரு நாடு இரு தேசம், இன்னொரு நாள் ஒற்றையாட்சிக்கு வெளியில் தீர்வு, வேறு ஒரு நாள் சமஸ்டியென கூறுவது யாவும், முழு பித்தலாட்டம். இதன் மூலம் செல்லப் பிள்ளைகளின் அரசியல் அறிவை யாவரும் புரிந்து கொள்ள முடியும். விசேடமாக 'ஒரு நாடு இரு தேசம்' என்ற கோட்பாட்டை காலம் சென்ற கொல்வின் ஆர் டீ சில்வா, 1960களில் கூறியவர். இதை ஏதோ புதிய கண்டுபிடிப்பாக அரசியல் தெரியாதவர்களிற்கு புசத்துவது என்பது பேய்காட்டு அரசியல்.

கடந்த ஏழு தசாப்தங்களிற்கு மேலாக வடக்கு கிழக்கு வாழ் மக்கள், எந்த அரசியல் உரிமையும் இல்லாது வாழ்வதற்கு பல நுட்பமான காரணங்கள் காணப்பட்ட பொழுதிலும், தமிழ் அரசியல் வாதிகளிற்கு மேலாக, சிங்கள பௌத்த அரசியல் வாதிகள், தமிழர்கள் எப்படி எப்படியெல்லாம் நகர்த்தி, இறுதியில் தமது வெளிவரியான சுயநிர்ணய உரிமைக்கு வழிவகுக்கிறார்கள் என்பதை கடந்த ஏழு தசாப்தங்களிற்கு முன்பே உணர்ந்துள்ளார்கள்.

"மோட்டு சிங்களவன்" என்ற காலம் போய், மோட்டு தமிழர்களாக நாம் வாழ்வது, சர்வதேசத்திற்கும் சர்வதேச நிறுவனங்களிற்கும், தமிழர்கள் எவ்வளவு பகுத்தறிவு அற்று வாழ்கிறோம் என்ற நிலைமையில் இன்று உள்ளோம்.

உலகில் விடுதலையடைந்த, அல்லது சுதந்திரம் அடைந்த பல்லின மக்களின் அரசியல் நகர்வுகளை நாம் ஆராயும் வேளையில், எமது தமிழ் தலைவர்கள் கடந்த காலங்களில, எவ்வளவு அரசியல் நகர்வுகளை செய்ய தவறினார்கள் என்பது புலப்படும். சில உதாரணங்களை இங்கு தருகிறேன்.

### தமிழீழ பிரகடனம்

1948ம் ஆண்டு முதல் சில தவறுதல் இடம்பெற்றிருந்தாலும், 1977ம் ஆண்டு வடக்கு கிழக்கு வாழ் மக்களின் "தமிழீழத்திற்கான" ஆணை பாரிய அளவில் கிடைத்தவுடனேயே எமது தலைவர்கள், தமிழீழ பிரகடனம் செய்ய தவறியது மாபெரும் தவறு. இதனால் எமது அன்றைய இளைஞர்கள் ஆயுத போராட்டத்தை ஆரம்பிப்பதற்கு நிர்பந்திக்கப்பட்டார்கள் என்பதே யாதார்த்தம்.

அடுத்து, தமிழீழ விடுதலை புலிகள், ஆயுதபோராட்டம் மூலம், வடக்கு கிழக்கின் மூன்றில் இரு பிரதேசங்களில் ஓர் நடைமுறை அரசை குறைந்தது இரு தசாப்பதங்களாக்கு மேலாக சகல கட்டமைப்புகளுடன் நடாத்திய பொழுதும், சிங்கள அரசுகள் எதிர்பார்த்தது போல், தமிழீழ விடுதலை புலிகள், சுதந்திர பிரகடனம் செய்ய தவறிவிட்டார்கள். அதாவது, 'தனித்துவமான சுதந்திர பிரகடனம்' செய்யவில்லை. இதனால் நாம் இன்று மிகவும் கொடூரமான நிலைக்கு தள்ளப்பட்டு தலை நிமிர முடியாத சர்ச்சைக்குள் நிற்கிறோம்.

இங்கு ஒரு முக்கிய விடயத்தை குறிப்பிட கடமைப்பட்டுள்ளேன். தழிழீழ விடுதலை புலிகளிற்கும், சிறிலங்காவிற்கும் இடையில் யுத்தம் மிக கொடூரமாக நடைபெற்று கொண்டிருந்த வேளையில், 2008ம் ஆண்டு யூன் 1ம் திகதி, கொழும்பில் இன்றும் வெழியாகும், 'த நேசன்' என்ற ஆங்கில பத்திரிகையில் "ஐநா உறுப்பு நாடுகள் நடைமுறை அரசு மற்றும் சுதந்திரமான நாடுகளை அங்கீகரிக்கின்றன" ("UN member states recognise de-facto and independent states" - 'The Nation' on Sunday, 01 June 2008). என்ற ஒருகட்டுரையில் "இன்றைய நிலையில் தமிழீழ விடுதலை புலிகளால் நடாத்தப்படும் நடைமுறை அரசிற்கு இரு விடயங்களே குறைந்து காணப்படுகின்றன. ஒன்று சுதந்திர பிரகடனம், மற்றையது சொந்த நாணயம்" என எனது கட்டுரையில் எழுதிய பொழுது, அந்த ஆங்கில பத்திரிகையில் ஆசிரியர்களில் ஒருவர், என்னை தொடர்பு கொண்டு, அருமையான கட்டுரை. ஆனால் நீங்கள் இந்த இரு விடயங்களை நீக்குவதற்கு சம்மதித்தால் நாம் இக்கட்டுரையை பிரசுரிப்போம் என்றார். எனது சம்மதத்துடன் அவ்விரு விடயங்களும் நீக்கப்பட்டு எனது கட்டுரை வெளியாகியிருந்தது.

அக்கட்டுரையில் என்னால் 2008ம் ஆண்டு யூன் 1ம் திகதி வெளியிடப்பட்ட கடைசி பந்தியை இங்கு தருகிறேன்.

"சிறிலங்காவில் நடைமுறை அரசு" என கூறப்பட்ட விடயம் பின்வருமாறு - "இலங்கையில் நடைமுறை அரசு - இலங்கை அரசாங்கங்கள் மனித உரிமை மீறல்களை தொடர்ந்து நடத்தினால், விடுதலைப் புலிகளின் உண்மைக் கூற்றையும் ஐ.நா.வினால் என்றாவது ஒரு நாள் சந்திக்க நேரிடும் என்பதை முன்னர் விளக்கிய பல உண்மை நிலைகள் நினைவூட்டுகின்றன. விடுதலைப் புலிகளினால் சுதந்திரம் பிரகடனம் செய்யப்பட்டால், இதற்கு இலங்கை அரசாங்கங்கள் தெரிந்தோ தெரியாமலோ வழிவகுத்துள்ளன. தொடர்ச்சியான மனித உரிமை மீறல்களை ஐ.நா பரிசீலித்து, ஒரு அரசை அங்கிகரிப்பதற்கான காரணிகளாகும். இதற்கு இலங்கை அரசுகள் கைகொடுக்குமா என்பது உடனடியாக பதில் கிடைக்காத கேள்வி. (கட்டுரையின் ஒரு பகுதி)

இக்கட்டுரையின் விளைவு என்னவெனில், இக் கட்டுரை வெளியாகி சில காலத்தின் பின்னர் இவ் பத்திரிகையின் ஆசிரியர் கொழும்பில் கடத்தப்பட்டு மிகவும் கோடுரமாக தாக்கப்பட்டார்.

முக்கிய விடயம் என்னவெனில், சிறிலங்கா அரசு தொடர்ச்சியாக, 2005ம் ஆண்டு முதல் யுத்தம் முடியும் வரை, தமிழீழ விடுதலை புலிகள், தமிழீழ பிரகடணம் செய்ய போகிறார்களென எதிர்பார்த்து கொண்டிருந்த போதிலும், விடுதலை புலிகள், தமிழீழ பிரகடணம் செய்ய தவறிவிட்டார்கள். இது புரியாத புதிராகவே இன்றும் உள்ளது.

இக் கட்டுரை வெளியான அன்று, ஜெனிவா ஐ.நா.மனித உரிமை சபையில் நான் பங்குபற்றி கொண்டிருந்தேன், அவ்வேளையில் கொழும்பிலிருந்து சிறிலங்கா அரசு சார்பாக ஐ.நா.மனித உரிமை சபையில் பிரசன்னமாகிய சிலர், என்னை வம்பிற்கு இழுத்தார்கள். அங்கு தனித்து நின்று இவர்களுடன் தர்க்கம் செய்ய வேண்டிய நிலை உருவாகிய பொழுது, அங்கு உள்ள வெளிநாட்டு பிரதிநிதிகள் யாவற்றையும் சமளித்தார்கள். அப்டியானால், மற்றைய தமிழ் பிரதிநிதிகள் எங்கு சென்றார்கள் என்பது வேறு கதை!

இன்று எந்தவித அரசியல் தீர்வும் இல்லாத வடக்கு கிழக்கு வாழ் மக்கள், 1987ம் ஆண்டு சிறிலங்காவின் அரசியல் யாப்பில் உள்ளடக்கப்பட்ட 13வது திருத்த சட்டத்தை ஆவுதல் தருங்களென மண்டி நிற்கும் நிலையில், அரசியல் அறிவு அற்ற செல்லப்பிள்ளைகள், தொடர்ந்து தமிழ் மக்களை "அரசியல் பிச்சைகாரர்களாக ஆக்கியுள்ளார்கள்". இவர்கள் வைக்கல் பட்டடை நாய்களா?

இவ் நிலையில் ரணிலை பொறுத்த வரையில், வயோதிபத்தமிழர்களிற்கு மட்டுமே அரசியல் தீர்வு முக்கியம், இளம் தமிழர்களிற்கு இது பற்றிய அக்கறை அறவேயில்லை என ஒரு புது படலத்தை ஆரம்பித்துள்ளார். இவர்கள் யாவர்களின் உண்மையான சிந்தனை என்னவெனில், யுத்தத்தின் பின்னர் என்ன சிக்கல்கள் வந்தாலும், யாவற்றையும் சமளித்து, வடக்கு கிழக்கு வாழ் பிரதேசங்களில் - இராணுவமயம், சிங்களமயம், பெத்த மயம், சிங்கள குடியேற்றம் ஆகியவற்றை மிக வெற்றிகரமாக செய்து முடிந்த பின்னர், அரசியல் தீர்வு என்ற கேள்விக்கே இடமிராது. இதற்கு ஏற்ற முறையில் எமது தமிழ் தலைமைகளும், புலம் புலன் பெயர்ந்த தமிழர்களும் பயணிக்கிறார்கள்.

**கட்டுரையாளர்: பிரான்ஸ் தமிழர் மனித உரிமை மையத்தின் ஸ்தாபகர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் பொது வேட்பாளருக்கான நியாயம் மிகவும் வலுவானது



யதீந்திரா

ஒரு அரசியல் நிலைப்பாடு வலுவான தர்க்கங்களால் எதிர்க்கப்பட வேண்டும். அவ்வாறில்லாது போனால், அந்த எதிர்ப்பு அர்த்தமற்றதாகும். ஒரு அரசியல் நிலைப்பாட்டை தர்க்கரீதியில் தோற்கடிக்க முடியாமல் போகும் போது, குறித்த விடயம் வரலாற்றில் சரியென்றே நிரூபிக்கப்படும். இது வரலாற்றல் மாறி மாறி நிகழக் கூடியது. ஒரு காலத்தில் தவறென்று கருதுகின்ற விடயம், பிறிதொரு காலத்தில் சரியானா ஒன்றாக நோக்கப்படலாம். எனவே ஒவ்வொரு அரசியல் தீர்மானங்களையும் குறிப்பிட்ட காலகட்டத்தின் வழியாக மட்டுமே நாம் நோக்க வேண்டும்.

தற்போது அதிகம் பேசப்பட்டுவரும், தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை இந்த அடிப்படையில் தான் நாம் நோக்க வேண்டும். முதல் பார்வையில் இது ஏளனத்துடனும் அவநம்பிக்கையுடனும் நோக்கப்படலாம். ஏளனங்களும் அவநம்பிக்கைகளும் தமிழ் தேசிய அரசியலுக்கு புதிதல்லவே! ஆனால் ஒரு அரசியல் நிலைப்பாடு, கொஞ்சம் கொஞ்சமாக, மக்களுக்குள் ஊடுருவிச் செல்லும் போது, நிலைமைகள் வேகமாக மாற்றமடையும். இதன் காரணமாகவே தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை கண்டு சிலர் அஞ்சுகின்றனர். எப்படியாவது இதனை முளையிலேயே கிள்ளியெறிந்துவிட வேண்டுமென்று எண்ணுகின்றனர். ஏனெனில் எதிர்ப்பவர்கள் அனைவருக்கும் ஒரு விடயம் நன்கு தெரியும் - அதாவது, தமிழ் மக்களுக்குள் ஒரு விடயம் பற்றிக்கொள்ளுமானால், அதன் பின்னர் அவர்களை எவராலும் திசைதிருப்ப முடியாது. தமிழ் மக்கள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அரசியலில் விலைபோன மக்கள் அல்லர். வரலாற்றில் சரியான தருணங்கள் அனைத்திலும் சரியான தீர்மானங்களின் பக்கமாகவே சாய்ந்திருக்கின்றனர். மக்கள் நாடாளுமன்ற தேர்தலின் போது பல விதமாக வாக்களிக்கலாம் ஏனெனில் அது வேறு அரசியல் களம் - அங்கு மக்களின் எதிர்பார்ப்புக்களும் வேறு.

ஜனாதிபதி தேர்தலில், தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதும், அதனை நோக்கி மக்களை திரட்டுவது என்பதும் முற்றிலும் வேறானது. இது இது வரையான அரசியல் வேறுபாடுகள், உள் மோதல்கள், சந்தேகங்கள் அனைத்திற்கும் அப்பாற்பட்டது. இவ்வாறான விடயங்களால் ஒரு மக்கள் கூட்டத்தை சிதைத்து விட முடியுமென்றால், உண்மையில் அவ்வாறானவர்கள் ஒரு மக்கள் கூட்டமாவும் இருக்க முடியாது. இந்தப் பின்புலத்தில் நோக்கினால், தமிழ் பொது வேட்பாளர் என்பது, ஒரு அரசியல் நிலைப்பாடு. இந்த நிலைப்பாடு தொடர்பில் மாறுபட்ட கருத்துக்கள் இருக்கின்றன. எதிர்ப்புக்கள் இருக்கின்றன. அப்படி இருப்பதும் தவறானதல்ல. கீரை கடைக்கும் எதிர்க்கடை வேண்டும்தான். அதுவே ஜனநாயகம்.

தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டுக்கு செயல் வடிவம் கொடுக்கும் முயற்சியில் பல்வேறு சிவில் சமூக அமைப்புக்களும் ஒன்றுபட்டு செயற்பட்டுவருகின்றன. எத்தனை அமைப்புக்கள் இணைந்திருந்தாலும் கூட, சில விடயங்களை முன்னெடுக்கும் போது, சில நபர்களே முன்னணியில் இருப்பார்கள். அரசியல் செயற்பாடுகளின் போது இது சாதாரணமானதும் கூட. பொதுவாக ஒரு விடயத்தை எதிர்க்கும் போது, அந்த விடயத்திற்கு தலைமை தாங்குபவர்களே, முதலில் தாக்கப்படுவதுண்டு. தமிழ் பொது வேட்பாளர் விடயத்திலும் அதுதான் இடம்பெறுகின்றது. அவ்வாறான தனிப்பட்ட தாக்குதல்கள் சருகள் போன்று உதிர்ந்துவிடும். உறுதிமிக்க செயல் ஒன்றே அனைத்துக்குமான பதிலாகும். எனவே அவ்வாறான விடயங்களை ஒரு புறமாக ஒதுக்கிவிட்டு, ஜனநாயக அடிப்படையில் நியாயமாகவும் நேர்மையாகவும் முன்வைக்கப்படும் கேள்விகள் நமக்கு அவசியமானது. அவற்றுக்கு பதிலளிப்பதும் அவசியமானதுதான்.

இதற்கு பின்னால் யார் இருக்கின்றனர்? இதுதான் முதலில் எட்டிப்பார்த்த கேள்வியாகும். "மக்கள் மனு" வடக்கு கிழக்கு சிவில் சமூகம் யாழ்ப்பாணத்திலுள்ள, தந்தை செல்வா கலையரங்கில் தமிழ் பொது வேட்பாளர் தொடர்பான முதல் கூட்டத்தை நடத்தியதன் பின்னர், வெளிவந்த முதல் கேள்வி இதுதான். இந்தக் கேள்விக்கு பின்னால் இன்னொரு கேள்வி மறைந்திருந்தது. அதாவது, தமிழ் பொது வேட்பாளர் தொடர்பில் பேசுபவர்கள் ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியை விரும்புவர்கள். தமிழ் மக்கள் சஜித் பிரேமதாசவிற்கே வாக்களிப்பார்கள். இந்த நிலையில் இதனை தடுக்க வேண்டுமாயின், தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதன் ஊடாக, தமிழ் வாக்குகளை திசைதிருப்ப முடியும். இதனை நோக்கமாகக் கொண்டே, இவர்கள் தமிழ் பொது வேட்பாளர் தொடர்பில் பேசுகின்றனர். தமிழ் பொது வேட்பாளர் எண்ணக்கருவை, இப்படியாக புரிந்துகொள்ள முற்படுபவர்களில், அரசியல்வாதிகள் தொடக்கம் பத்திரிகையாளர்கள் வரையில் அடங்குகின்றனர்.

ஆனால் இதற்கு ரணில் விக்கிரமசிங்கவே பதிலளித்துவிட்டார் சி.வி.விக்கினேஸ்வரனை, அவரது வீட்டில் சந்தித்த, ரணில் விக்கிரமசிங்க அனைத்து தமிழ் கட்சிகளும் ஒன்றிணைந்து ஒரு தமிழ் பொது வேட்பாளரை நிறுத்தப் போவதில்லை. அது அவர்களால் முடியாது என்று கூறிச் சென்றிருக்கின்றார். ஒரு தென்னிலங்கை அரசியல்வாதியால் எவ்வாறு, இப்படிக் கூற முடிகின்றது? கடந்த பதினைந்து வருடங்களாக தமிழ் தேசியம் பேசிக் கொண்டிருந்த கட்சிகளால், ஒரு புள்ளியில் சந்திக்க முடியவில்லை. அவர்களை ஒரு புள்ளியில் சந்திக்க வைப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட சிவில் சமூக முயற்சிகள் அனைத்துமே தோல்வியுற்றிருக்கின்றன. ஒரு காலத்தில் செல்வாக்குமிக்க ஆயராகவும் சர்வதேசளவில் தமிழ் மக்களுக்கான குரலாகவும் இருந்த இராயப்பு ஜோசப் முயற்சித்தும் கூட, சம்பந்தன் இறங்கிவரவில்லை. அனைத்து தமிழ் தேசிய கட்சிகளையும் இணைந்து தமிழ் தேசிய பேரவை ஒன்றை உருவாக்கும் முயற்சியில் இராயப்பு ஜோசப் ஈடுபட்டார் ஆனால் அவரால் முடியவில்லை. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான், ஜனாதிபதி தேர்தலை ஒரு வாய்ப்பாக பயன்படுத்தும் எண்ணம் உருவாகியது. அனைத்து கட்சிகள் என்று கூறும் போது, ஒப்பீட்டடிப்படையில் பெரும்பான்மை என்பதாகவே இதனை எடுத்துக்கொள்ள வேண்டும்.

> **தமிழ் மக்களை ஒரு தேவையுள்ள மக்கள் கூட்டமாக எந்தவொரு வெளித்தரப்பும் கருதுவதாக தெரியவில்லை. அப்படி கருதியிருந்தால், யுத்தம் நிறைவுற்று பதினைந்து வருட காலமாக ஈழத் தமிழர்கள் நீதிக்காக ஒப்பாரி வைத்துக் கொண்ருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்காது.**

இந்த முயற்சியால் யாரோ ஒரு தென்னிலங்கை வேட்பாளர் நன்மையடைவாரா? இந்தக் கேள்விக்கான பதிலை காண்போம். இவ்வாறான சந்தேகங்களை முன்வைப்போர் ஒரு விடயத்தை புரிந்து கொள்ள முயற்சிக்க வேண்டும். அதாவது, நாம் ஒரு இலக்கை நோக்கிச் செயற்படும் போது, அதனை பிறிதொருவர் தன்னுடைய நலனுக்கு பயன்படுத்திக் கொள்வதை நம்மால் தடுக்க முடியாது. உதாரணமாக 2005இல் விடுதலைப் புலிகள் இயக்கம் தேர்தலை பகிஸ்கரிக்கும் தீர்மானத்தை எடுத்த போது, விடுதலைப் புலிகளுக்கான நலனிலிருந்துதான் அந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. ஆனால் அந்தத் தீர்மானத்தால் தென்னிலங்கையில் மகிந்த ராஜபக்சவே நன்மையடைந்தார். ரணில் விக்கிரமசிங்கவை அதிகாரத்திலிருந்து அகற்றுவதற்காக புலிகள் போட்ட தந்திரத்தின் பலனை ராஜபக்ச குடும்பமே அனுபவித்தது. அதற்காக விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் மகிந்த ராஜபக்சவிற்கு ஆதரவாக செயற்பட்டார் என்று எவரேனும் வாதிட முடியுமா? ராஜபக்ச குடும்பத்திடமிருந்து, பல பெட்டிகள் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு கைமாற்றப்பட்டது என்று எவரேனும் வாதிட முடியுமா?

ஒரு அரசியல் தீர்மானத்தை மேற்கொள்ளும் போது, அதன் பலாபலன்கள் எங்களுக்கு மட்டும்தான் கிடைக்குமென்று நாம் கணக்கிட முடியாது. அவ்வாறு நாம் கணக்கிட்டால், எந்தவொரு விடயத்தையும் எப்போதுமே நம்மால் முன்னெடுக்க முடியாது போகும். முதலில் நாங்கள் எடுத்துக் கொண்ட விடயம் நிறைவேறுகின்றதா என்பதை மட்டுமே நாம் பார்க்க வேண்டும். தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது என்பது அடிப்படையில் தமிழ் மக்களுக்கான ஒரு அரசியல் நிலைப்பாடாகும்.

நாங்கள் ஒரு தேசிய இனம், யுத்தம் முடிவுற்று பதினைந்து வருடங்களாகிவிட்ட பின்னரும் கூட, தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வில் ஒரு படியேனும் முன்னோக்கிச் செல்லவில்லை. இனியும் தென்னிலங்கை ஆட்சியாளர்களின் போலியான அரசியல் கதைகளை நம்பி, ஏமாறுவதற்கு நாங்கள் தயாரில்லை என்பதை சொல்லுவதுதான் முதல் செய்தியாகும். ஜனாதிபதி தேர்தலில், தமிழ் மக்கள் ஒரு தமிழ் பொது வேட்பாளரை நிறுத்தியிருக்கின்றார்கள் என்பதே ஒரு செய்தியாகும். வாக்குகளின் எண்ணிக்கை என்பது இரண்டாவது விடயம்தான். இந்தச் செய்தியை கூறுவதில் வெற்றியை பதிவு செய்த பின்னர், தமிழ் பொது வேட்பாளருக்கு கிடைத்த வாக்குகள் தென்னிலங்கை அரசியலில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றது என்பது தென்னிலங்கையின் பிரச்னை. அது தமிழ் மக்களின் பிரச்சினை இல்லை. எனவே தமிழ் பொது வேட்பாளர் ஒருவர் நிறுத்தப்பட்டால், அது ரணிலுக்கு வாய்பாக மாறிவிடும் என்னும் கதை அடிப்படையிலேயே தவறானது அத்துடன் தர்க்கரீதியில் மிகவும் பலவீனமானது.

இது சாத்தியமா - தமிழ் மக்கள் வாக்களிப்பார்களா? இந்தக் கேள்வியை முன்வைப்பவர்கள் தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை எதிர்க்கவில்லை - ஆனால், தற்போதைய அரசியல் களநிலைமை இதற்கு பொருத்தமானதல்ல. அரசியல் சூழல் பலவீனமாக இருக்கின்றது எனவே இவ்வாறானதொரு சூழலில் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது விசப்பரிட்சையாகிவிடலாம் என்பது அவர்களின் வாதமாக இருக்கின்றது. இவர்கள் அடிப்படையில் தற்போதுள்ள அரசியல் கட்சிகள் மீது அவநம்பிக்கை கொண்டிருப்பவர்கள் ஆனால் இவர்கள் கோட்பாட்டுரீதியில் தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டின் முக்கியத்துவத்தை புரிந்து கொண்டிருப்பவர்கள்.

இவ்வாறானவர்களின் கருத்துக்களை நாம் தூக்கிவீசிவிடக் கூடாது. கரிசனையுடன் நோக்க வேண்டும். அரசியல் கட்சிகள் தொடர்பில் அவர்களது அதிருப்தி நியாயமானதுதான். ஆனால் அவர்கள் ஒன்றை புரிந்து கொள்ள வேண்டும். இப்போது களநிலைமை பொருத்தமில்லை என்றால், அவர்கள் விரும்பவது போன்றதொரு களநிலைமை எப்போதுமே உருவாகப் போவதில்லை. ஏனெனில் நம்பிக்கை தரக்கூடிய ஒரு அரசியல் தலைமை தமிழ் மக்களிடம் இல்லை. அண்மைக்காலத்தில் அவ்வாறானதொரு தலைமை வெளித் தெரியக் கூடிய நிலைமையும் இல்லை.

எனவே இன்றைய களநிலைமை முற்றிலும் சாதகமாக இல்லாவிட்டாலும் கூட, இவ்வாறானதொரு முயற்சியில் முடிந்தவரையில் வெற்றியை பெற்றால், தமிழ் தேசிய அரசியல் வழியாக பயணிக்க முடியும் என்னும் நம்பிக்கையை அடுத்த தலைமுறைக்கு ஊட்ட முடியும். இந்த சந்தர்ப்பத்தை தவறவிட்டால், இனியொரு சந்தர்ப்பம் கிடைக்குமென்று கருதக் கூடிய சூழல் நம்மிடமில்லை. இப்போதும் அனைத்து அரசியல் கட்சிகளும் சிவில் சமூக அமைப்புக்களும் ஒன்றுபட்டு உழைத்தால், வரலாறு காணாத ஒரு பெரு வெற்றியை காண்பிக்க முடியும். இதனால் தமிழ் மக்களின் அரசியல் வாழ்வில் பாலாறும் தேனாறும் ஒடுமென்று இந்தக் கட்டுரையாளர் வாதிடவில்லை. அப்படியான கற்பனைகள் எவையும் என்னிடமில்லை. இது இன்றைய அரசியல் சூழலுக்குள் சுழியோடுவதற்கான ஒரு அரசியல் வடிவம் மட்டுமே. அந்தளவில் மட்டுமே நாம் இதனை நோக்க வேண்டும். நாளை வேறு நிலைப்பாடுகள் தேவைப்படலாம். அப்போது வேறு அரசியல் வடிவங்கள் தேவைப்படலாம். அரசியல் கொள்கை நிலைப்பாடுகளை கருங்கற்பாறை போன்று நோக்கக் கூடாது. நாம் வகுத்துக் கொள்ளும் கொள்கைகள் அனைத்தும் நமக்கானதுதான். நாம் நமக்காக ஆக்கிக் கொள்ளும் அனைத்துமே, தேவைப்பட்டால் மாற்றப்படக் கூடியதுதான். இந்தப் புரிதலுடன்தான், ஒவ்வொரு அரசியல் நிலைப்பாடுகளையும் நகர்வுகளையும் நோக்க வேண்டும். கையாள வேண்டும்.


கடலில் தத்தளித்து கொண்டிருக்கும் ஒருவருக்கு, மரத்துண்டு ஒன்று கிடைத்திருப்பது போன்றதுதான், இந்த ஜனாதிபதித் தேர்தலாகும். எனவே இந்த விடயத்தை

(14ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடாவில் கோவிலூர் செல்வராஜனின் நூல் வெளியீடு

**குரு அரவிந்தன்**




தமிழ் வாசகர்கள் மத்தியில் நன்கு அறியப்பெற்ற எழுத்தாளர் கோவிலூர் செல்வராஜன் அவர்களின் நூல்கள் வெளியீட்டு மற்றும் அறிமுக விழா சென்ற மே மாதம் 25 ஆம் திகதி 2024 அன்று கனடா ஸ்காபறோ நகரில் உள்ள பைரவி நுண்கலை மன்றத்தில் சிறப்பாக நடைபெற்றது. கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் ஆதரவில் மேற்படி விழாவிற்கு தற்போதைய தலைவரும் கவிஞருமான அகணி சுரேஸ் அவர்கள் தலைமை தாங்கினார்.

மங்கள விளக்கேற்றியதைத் தொடர்ந்து கனடா தேசியப் பண்ணும், தமிழ்த்தாய் வாழ்த்தும் பாடப்பெற்றன. அடுத்து நிர்மலா இரத்தினசபாபதி அவர்களின் வரவேற்புரையும், தொடர்ந்து அகணி சுரேஸ் அவர்களின் தலைமை உரையும் இடம் பெற்றன. அவர் தனது தலைமை உரையில் 'தமிழ் இலக்கிய வளர்ச்சியில் ஆர்வமும், ஈடுபாடும் கொண்டிருக்கும், இவரைப் போன்ற புலம் பெயர்ந்த படைப்பாளிகளை இனங்கண்டு அவர்களது ஆக்கங்களை வெளிக் கொண்டு வருவதில் கனடா தமிழ் எழுத்தாளர் இணையம் என்றும் முன்னின்று செயற்படும்' என்று குறிப்பிட்டார்.

அடுத்து திரு. சாமி அப்பாத்துரை, திருமதி சுகல்யா ரகுநாதன், திரு அ. தேவதாசன், உதயன் ஆசிரியர் திரு. ஆர். என். லோகேந்திரலிங்கம் ஆகியோரது வாழ்த்துரைகள் இடம் பெற்றன. தொடர்ந்து, 'நல்லது நடக்கட்டும்' என்ற சிறுகதைத் தொகுப்பிற்கு திருமதி மேரி கியூரி போல் அவர்களும், 'கிழக்கிலங்கையின் மறைந்த இலக்கிய ஆளுமைகள்' என்ற கட்டுரைத் தொகுப்புக்கு திரு. தங்கராசா சிவபாலு அவர்களும், இலக்கியத்தென்றல் 'பொன் விழா மலருக்கு' சிந்தனைப் பூக்கள் எஸ். பத்மநாதன் அவர்களும், 'கொத்துரொட்டி' சிறுகதைத் தொகுப் பிற்கு எழுத்தாளர் இணைய உபதலைவர் திரு. குரு அரவிந்தனும் நயவுரை வழங்கி னர்.

குரு அரவிந்தன் தனது நயவுரையில் கொத்து ரொட்டிக் கதைகள் பற்றிக் குறிப்பிட்டு, அனேகமான கதைகளில் கிராமிய பேச்சுவழக்கு இடம் பெற்றிருப்பதையும், மண்வாசைன, நாட்டுநடப்பு, குடும்பசூழல், பல்வேறு இனங்களுடன் நட்புறவைப் பேணுவது போன்ற விடயங்கள் இடம் பெற்றிருப்பதையும், வட மாகாணத்தில் ஆகக்கூடினால் உறவினர்களுடன் வேலிச்சண்டைதான் இடம் பெறும், ஆனால் கிழக்கு மாகாணத்தில் உள்ளவர்கள் பல்லின மக்களையும் எதிர் கொள்ள வேண்டிய சூழலில் இருப்பதையும், கஞ்சி குடிப்பதற்குக்கூட பயந்து வாழவேண்டிய சூழ்நிலையில் இருப்பதையும் அன்றே இவர் தனது கதைகளில் எடுத்தாண்டிருப்பதையும் சுட்டிக்காட்டினார்.



கோவிலூர் செல்வராஜன் அவர்களைப் பற்றிச் சுருக்கமாகக் குறிப்பிடுவதானால், தற்சமயம் லண்டனில் வசிக்கும் இவரது இயற்பெயர் செல்வராஜன் இராசையா. இவர் ஒரு எழுத்தாளர், கவிஞர், ஈழத்து பாடகர், நடிகர், மற்றும் பத்திரிகை ஆசிரியர். இலங்கை வானொலியில் நிகழ்ச்சித் தயாரிப்பாளராகவும், அறிவிப்பாளராகவும் இருந்த இவர் பல நாடகங்களிலும் பங்கேற்று நடித்துள்ளார். இவர் எழுதிய முதலாவது சிறுகதை 'விடியாத இரவுகள்' என்பதாகும்.

கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் செயலாளர் கமலவதனா சுந்தா அவர்களின் நன்றியுரையைத் தொடர்ந்து கோவிலூர் செல்வராஜனின் ஏற்புரை இடம் பெற்றது. அவர் தனது ஏற்புரையில் வருகைதந்த அனைவருக்கும் மற்றும் விழாவைச் சிறப்பாக நடத்திய கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்திற்கும் நன்றி தெரிவித்தார். ●

---




# வியுக்தியார் பதில்கள்

**இ. கோகுலன்**
**குருமண்காடு, வுவனியா.**

**கேள்வி:** இலங்கை தமிழ் அரசு கட்சிக்கு எதிரான வழக்கை விரைவாக நிறைவுறுத்த வசதியாக எதிராளிகள் அனைவரும் ஒரு நிலைப்பாட்டில் பதில் மனுக்களை தாக்கல் செய்வர் என்று கடந்த வெள்ளியன்று திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு வசதியாக கால அவகாசம் வழங்கி வழக்கை ஜூலை 19ஆம் திகதிக்கு நீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது. வழக்கில் என்னதான் நடக்கின்றது?

**வியுக்தியார்:** எது நடக்கவேண்டும் என்று வழக்காளி நினைத்தாரோ அது நன்றாகவே நடக்கிறது என்றுதான் நான் நினைக்கிறேன். வழக்கை விரைவாக நிறைவுறுத்தவதற்கு வசதியாக எதிராளிகள் அனைவரும் ஒரு நிலைப்பாட்டில் பதில் மனுக்களை தாக்கல் செய்வர் என்று எதிராளிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டபோது அதற்காக எதிர்வரும் 19ம் திகதிக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. அதாவது எதிராளிகள் எல்லோரும் ஒரு நிலைப்பாட்டில் வருவதற்கு நீதிமன்றம் கால அவகாசம் கொடுக்கிறது என்றால், அதற்கு கூட அவர்கள் ஒரு நிலைப்பாட்டில் வருவார்கள் என்ற நம்பிக்கைதானே. பிற்கு எதற்கு நாம் கருத்துச் சொல்வது?

---

**ஜி. கிருசாந்தன்,**
**டிக்கோயா, ஹட்டன்.**

**கேள்வி:** சம்பள அதிகரிப்பு கோரி எவர் போராட்டத்தில் ஈடுபட்டாலும் இந்த ஆண்டு சம்பளம் அதிகரிக்க முடியாது என்றும், ஒரு துறையினருக்கு சம்பளத்தை அதிகரித்தால் பிறிதொரு தரப்பினர் போராட்டத்தில் ஈடுபடுவார்கள் என்றும் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளாரே?. சம்பள அதிகரிப்பு கிடைக்காவிட்டாலும் போராட்டம் நடாத்தினால் வேலை செய்யாமலே சம்பளம் கிடைக்கும்தானே? அதாவது போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் வேலைக்கு செல்வதில்லைத்தானே?

**வியுக்தியார்:** எந்தக் கோரிக்கைக்காக என்றாலும் யாராவது போராட்டம் நடாத்தினால், அதற்கு அரசாங்கம் செவிமடுத்து, சம்பளத்தை அதிகரித்தால், அடுத்து என்ன நடக்கும்? அவர்களைப்போல மற்றையவர்களும் தங்களுக்கும் சம்பள அதிகரிப்பு கோரி போராடத் தொடங்குவார்கள். இதைத்தான் அமைச்சர் சொல்லியிருக்கிறார். போராட்டம் நடாத்துபவர்கள் முழு நாட்டிலும் பணியாற்றும் பணியாளர்களின்- அதாவது அரச பணியாளர்களின் சம்பளத்தை அதிகரிக்கவேண்டும் என்று கோரினால், அது நியாயமானதுதான். ஆனால் இப்படி ஒவ்வொரு துறையினரும் தத்தமக்காக போராடினால், அது அமைச்சர் சொல்வதுபோல தொடர் போராட்டங்களாகத்தானே முடியும்.

---

**எஸ். கார்த்திகேசு**
**திருக்கோவில், அம்பாறை.**

**கேள்வி:** பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் 225 உறுப்பினர்களும் விரும்பினாலும் ஜனாதிபதித் தேர்தலை எவராலும் ஒத்திவைக்க முடியாது என பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்திருக்கிறார். ஆனால் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளரோ இன்னும் இரண்டு வருடங்களுக்கு ஜனாதிபதித் தேர்தலை மாத்திரமல்ல, பாராளுமன்ற தேர்தலையும் ஒத்திவைக்க அனைத்துக் கட்சிகளும் ஆதரவு வழங்கவேண்டும் என்று கோரிக்கை விடுக்கிறாரே? என்ன தான் நடக்கப்போகின்றது?

**வியுக்தியார்:** அவர் சொல்வதும் சரிதான். இவர் கேட்பதும் சரிதான். இன்றைய ஜனாதிபதியான ரணில் விக்கிரமசிங்கவின் பெரிய தகப்பனாரான (தாயின் மைத்துணர்) ஜே.ஆர்.ஜெயவர்த்தன 1977ம் ஆண்டில் ஆட்சியைக் கைப்பற்றி 1978ல் ஜனாதிபதியாகத் தம்மைத் தாமே அமர்த்தியபின்னர், 1982ல் நடைபெறவிருந்த ஜனாதிபதி தேர்தலையும், 1983ல் நடைபெறவிருந்த நாடாளுமன்றத் தேர்தலையும் சர்வஜன வாக்களிப்பின் வாயிலாக பிற்போட்டார். அதாவது ஐதேக செயலாளர் கூறுவது போல தேர்தலை பின்போடுவதென்றாலும் அதற்கும் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்று நடாத்தப்படவேண்டுமே? அப்படி ஒன்று நடைபெற்றாலும் அதிலும் ரணில் தரப்பு வெற்றிபெற்றால் மாத்திரமே அதனைச் செய்யமுடியும். போராசிரியர் சொல்வதுபோல 225 எம்.பி.க்களும் விரும்பினாலும் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்று நடாத்தப்படாமல் ஒத்வைக்கமுடியாதுதான்.

---

**எஸ். நிதர்சன்,**
**மிருசுவில், சாவகச்சேரி.**

**கேள்வி:** தத்தமது பொருளாதார வேலைத்திட்டங்கள் குறித்து பகிரங்க விவாதத்திற்கு வருமாறு தேசிய மக்கள் சக்தி (ஜேவிபி) விடுத்த கோரிக்கையை ஐக்கிய மக்கள் சக்தி ஏற்றுக்கொண்டிருந்தது. இரண்டு தரப்புக்களும் அதுதொடர்பாக மாறிமாறி அறிக்கை விடுகின்றனவே தவிர அந்த விவாதம் நடப்பதாக தெரியவில்லையே. இருதரப்பும் சேர்ந்து மக்களை ஏமாற்றுகின்றார்களா? அல்லது என்ன தான் நடக்கின்றது?

**வியுக்தியார்:** அது வேறு ஒன்றும் இல்லை. தேசிய மக்கள் சக்தி (ஜேவிபி) இப்படியொரு விவாதத்திற்கு அழைப்பு விடுத்தபோது, அதனை ஏற்றுக்கொண்ட ஐக்கிய மக்கள் சக்தி, தமது பொருளாதார வல்லுனர் குழுவோடும் ஜேவிபியின் பொருளாதார வல்லுனர்கள் குழு விவாதத்திற்கு வரவேண்டும் என்று கோரிக்கை விடுத்திருந்தது. ஆனால் ஜேவிபி தரப்பில் அனுர - சஜித் விவாதத்திற்கு திகதி குறித்ததே தவிர, பொருளாதார நிபுணர்கள் குழுவிற்கு திகதி குறிக்கவில்லை. அதனால் தான் விவாதம் நடப்பது இழுபறிப்பட்டுக்கொண்டே போகின்றது. அதிலிருந்து ஒரு விடயம் புரிந்துகொள்ளக் கூடியதே. அதாவது தனிப்பட்ட விவாதத்திற்கு சஜித்துடன் விவாதிக்க சம்மதிக்கும் ஜேவிபி, அவர்களின் குழுவுடன் விவாதிக்க தங்குகின்றது. அதிலிருந்து ஜேவிபி, சஜித்தை எதிர்கொள்ளும் பலம் அனுரவிடம் இருக்கின்றது என்று நம்புகின்றது, ஆனால் சஜித்தின் குழுவை சந்திக்கும் பலம் தங்கள் குழுவிடம் இல்லை என்று நினைக்கின்றது போலவே தெரிகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலத்தீன் அமெரிக்காவில் சீன ஆதிக்கம்: அட்லாண்டிக் - பசிபிக் கடலை இணைக்கும் கால்வாயை நிக்கரகுவா அரசு ரத்து செய்ய தீர்மானம்!

ஐங்கரன் விக்கினேஸ்வரா



அட்லாண்டிக் - பசிபிக் கடலை இணைக்கும் சீனாவின் கால்வாய் திட்டம் சுற்றுச்சூழலுக்கும் கிராமப்புற சமூகங்களுக்கும் ஆபத்தை விளைவிக்கும் என்று அறிஞர்கள் தெரிவித்தனர்.

அட்லாண்டிக் பசிபிக் பெருங்கடல்களை இணைக்கும் கடல் போக்குவரத்துக் கால்வாய்க்கான கட்டுமானப் பணிகளை நிகராகுவா 2014 துவக்கியது.

இந்த கட்டுமானப் பணிகளை மேற்கொண்டு வரும் சீன நிறுவனம் இது வரலாற்றில் புதிய தருணம் என்றுவர்ணித்தது. இந்தக் கால்வாய் நாட்டின் பொருளாதாரத்தின் போக்கை மாற்றிவிடும் என்று நிக்கராகுவா அரசும் நம்பிக்கை வெளியிட்டது.

நிக்கரகுவா கால்வாய் (Canal de Nicaragua), கரீபியன் கடலை இணைக்கும் நிகரகுவா வழியான கப்பல் பாதையாகும். அதனால் அட்லாண்டிக் பெருங்கடல் பசிபிக் பெருங்கடலுடன் இணைகிறது.

நிக்கரகுவா ஏரி மத்திய அமெரிக்காவின் முக்கிய நன்னீர் நீர்த்தேக்கமாக இருப்பதால் இத்திட்டத்தின் சுற்றுச்சூழல் பாதிப்பு குறித்து விஞ்ஞானிகள் கவலை தெரிவித்தனர். ஜூன் 2013 இல், நிகரகுவாவின் தேசிய சட்டமன்றம், சீன தொழிலதிபரான வாங் ஜிங் தலைமையிலான நிகரகுவா கால்வாய் மேம்பாட்டு முதலீட்டுக் குழுவிற்கு நிதியுதவி மற்றும் திட்டத்தை நிர்வகிப்பதற்கு 50 ஆண்டு சலுகை வழங்குவதற்கான மசோதாவுக்கு ஒப்புதல்அளித்தது.

நீர்வழிப்பாதை செயல்பாட்டிற்கு வந்தவுடன் இந்தச் சலுகையை மேலும் 50 ஆண்டுகளுக்கு நீட்டித்திருக்க முயன்றது.

**பனாமா கால்வாயை விட பெரியது:**

அட்லாண்டிக் மற்றும் பசிபிக் பெருங்கடல்களை இணைக்கும் பனாமா கால்வாயை விட இந்தக் கால்வாய் பெரிதாக இருக்கும் ஆழமானதாக இருக்கும். இது 278 கிலோமீட்டர் தூரம் செல்லும்.

இந்தக் கால்வாய்த் திட்டம் அமுலுக்கு வந்த பிறகு, கடல் வழிவர்த்தகம் உலக அளவில் 5 சதவீதம் அளவுக்கு கூடுதலாகும் என்றும், இதனால் நிக்கராகுவாவின் பொருளாதாரம் இரட்டிப்பாகும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது.

ஆசியா, ஐரோப்பா மற்றும் ஆபிரிக்காவில் இருந்து அமெரிக்காவின் மேற்குக் கரையில் உள்ள துறைமுகங்களுக்கு செல்ல வேண்டிய கப்பல்கள் தென்அமெரிக்காவை சுற்றிப் போவதைத் தவிர்க்கவே பனாமா கால்வாய் 1914ஆம் ஆண்டிலிருந்து கடல் போக்குவரத்துக்காக பயன்படுத்தப்படுகிறது.

சுமார் 77 கிலோமீட்டர் தூரமுடைய பனாமா கால்வாயை விரிவுபடுத்தும் பணிகள் நடக்கின்றன. பனமா கால்வாய்க்கு வடக்காக இந்தப் புதிய நிக்கரகுவா கால்வாய் கட்டப்பட திட்டமிடப்பட்டது.

அட்லாண்டிக் - பசிபிக் பெருங்கடலை இணைக்கும்ஒரு கால்வாயை அமைப்பதற்கான சர்ச்சைக்குரிய திட்டத்தில் ஏறக்குறைய ஒரு தசாப்தத்திற்குப் பிறகு, நிக்கரகுவா, சுற்றுச் சூழலுக்கு ஆபத்தை விளைவிக்கும் மற்றும் கிராமப்புற சமூகங்களை இடமாற்றம் செய்யும் என்பதால், இத்திட்டத்தை முடிக்க சீன தொழிலதிபர் ஒருவருக்கு வழங்கப்பட்ட சலுகையை தற்போது ரத்து செய்துள்ளது.

2014 இல் தரை உடைப்பு இருந்த போதிலும், நிக்கரகுவாவின் அட்லாண்டிக் - பசிபிக் கடற்கரைகளை இணைக்கும் கால்வாயில் எந்த வேலையும் செய்யப்படவில்லை.

**நிக்கரகுவா விவசாயிகள் எதிர்ப்பு:**


நிக்கரகுவா அரசாங்க திட்டத்திற்கான கடல்பாதையை உருவாக்குவதற்காக நிலம் கைப்பற்றப்பட்டதற்கு எதிராக ஆயிரக்கணக்கான நிக்கரகுவா விவசாயிகள் எதிர்ப்பு தெரிவித்தனர்.

2019 ஆம் ஆண்டில், நிகரகுவா நீதிபதி ஒருவர் போராட்டத்தில் பங்கேற்ற மூன்று விவசாயிகளின் தலைவர்களுக்கு 216 ஆண்டுகள், 210 ஆண்டுகள் மற்றும் 159 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்தார்.

இக்கால்வாய் மற்றும் சுற்றுச்சூழலில் ஜனாதிபதி டேனியல் ஒர்டேகாவின் ஆட்சியின் படை தன்னிச்சையான தன்மையின் அடையாளமாக மாறியது.

ஒர்டேகாவின் அரசாங்கம் கால்வாய் பல்லாயிரக்கணக்கான வேலைகளை உருவாக்கி, பொருளாதாரத்தை தூண்டும் என்று கூறியது.

இது கடுமையான சுற்றுச்சூழல் அபாயங்களை ஏற்படுத்துவதாகவும்; கிராமப்புறங்களில் உள்ள ஆயிரக்கணக்கான குடும்பங்களை இடம்பெயரச் செய்யும் என்றும், நிதி ரீதியாக சாத்தியமற்றது என்றும் எதிர்ப்பாளர்கள் வாதிட்டனர்.




**வெகுஜன எதிர்ப்புகளுக்கு வழிவகுத்தது:**

திட்டத்தின் மீதான கோபம், ஒர்டேகா அரசாங்கத்தின் மீதான பொது அதிருப்தியை அதிகரிப்பதற்கான ஆரம்பகாரணியாகும். இது 2018 இல் வெகுஜன எதிர்ப்புகளுக்கு வழிவகுத்தது, இதன் விளைவாக அரச அதிகாரிகளின் வன்முறை அடக்குமுறை ஏவப்பட்டது.

இந்த கால்வாய் மத்திய அமெரிக்காவின் மிகப்பெரிய ஏரியான நிக்கரகுவா ஏரியை இரண்டாகப் பிரித்திருக்கும், மேலும் கரீபியன் கடற்கரையில் உள்ள பாதுகாக்கப்பட்ட பூர்வீக பிரதேசங்களிலிருந்து ராமா மற்றும் கிரியோல் சமூகங்கள் உட்பட 120,000 மக்களை வலுக்கட்டாயமாக இடம்பெயரும் நிலமையை ஏற்படுத்தியிருக்கும்.

நிக்கரகுவா நாட்டின் மிகமுக்கியமான நன்னீர் இருப்பையும், 22 ஆபத்தான உயிரினங்கள் வசிக்கும் பாதுகாக்கப்பட்ட இயற்கை இடங்களை அழிக்கவும் செய்யும்.

**சீன சொந்தமான எச்கே கால்வாய்மேம்பாட்டு நிறுவனம்:**

ஹாங்காங்கை தளமாகக் கொண்ட சீன தொழிலதிபர் வாங் ஜிங்கிற்கு சொந்தமான எச்கே நிறுவனத்திற்கு 50 ஆண்டு கால்வாய் நிக்கரகுவா கால்வாய் மேம்பாட்டு முதலீட்டு சலுகை வழங்கப்பட்டது.

முறையான ஆலோசனை, சுற்றுச்சூழல் ஆய்வுகள் அல்லதுஅரசியல் விவாதம் இல்லாமல் திட்டத்தை செயல்படுத்துவதற்கான சட்டம் துரிதப்படுத்தப்பட்டதாக அரசியல் விமர்சகர்கள் தெரிவித்தனர்.

சலுகையை வெல்வதற்கு முன், வாங் சிவில் இன்ஜினியரிங்கில் எந்த அனுபவமும் இல்லாதவர் மற்றும் தொலைத் தொடர்பு துறையில் பெரும் செல்வத்தை ஈட்டியிருந்தார். சீனாவின் 2015 பங்குச் சந்தைநெருக்கடியில் அந்த செல்வத்தின் பெரும்பகுதி இழக்கப்பட்டது, அப்போது அவர் தனது செல்வத்தில் 85% வரை இழந்ததாக அறிவிக்கப்பட்டது.

**சுற்றுச் சூழல் மிகக் கடுமையாக பாதிப்பு:**

இத் திட்ட 50 பில்லியன் டாலர்கள் செலவாகும். அதே நேரம்இந்த கால்வாய் கட்டும் பணியால் சுற்றுச் சூழல் மிகக்கடுமையாக பாதிக்கப்படும் என்று சுற்றுச் சூழல் ஆர்வலர்கள்அச்சம் வெளியிட்டனர்.

மிகப் பெரும் நன்னீர் ஏரியான நிக்கராகுவா ஏரிவழியாகத்தான் இந்தக் கால்வாய் செல்கிறது. இதனால் ஏரியுடைய நீரின் தன்மை பாதிப்படையும் என்ற அச்சம் இருக்கிறது. 2015-16 சீனப் பங்குச் சந்தை வீழ்ச்சியின் விளைவாக இந்தத் திட்டம் தாமதமாகி ரத்துசெய்யப்படலாம் என்று ஊடக அறிக்கைகள் தெரிவித்தன.

2016 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் முதல் கட்டுமானத்தை தொடங்கத் திட்டமிடப்பட்டிருந்தது. பசிபிக் பெருங்கடல் கால்வாய் முடிவடைந்த பிறகு, அகழ்வாராய்ச்சி போன்ற முக்கிய பணிகள் நடைபெறவிருந்தன.

ஆயினும் மே 2017க்குள், கால்வாய் அமைப்பதில் உறுதியானநடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை, மேலும் அதன்நிதியுதவி குறித்து மேலும் சந்தேகங்கள் தெரிவிக்கப்பட்டன. பிப்ரவரி 2018 இல், ஆய்வாளர்கள் இந்ததிட்டத்தை செயலிழந்ததாகப் பார்த்தனர்.

தற்போது அட்லாண்டிக் - பசிபிக் கடலை இணைக்கும் சீனகால்வாய் திட்டத்தை ரத்து செய்வதாக நிக்கரகுவா அரசு தெரிவித்துள்ளது. வெகுஜன எதிர்ப்புகளின் விளைவாகவே இத்திட்டம் கைவிட வழிவகுத்ததாக அறியப்படுகிறது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றிகரமான எதிர்காலப் பயணத்துக்கு இளையோரின் பங்களிப்பு மிக முக்கியம்

## ஜனாதிபதி ரணில் வலியுறுத்தல்

கொழும்பு, ஜூன் 02

இலங்கையின் வெற்றிகரமான எதிர்காலப் பயணத்துக்கு இளையோரின் பங்களிப்பு மிகவும் முக்கியமானது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதன்போது வலியுறுத்தினார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் இளம் பிரதிநிதிகளுக்கு இடையிலான சந்திப்பு ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் நடைபெற்றது.

ஜனாதிபதி செயலகத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்டு வரும் இளையோரின் பங்கேற்புடனான நிகழ்வுகளின் ஓர் அங்கமாக "இளையோர் கலந்துரையாடல் - நாளை இலங்கையின் இளம் தலைவர்கள்" என்ற தொனிப்பொருளின் கீழ் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்டு வரும் புதிய பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் சீர்திருத்த முயற்சிகள் தொடர்பில் இங்கு கலந்துரையாடப்பட்டது.



இளையோர் எழுப்பிய கேள்விகளுக்குப் பதில்களை வழங்கிய ஜனாதிபதி, எதிர்கால இலங்கையைக் கட்டியெழுப்புவதற்கான இளைஞர்களின் முயற்சிக்கும் பாராட்டுத் தெரிவித்தார்.

இதன்போது, நாட்டின் எதிர்காலத்துக்கு தேவையான இளையோரின் சிறந்த யோசனைகளையும், பரிந்துரைகளையும் பெற்றுக்கொள்வதற்கான பொறிமுறை ஒன்றை செயல்படுத்துமாறு ஜனாதிபதி, அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார். (எ)

# மாணவிமீது துஷ்பிரயோகம்!

## பாடசாலை அதிபர் மறியலில்

கொழும்பு, ஜூன் 02

நிக்கவரெட்டிய, கபல்லாவ பிரதேசத்தில் 16 வயது மாணவியை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் பாடசாலை அதிபர் கைது செய்யப்பட்டதாக நிக்கவரெட்டிய பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரான பாடசாலை அதிபர் இந்த மாணவியை காரில் வைத்து துஷ்பிரயோகம் செய்ததாக தெரியவந்துள்ளது.

இந்த நிலையில் கைதான அதிபர் நிக்கவரெட்டிய நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட பின்னர் அவரை எதிர்வரும் 11 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட மாணவி நிக்கவரெட்டிய ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# டெங்கு நோய் பரவல் மீண்டும் அதிகரிப்பு

## மக்களே அவதானம்!

கொழும்பு, ஜூன் 02

நாட்டில் பெய்து வரும் கடும் மழை காரணமாக டெங்கு நோய் பரவல் மீண்டும் அதிகரித்துள்ளதாக சுகாதாரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதனால், நுளம்பு பெருகும் இடங்களை அழிக்குமாறு தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் பணிப்பாளர் மருத்துவர் சுதத் சமரவீர பொதுமக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளார்.

கடந்த திங்கட்கிழமை முதல் அறிவிக்கப்பட்ட நுளம்பு ஒழிப்பு வாரம் நேற்றுடன் நிறைவடைந்துள்ளது.

இந்த வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் இலங்கையில் பதிவாகியுள்ள டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 24,815 ஆகவும், டெங்கு நோயினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 09 ஆகவும் பதிவாகியுள்ளது. (எ)

# தமிழ் பொது வேட்பாளருக்கான...

(11ம் பக்கத் தொடர்ச்சி)

கோட்பாட்டுரீதியாக ஏற்றுக்கொள்ளும் அனைவரும் ஒன்றுபட்டுச் செயலாற்ற முன்வர வேண்டும். ஏனெனில் எந்தளவு ஒத்த கருத்துள்ளவர்கள் திரளுகின்றனரோ, அந்தளவிற்கு இது பலமடையும். எந்தளவிற்கு எங்களுக்குள் நாங்கள் விலகிச் செல்கின்றோமா அந்தளவிற்கு இது பலவீனமடையும். தமிழ் மக்களுக்கு ஒரு அரசியல் பாரம்பரியம் உண்டு. ஆனால் கட்சிகள்தான் மக்களை சிதறடித்திருக்கின்றன. அவ்வாறு சிதறடிக்கப்பட்டவர்களை மீண்டும் ஒரிடத்திற்கு கொண்டு வருவதற்காக, நாம் ஏன் இந்த வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ளக் கூடாது? வாய்ப்புக்களை தவறவிடும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் நாங்கள் மேலும் பின்நோக்கியல்லவா சென்றிருக்கின்றோம். அந்த வரலாற்று அனுபவம் எமக்கு உண்டல்லவா!

இதற்கு பின்னால் வெளிநாட்டு சக்திகள் இருக்கின்றனவா - அவர்களின் முகவர்கள் இதற்குள் இருக்கின்றனரா? இப்படியான சந்தேகங்களை வெளியிடும் ஒரு சிறிய குழுவினரும் ஆங்காங்கே முகம் காட்டலாம். இது அடிப்படையில் நீண்டகாலமாக தமிழ் சூழலை ஆட்கொண்டிருக்கும் ஒரு வகையான நோய்க் கூறாகும். நமது செயலும், அந்தச் செயல் மூலம் நாம் காண்பிக்கும் வெற்றியும்தான் இவ்வாறான சந்தேகங்களை பூச்சியமாக்கும். உண்மையில் எந்தவொரு வெளித்தரப்பும் தமிழ் மக்களை தேவையுள்ள மக்கள் கூட்டமாக கருதவேயில்லை. ஒரு மக்கள் கூட்டத்தை தேவையென்று கருதினால் மட்டுத்தான், அவர்களை கையாள வேண்டிய தேவை ஏற்படும். தேவையற்ற மக்கள் கூட்டமொன்றின் அரசியல் செயற்பாடுகள் தொடர்பில் வெளித்தரப்புக்கள் எதற்காக மூக்கை நுழைக்க வேண்டும்?

உண்மையில் நாம் ஒரு தேவையுள்ள மக்கள் கூட்டமாக எவ்வாறு மாறுவது என்றே சிந்திக்க வேண்டும். காலத்திற்கேற்ற செயல்களில் ஒன்றுபட வேண்டும். உறுதியுடனும் நேர்மையுடனும் பயணிக்க வேண்டும். அதே வேளை, எமது செயற்பாடுகள் தேவையற்ற வகையில் எதிரிகளை உருவாக்கிவிடவும் கூடாது. ஒவ்வொரு செயற்பாட்டை முன்னெடுக்கும் போதும், நாம் இதனை மறந்துவிடக் கூடாது. தமிழ் பொது வேட்பாளர் இன்றைய சூழலுக்கு ஏற்புடைய ஒரு அரசியல் வடிவமாகும். ஆனால் அது, நாளையும் அப்படித்தான் இருக்குமென்று கூறுவிட முடியாது. காற்றுள்ள போதே தூற்றிக்கொள்ளுங்கள் என்பது போல், சூழ்நிலை சாதகமாக இருக்கின்ற போதே, செய்ய வேண்டியவற்றை செய்ய வேண்டும்.

வெளித்தரப்புக்களுக்கு எப்போது ஒரு மக்கள் கூட்டம் தேவைப்படும்? குறித்த பிராந்தியத்தில், தங்களின் நலன்களை பாதுகாப்பது என்னுமடிப்படையில்தான், பலம்பொருந்திய நாடுகள், சிறிய நாடுகளின் உள் விவகாரங்கள் மீது கவனம் செலுத்தும். பெரிய நாடுகளுக்கும் சிறிய நாடுகளுக்குமான உறவுகள் என்பது எப்போதுமே, பெரிய நாடுகளின் தேசிய பாதுகாப்பு நலன்களிலிருந்தே தீர்மானிக்கப்படும். இது ஒரு உலகளாவிய நடைமுறை. இது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மாற்றமடையாது.

இலங்கைத் தீவை பொறுத்தவரையில் ஈழத் தமிழ் மக்களுக்கு ஒரு கேந்திர முக்கியத்துமுண்டு ஆனால் அதனை புரிந்து கொண்டு செயலாற்றக் கூடிய ஆளுமைமிக்க தலைவர்கள் தமிழ் மக்களிடத்தில் இல்லை. இந்த நிலையில் தமிழ் மக்களை ஒரு தேவையுள்ள மக்கள் கூட்டமாக எந்தவொரு வெளித்தரப்பும் கருதுவதாக தெரியவில்லை. அப்படி கருதியிருந்தால், யுத்தம் நிறைவற்று பதினைந்து வருட காலமாக ஈழத் தமிழர்கள் நீதிக்காக ஒப்பாரி வைத்துக் கொண்டிருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்காது. தமிழ் பொது வேட்பாளர் ஒருவர் நிறுத்தப்பட்டால், அதனை நோக்கி மக்கள் அணிதிரண்டால், ஈழத் தமிழ் மக்கள் ஒரு தேவையுள்ள மக்கள் கூட்டம் என்னும், அரசியல் சூழல் நிச்சயம் உருவாகும். ●

# பாரதிய ஜனதாக் கட்சி...

(07ம் பக்கத் தொடர்ச்சி)

பாரதிய ஜனதாக் கட்சியின் மறைகரத்தினால் மகராஷ்டிராவிலே அதிருப்திக்குப் பஞ்சமில்லை.

இவ்வாறானதொரு பின்புலத்திலே, பாரதிய ஜனதாக் கட்சி வெற்றிபெறக்கூடிய தொகுதிகளின் எண்ணிக்கை வீழ்ச்சியடைவது தவிர்க்க முடியாததாகவே தெரிகின்றது.

மறுவளத்தில், தனித்து பாரதிய ஜனதாவுடன் மோத முடியாது என்பதை ஏற்றுக்கொண்டதன் பலாபலன்களை காங்கிரஸ் கட்சி அறுவடை செய்யத் தொடங்கியிருக்கின்றது. பரந்துபட்ட "இண்டியா" கூட்டணி ஆரோக்கியமான அதிர்வுகளை ஆங்காங்கே ஏற்படுத்துகின்றது. அந்தவகையிலே, காங்கிரஸ் கட்சி ஏற்படுத்திக்கொண்ட அணுகுமுறை மாற்றத்தின் விளைவுகளைக் களத்திலே காணமுடிகின்றது.

"ஹிந்தி பெல்ட்" என்று சொல்லப்படுகின்ற மாநிலங்களிலே ஏற்படக்கூடிய ஏற்றஇறக்கங்களின் அதிர்வு, டெல்லியிலே எதிரொலிக்கக்கூடியதாகும். அந்தவகையிலேயே, 80 தொகுதிகளைக் கொண்ட உத்தரப் பிரதேசம் மற்றும் 40 தொகுதிகளைக் கொண்ட பீகாரின் தேர்தல் முடிவுகள் கவனிப்பை பெறுவனவாகும்.

உத்தரப் பிரதேசத்தில் முன்னாள் முதலமைச்சரும் சமாஜ்வாதி கட்சித் தலைவருமான அகிலேஷ் யாதவ், பீகாரில் முன்னாள் துணை முதலமைச்சரும் ராஷ்ட்ரிய ஜனதா தளம் (ஆர்ஜேடி) தலைவருமான தேஜஸ்வி யாதவ் ஆகியோர் பாரதிய ஜனதாக் கட்சிக்கு கடும் சவாலாகக் கருதப்படுகிறார்கள். இவர்கள் இருவருமே "இண்டியா" கூட்டணியில் உள்ளனர்.

தெலங்கானா மற்றும் கர்நாடகா மாநிலங்களிலே காங்கிரஸ் கட்சியே ஆட்சி செய்கின்றது. அதனால், இவ்விரண்டு மாநிலங்களிலேயுமான தேர்தல்களம் காங்கிரஸ் கட்சிக்குச் சாதகமாகவே தெரிகின்றது.

அதேபோன்று, மகராஷ்டிரா, இராஜஸ்தான், மத்தியப் பிரதேசம் போன்ற மாநிலங்களில், பாரதிய ஜனதாக் கட்சி மீதான அதிருப்தி, காங்கிரசுக்கு சாதகமாக அமையக்கூடிய வாய்ப்பையே காணமுடிகின்றது.

தமிழ்நாட்டில், திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு கிடைக்கக்கூடிய வெற்றி, அகில இந்திய அளவில் "இண்டியா" கூட்டணியின் கணக்கிலேயே வரவு வைக்கப்படக்கூடியதாகும்.

தன்னுடைய இருப்பைத் தக்கவைக்கக்கூடிய எண்ணிக்கையிலான தொகுதிகளில் வெற்றி பெற்று, வெற்றி என்னும் இலக்கிலேயே காங்கிரஸ் கட்சி தேர்தல் களத்தில் நுழைந்தது. மறுவளத்தில், பாரதிய ஜனதாக் கட்சி 400 தொகுதிகளில் வெற்றி என்னும் அலப்பறையுடன் தேர்தல் களத்துக்கு வந்திருந்தது.

இவ்வாறு எதிரும்புதிருமாகவே கட்சிகள் தேர்தல் கணக்குப் போட்டன. அதற்கான "மக்கள் தீர்ப்பு" ஜூன் 4ல் வெளியாகப்போகின்றது.

தேர்தல் முடிவு வெளியாகும்போது, கட்சிகளுடைய கணக்குகளெல்லாம் புரட்டிப்போடப்படலாம் என்றே கணிக்க முடிகின்றது.

கடந்த இரண்டு பொதுதேர்தலுடன் ஒப்பிடுகையில், காங்கிரஸ் கட்சி வெற்றி பெறுகின்ற தொகுதிகளின் எண்ணிக்கை அதிகரிக்கலாம். அதனுடைய மறுபக்கம், பாரதிய ஜனதாக் கட்சியின் தொகுதி எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்படலாம்.

எதுஎப்படியாகிலும், "இண்டியா" கூட்டணிக்கு ஆட்சியமைக்கக் கூடிய வாய்ப்பு எட்டாக்கனியாகவே தெரிகின்றது. ஆனால், பலமான எதிர் அணியாக எழுச்சியடையலாம். மறுவளத்தில், பாரதிய ஜனதாக் கட்சி தலைமையிலான "என்.டி.ஏ" கூட்டணிக்கு "மிடுக்கான" வெற்றி கிடைக்காது. ஆனால், ஆட்சியமைக்கக்கூடிய வாய்ப்பு வசப்படக்கூடியதாகும். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வடக்கு...

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவியை வகித்தவர்தான் இந்நிலைமைக்கு காரணம் என நீதிமன்றம்கூட கூறியுள்ளது.

அத்துடன், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையால்தான் 30 வருடகால போரும் மூண்டது.

1983 இல் நடைபெறவிருந்த தேர்தல் சர்வஜன வாக்கெடுப்புமூலம் ஒத்திவைக்கப்பட்டு, ஜனநாயகம் இல்லாது செய்யப்பட்டது. நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை பயன்படுத்தியே இது செய்யப்பட்டது. வடக்கில் உள்ளவர்களுக்கு தமது பிரதிநிதிகளை அனுப்ப முடியாமல்போனது. தெற்கில் எமக்கும் முடியாமல் இருந்தது.

வடக்கும், தெற்கும் பற்றி எரிவதற்கு இந்த நிறைவேற்று அதிகார முறைமையே காரணம் என்பதை ஜனாதிபதி மறந்துவிட்டார்போலும்.-என்றார். (அ)

### அதிகாலை...

42 வயதுடைய குணசிங்கம் சந்துரு என்பவர் மீதும் அவரது மனைவி மீதுமே தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தாக்குதலுக்கு இலக்கான நபர் தனது வியாபார நடவடிக்கைகளை முடித்துக்கொண்டு, வீடு திரும்பியவேளை வீட்டுக்கு அருகில் மறைந்திருந்த கொள்ளைக் கும்பல் அவர் மீது தாக்குதலை மேற்கொண்டு அவரது வியாபாரப் பணத்தினை கொள்ளையடித்துள்ளது.

அதேவேளை, சத்தம் கேட்டு வீட்டுக்கு வெளியே ஓடி வந்த வர்த்தகரின் மனைவி மீதும் கொள்ளைக் கும்பல் தாக்குதல் நடத்தி அவரது நகைகளையும் கொள்ளையடித்து தப்பிச் சென்றுள்ளது.

தாக்குதலுக்கு இலக்கான குடும்பஸ்தர் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அதனையடுத்து, சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (அ)

### ரணிலால்...

அதேபோன்று ஜனநாயகத்திற்கு விரோதமான செயற்பாட்டை மேற்கொள்வதற்காகவே அவர்கள் தேர்தலை பிற்போட எத்தனிக்கின்றனர் . மக்கள் ஆணையுள்ள பாராளுமன்றமும் தலைமைத்துவமுமே தற்போதைய தேவைப்பாடாகவுள்ளது.

தேர்தலை காலம் தாழ்த்தாது இரண்டு தேர்தல்களையும் ஒரே நாளில் நடத்தவேண்டும் ஆயின் அதற்கான ஆதரவை எம்மால் வழங்க முடியும் .மாறாக தேர்தலை காலம் தாழ்த்தும் விடயத்தை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது.-என்றார். (அ)

### அரசியல்...

பரீட்சை முடிவுகளின் அடிப்படையில், பொதுச் சேவை ஆணைக்குழு மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களமும் 40 விண்ணப்பதாரர்களை பணியமர்த்த பரிந்துரைத்துள்ளன.

எனினும், வெளிவிவகார அமைச்சின் நேர்காணலில் 20 விண்ணப்பதாரர்கள் மட்டுமே தெரிவு செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை வெளிநாட்டு சேவையின் மூன்றாம் தரத்தில் தற்போது சுமார் 100 வெற்றிடங்கள் உள்ள பின்னணியிலேயே இவ்வாறு இடம்பெற்றுள்ளது.

இதன்படி, பரீட்சையில் சித்தியடைந்த 117 விண்ணப்பதாரர்களில் 20 பேரை மாத்திரம் நியமித்துவிட்டு, எஞ்சிய பதவிகளுக்கு அமைச்சர்களின் உறவினர்களை வேறு வழிகளில் நிய மிக்க அரசாங்கம் தயாராகி வருகிறதா என்ற சந்தேகம் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

எவ்வாறாயினும், தற்போதுள்ள அமைச்சின் விதிமுறைகளின் கீழ் 20 பேரை மாத்திரம் பணியமர்த்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய தெரிவித்தார். (அ)

### நயினாதீவு...

ஒரு படகு புறப்படும் என கூறப்பட்டுள்ளது.

நயினாதீவு நாகபூஷணி அம்பாளின் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 07ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

### ஒக்ரோபர்...

12 ஆம் திகதி ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படும்.

அரசமைப்பின் பிரகாரம் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படும் என்பதில் ஜனாதிபதி உறுதியாக உள்ளார். இதில் மாற்று கருத்துக்கு இடமில்லை-என்றார். (அ)

### மக்கள் ஆணை...

என்பது கைவந்த கலை.

2018ஆம் ஆண்டு தற்போது உள்ள ஜனாதிபதி அப்போதைய பிரதமராக இருந்த காலத்தில் எங்களது தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரனின் ஆலோசனைக்கு அமைவாக பாராளுமன்றத்தில் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டு இன்று வரை மாகாண சபை தேர்தல் நடைபெறாமல் உள்ளது.

அரசியலமைப்பின் பிரகாரம் ஜனாதிபதித் தேர்தலை ஒத்தி வைக்க முடியாது என்பது எல்லோருக்கும் தெரியும். எனினும் பாராளுமன்றம், நீதிமன்றம் ஊடாக அனுமதிகளை பெற்று மக்கள் ஆணையின் மூலம் தான் தேர்தல்களை பிற்போட முடியும்.

இந்நிலையில், ஐக்கிய தேசியக் கட்சியின் மாறுபட்ட கருத்துக்களுக்கு ஜனாதிபதி உரிய பதில்களை வழங்காதுள்ளபோது தேர்தல்கள் எவ்வாறு நடக்கும் என பொதுமக்களும் குழம்பிப் போய் உள்ள நிலையில் உரிய காலத்திற்குப் பின்பு தேர்தல்களை நடத்தி மக்களின் ஆணையை பெறவேண்டும்.

இவ்வாறு நடைபெறாமல் விட்டால் அவர்கள் ஜனநாயக விரோதிகள் ஆவார். எங்களது கட்சியின் நிலைப்பாடும் உரிய காலத்தில் தேர்தல்கள் நடைபெற வேண்டும் என்பதுதான்-என்றார். (அ)

### ரணில்...

கூடிய சிறந்த குழு ஐக்கிய மக்கள் சக்தியில் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தற்போதைய ஜனாதிபதியிடம் திறமையான அணி இல்லை எனத் தெரிவித்த அவர், எதிர்வரும் தேர்தலில் நாட்டை அபிவிருத்தி செய்யும் குழுவுடன் ஒன்றிணைய வேண்டும் என்பதை மக்கள் புரிந்துகொள்ளவேண்டும் என்று கூறினார்.

கொழும்பில் உள்ள ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே பாராளுமன்ற உறுப்பினர் மன்னப்பெரும மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மழை பெய்தால் மின்சாரக் கட்டணத்தைக் குறைப்பதாகக் கூறிய அரசாங்கம் தற்போது செவிடாகவும் ஊமையாகவும் மாறியுள்ளது.

நீர் மின் உற்பத்தியின் பயனை மக்களுக்கு வழங்கவேண்டும்.

சர்வஜன வாக்கெடுப்பு தொடர்பில் புதிய சித்தாந்தம் காணப்படுகிறது. அது எவ்வாறான தேர்தல் என்பது குறித்து நாட்டுக்கு தெரியாது.

பாராளுமன்றத் தேர்தலை முன்கூட்டியே நடத்துமாறு கோருவதற்காகவே பசில் ராஜபக்ஷ அமெரிக்காவில் இருந்து இலங்கை வந்துள்ளார்.

அரசாங்கம் நாட்டு மக்களை வாழவைக்காமல் அவர்களின் சொந்த நலனுக்காக செயல்படுகின்றது என்பது மிகத் தெளிவாகத் தெரிகின்றது.

இலவசக் கல்வி, சுகாதாரம் இரண்டும் வீழ்ச்சியடைந்துள்ள போதிலும், அரச பல்கலைக்கழகப் பாடசாலைகள் வீழ்ச்சியடைந்துள்ள போதிலும், தனியார் பல்கலைக்கழ கங்களும் ... சிறப்பாகச் செயற்படுகின்றன-என்றார்.

# எரிபொருள் விலைகுறைப்பின் பயன் நுகர்வோரை சென்றடையவேண்டும்!

## கோருகின்றார் அசேல சம்பத்

கொழும்பு, ஜூன் 01

எரிபொருள் விலை குறைப்பின் பலன் நுகர்வோரை சென்றடையும் விசேட வேலைத்திட்டத்தை இன்று முதல் நடைமுறைப்படுத்த எதிர்பார்த்துள்ளதாக, தேசிய நுகர்வோர் முன்னணியின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எரிபொருள் விலை நேற்று நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில் குறைக்கப்பட்டுள்ளது.

எரிபொருள் விலை குறைப்பின் பலனை நுகர்வோர் பெற்றுக்கொள்ள வேண்டியது அவசியமாகும்.அதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும்.

உணவுப்பொருட்களின் விலை குறைக்கப்படவேண்டியது அவசியமாகும். ஆகவே அரசாங்கத்தினால் பெற்றுக் கொடுக்கப்படும் சலுகை நுகர்வோருக்கு கிடைக்கப்பெறும் வகையிலான நடவடிக்கையை நாம் நாளைய தினத்திலிருந்து முன்னெடுக்க எதிர்பாரத்துள்ளோம்.

அரசாங்கம் வழங்கும் சலுகையை நுகர்வோருக்கு பெற்றுக்கொடுக்க முடியாமையின் பின்னணியில் உள்ள விடயம் தொடர்பிலும் உரிய ஸ்தலத்திற்கு சென்று ஆராயவுள்ளோம் - என்றார். (அ)

# 38 இலட்சம் ரூபா பெறுமதியான நகைகளைத் திருடியவர் கைது

கொழும்பு, ஜூன் 02

38 இலட்சம் ரூபாய் பெறுமதியான தங்க நகைகளைத் திருடிய சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் கொழும்பு பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போதே சந்தேகநபர் கொழும்பு, புறக்கோட்டை பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு 15 பகுதியைச் சேர்ந்த 21 வயது நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.விசாரணையில் சந்தேகநபரிடமிருந்து 05 கிராம் 390 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளும் கைப்பற்றப்பட்டுள்ளது.

மேலும், சந்தேகநபரிடமிருந்து தங்க நகைகள் மற்றும் நீல நிற மாணிக்கக் கல் உள்ளிட்ட பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதனையடுத்து சந்தேகநபர் மேலதிக விசாரணைகளுக்காக கொம்பனித்தெரு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொம்பனித்தெரு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# 173,444 மாணவர்கள் பல்கலைக்குத் தகுதி

## 190 பேரின் பெறுபேறு இடைநிறுத்தம்

கொழும்பு, ஜூன் 02

2023ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் நேற்று முன் தினம் வெள்ளிக் கிழமை வெளியாகின. இதில் 2 இலட்சத்து 69 ஆயிரத்து 613 பேர் பரீட்சைக்குத் தோற்றிய நிலையில் ஒரு இலட்சத்து 73 ஆயிரத்து 444 பேர் பல்கலைக்கழகத்துக்கு தகுதி பெற்றுள்ளனர்

அத்துடன் 190 பரீட்சார்த்திகளின் பரீட்சைப் பெறுபேறுகள் இடைநிறுத்தி வைக்கப் பட்டுள்ளன.

இதேவேளை - பரீட்சை பெறுபேறு மீளாய்வு செய்வதற்காக எதிர்வரும் 5 ஆம் திகதி முதல் 19 ஆம் திகதி வரை விண்ணப்பிக்க முடியுமெனவும் பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

### தொழில்நுட்ப...

எமது நாட்டில் செய்ய முடியாமல் போயுள்ளது. ஆனால் அத்தகைய தொழிநுட்ப மாற்றத்தினூடாக வியட்நாமிற்கு 433 பில்லியன் டொலர் வருவாயை ஈட்டக்கூடிய பொருளாதாரத்தை ஏற்படுத்த முடிந்துள்ளது.

அதேபோன்று தென்கொரியாவிற்கு 1.7 ரில்லியன் பொருளாதாரத்தை உருவாக்க முடிந்துள்ளது. பங்களாதேசினால் 459 பில்லின் டொலர் பொருளாதாரத்தை உருவாக்கியுள்ளது.

அந்த வகையில் குறித்த நாடுகள் தம்முடைய கொள்கைகள் மற்றும் கொள்கையை கொண்டு நடத்த கூடிய வகையிலான தலைமைத்துவம் என்பவற்றை உருவாக்கி மாற்றத்தை உருவாக்கியுள்ளன.

அதுவும் குறித்த விடயங்களில் மாற்றத்தை ஏற்படுத்தியமையின் ஊடாக ஆசிய வலயத்தில் பொருளாதார வளர்ச்சியடைந்த நாடுகளாகவுள்ளன. ஆனால் எம்முடைய நாட்டின் பொருளாதாரம் 70 பில்லியன் டொலர்களாகும். ஆனால் நாம் என்ன செய்துள்ளோம்.

உலகளாவிய ரீதியில் ஏற்படுத்தப்பட்டுள்ள தொழிநுட்ப மாற்றத்தை எம்முடைய நாட்டின் சமூக பொருளாதார வளர்ச்சிக்கு பயன்படுத்த இயலாமல் போன வர்களாகவே நாம் உள்ளோம்.

கொரியா 685 பில்லியன் டொலர் ஏற்றுமதி வருமானத்தை உழைக்கும் நிலையில் பங்களாதேஷ் 70 பில்லியன் டொலர் வருமானத்தை உழைக்கும் நிலையில் இலங்கை 12 பில்லியன் டொலர் ஏற்றுமதி வருமானத்தை மாத்திரமே உழைக்கின்றது.-என்றார். (அ)

### சிறிகொத்தவை...

மீதமுள்ள ஐக்கிய தேசியக் கட்சியினரின் நலனுக்காக அவர் இதனை செய்ய வேண்டும். அவர் சிறிகொத்தவை எங்களிடம் ஒப்படைத்தால் அவரது பாவங்கள் சில மன்னிக்கப்படும்.

ரணில் விக்ரமசிங்கவை ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பதவியிலிருந்து நீக்க முடியாத காரணத்தினால் நாங்கள் ஐக்கிய மக்கள் சக்தியை உருவாக்க நிர்பந்திக்கப்பட்டோம்."-என்றார் சஜித் சேனசிங்க.

இதற்கிடையில் ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத்தின் பதவிக் காலத்தை நீட்டிப்பதற்கு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்த கருத்தைக் குறிப்பிட்ட சேனசிங்க, "அவர் எப்படி ரணில் விக்கிரமசிங்க வுக்கு ஆதரவாக மாறினார் என்பது நம்ப முடியாததாக உள்ளது.

ரங்கே பண்டார அன்றைய நாட்களில் ரணில் விக்கிரமசிங்கவை தீவிரமாக எதிர்க்கும் நபராக விளங்கினார்.

அந்தக் காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையை மாற்றுவதற்கு அவர் எம்முடன் முன்னணியில் இருந்தார் எனவும் கூறினார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# தேர்தல்களில் தலையீடு செய்வது ஜனநாயகத்தை நசுக்கும் செயல்!

## சட்டத்தரணிகள் ஒன்றிணைவு சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூன் 02

**மக்களின் அபிலாஷைகள், விருப்பங்களை வெளிப்படுத்தும் அடிப்படை உரிமையான ஜனாதிபதித் தேர்தல், பாராளு மன்றத் தேர்தல் மற்றும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் தலையிடுவது ஜனநாயகத்தை நசுக்கும் சர்வாதிகார முயற்சி என சட்டத்தரணிகள் ஒன்றிணைவு தெரிவித்துள்ளது.**

ஜனாதிபதி அல்லது பாராளு மன்றத்தின் கொள்கைகளை அங்கீக ரிப்பது அல்லது நிராகரிப்பதே ஜனநாயகம் என அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தேர்தலை ஒத்திவைக்கும் முன்மொழிவுகள் தொடர்பான விடயங்களை தெளிவுபடுத்தும் வகையில், சட்டத்தரணிகள் ஒன்றிணைவு அறிக்கை ஒன்றை இன்று வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதி சட்டத்தரணிகளான உபுல் ஜயசூரிய, கலாநிதி ஜயம்பதி விக்ரமரத்ன, டினால் பிலிப்ஸ், சாலிய பீரிஸ், எஸ்.டி.ஜயங்க, உபுல் குமாரப்பெரும, பேராசிரியர் தீபிகா உடுகம உள்ளிட்ட சட்டவல்லுநர் கள், சட்டத்தரணிகள் ஒன்றிணை வில் அங்கம் வகிக்கின்றனர்.

மூன்றில் இரண்டு அதிகாரத் தைக் கொண்டிருந்த பாராளுமன் றம், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி மீது மக்கள் வைத்திருந்த நம்பிக்கை முற்றாகத் தகர்க்கப்பட்டுள்ளதை போராட் டத்தின் மூலம் மக்கள் உறுதிப் படுத்தியுள்ளதாக அவர்கள் தமது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ள னர்.

இவ்வாறானதொரு பின்னணி யில், ஆட்சிக்கு வந்த தற்போதைய ஜனாதிபதி ஜனநாயகத்தை பாது காத்து மக்களின் இறையாண் மைக்கு அடிபணிய கடமைப்பட் டுள்ளார் என சுட்டிக்காட்டியுள்ள சட்டத்தரணிகள் ஒன்றிணைவு, நிறைவேற்று அதிகாரம், பாராளு மன்றம் உள்ளிட்ட அரச கட்ட மைப்புக்கு சட்டபூர்வமான தன் மையை மீளப்பெற்றுக் கொடுப்பது அவரது பிரதான பணியாக இருந்தி ருக்க வேண்டும் எனவும் வலியு றுத்தியுள்ளது.

ஆனால் அதற்கு பதிலாக, 2023 உள்ளூராட்சிச் சபைத் தேர்தலை நடத்த மறுத்த ஜனாதிபதி, சட்ட பூர்வத்தன்மையை இழந்த பாராளு மன்றத்தில் பெரும்பான்மை ஆதரவு டன் அடக்குமுறை, சர்வாதிகார நிகழ்ச்சி நிரலை அமுல்படுத்தி வருவதாக இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசியலமைப்பின் 30/2 பிரிவின்படி, ஜனாதிபதியின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகள் எனவும் அரசியலமைப்பின் 62ஃ2 பிரிவின் கீழ் பாராளுமன்றத்தின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகள் என்பதனையும் சட்டத்தரணிகள் ஒன்றிணைவு தமது அறிக்கையில் நினைவுபடுத்தியுள்ளது.

அந்த காலவரையறையை மாற் றுவதற்கு அரசியலமைப்பில் திருத் தம் மேற்கொள்ள வேண்டும் என வும் இதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அது அரசியலமைப்பின் அடிப்படைக் கட்டமைப்பை மாற்றுவதற்கான திருத்தம் என்பதால், அதற்கு பாராளுமன்றத் தின் மூன்றில் இரண்டு பெரும் பான்மை வாக்கு, சர்வஜன வாக் கெடுப்பு அவசியம் எனவும் சட்டத் தரணிகள் ஒன்றிணைவு சுட்டிக் காட்டியுள்ளது.

இவ்வாறான பின்னணியில் தேர்தலை ஒத்திவைக்கும் முன் மொழிவுகள் மக்களின் இறையாண் மையை முற்றாக இழிவுபடுத்துவதா கவும், அது திட்டமிட்டு அரசியல மைப்பை புறக்கணிக்கும் விடயம் எனவும் சட்டத்தரணிகள் ஒன்றி ணைவு மேலும் தெரிவித்துள்ளது. (அ)

# ரங்கே பண்டார கூறிய கருத்தின் பின்னணியில் ஜனாதிபதி ரணில்!

## டிலான் பெரேரா குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 02

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனை யின் பிரகாரமே பாலித ரங்கே பண்டார கருத்துகளை முன்வைத்திருக்க வேண்டும் என்று பாராளுமன்ற உறுப் பினர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

பாலித ரங்கே பண்டார ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர். எனவே, அவர் வெளியிடும் கருத் துக்கு மதிப்பு உள்ளது. அவர் வெளியிடும் அறிவிப்பு களை கட்சியின் நிலைப்பாடாகவே கருதவேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. எனவே, தனது செயலாளர் ஊடாக மேற்படி கருத்தை வெளியிட்டு சமூகத்தின் நிலையை அறிய அவர் முயற்சி எடுத்திருக்க கூடும்- என்றார்.

அதேவேளை, நாட்டில் உள்ள அரசமைப்பு தொடர் பில் ரங்கே பண்டாரவுக்கு புரிதல் இல்லை என்பதையே அவரின் அறிவிப்புகள் வெளிப்படுத்துகின்றனர் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஹரினி அமரசூரிய தெரிவித் தார். (அ)

# குறைந்த விலையில் பழைய வாகனங்கள்

## புதிய வர்த்தக மோசடி தொடர்பில் எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 02

மக்களிடம் குறைந்த விலையில் பழைய வாகனங் களை பெற்று அதிக விலைக்கு விற்பனை செய்யும் இருநூறுக்கும் மேற்பட்ட வாகன விற்பனையாளர்கள் மற்றும் வாகன தரகர்கள் தொடர்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த நபர்கள் குறைந்த விலையில் பழைய வாகனங் களை வாங்கி மீண்டும் புதிய வாகனங்கள் போன்று தயார்படுத்தி விற்பனை செய்து வருகின்றமை தொடர் பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த குழு வாட்ஸ்அப் கணக்குகள் மூலம் தகவல் களை பரப்பி, பயன்படுத்திய வாகனங்களுக்கு பெரிய சந்தையை உருவாக்கியுள்ளமையும் தெரியவந்துள்ளது.

இதன்மூலம் குறைந்த விலைக்கு மக்களிடம் இருந்து வாங்கப்பட்ட வாகனங்களை அதிக விலைக்கு விற்பனை செய்து வருகின்றனர்.

இந்த கடத்தல்காரர்கள் குறைந்த விலையில் பழைய வாகனங்கள் கிடைப்பதாகவும், அவற்றை சீரமைத்து புதிய வாகனங்களாக விற்பனை செய்வதாகவும் கூறப் படுகிறது.

இந்த வர்த்தக மாபியா காரணமாக மக்களுக்கு சிறிய வாகனம் கூட நியாயமான விலையில் கிடைக்கும் வாய்ப்பு மறுக்கப்பட்டுள்ளதாக பலர் முறைப்பாடு செய்துள்ளனர்.

அரசாங்கம் வாகன இறக்குமதிக்கு தடை விதித் துள்ள நிலையில், சில வாகன வியாபாரிகள் புதிய மோச டியாக இதனை ஆரம்பித்துள்ளதாகவும், இந்த வர்த்தக மாபியாக்களின் நடவடிக்கை உடனடியாக முறியடிக்கப் பட வேண்டுமெனவும் சுட்டிக்காட்டுகின்றனர்.

இந்த வர்த்தக மாபியாக்குழு மக்களிடம் இருந்து பழைய வாகனங்களை மொத்தமாக வாங்கி இந்த கடத் தலை தொடர்வதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. (அ)

# கடவுச்சீட்டுகள் விநியோகத்தில் நடந்த பெரும் மோசடி அம்பலம்

கொழும்பு, ஜூன் 02

வெளிநாட்டில் தங்கியிருக்கும் பாதாள உலக குழுவினருக்கு கடவுச் சீட்டு வழங்கும் போது அவர்களின் உண்மையான பெயர்களுக்கு மேலதிகமாக போலியான பெயர் களிலும் தயார் செய்யப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இரண்டு வகையான கடவுச்சீட்டுகளிலும் ஒரே மாதிரி யான கைரேகைகள் பதிவு செய்யப் பட்டு, குடிவரவுத் திணைக்களத் தின் தரவு அமைப்புக்குள் அனுப் பப்பட்டுள்ளதாக விசேட விசார ணையில் தெரியவந்துள்ளது.

பாதாள உலகக் குழுவினருக்கு போலி கடவுச்சீட்டு தயாரித்தல் தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்ட நீண்ட விசாரணையின் போதே இவ்வாறு தெரியவந்துள்ளது.

பல அதிகாரிகளின் உதவியுடன் இந்தப் போலி கடவுச்சீட்டுகள் தயாரிக்கப்பட்டதாகவும், இவ் வாறு தயாரிக்கப்பட்ட கடவுச் சீட்டுகளின் எண்ணிக்கை 20 என வும் அதில் 14 டுபாய் பாதாள உல கக் குழுவினரின் பிடியில் சிக்கியுள் ளதாகவும் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த போலி கடவுச்சீட்டிற்காக ஐந்து லட்சம் ரூபா பணம் செலுத் தப்பட்டுள்ளமை தெரியவந்துள் ளது. இவற்றில் பெரும்பாலானவை வவுனியா அலுவலகத்தில் அச்சிடப் பட்டவை என விசாரணைகளில் மேலும் தெரியவந்துள்ளது.

இந்த மோசடி நடவடிக்கையில் ஈடுபட்ட குடிவரவு-குடியகல்வு திணைக்களத்தில் பணிபுரியும் நிர் வாக சேவை அதிகாரிகள் இருவரை குற்றப்புலனாய்வு திணைக்களம் அண்மையில் கைது செய்தது.

இந்த மோசடியுடன் தொடர்பு டைய வேறு சிலரைக் கண்டுபிடிப் பதற்கான விசாரணைகள் ஆரம்பிக் கப்பட்டுள்ளன. ஆனால் இரண்டு அதிகாரிகளையும் கைது செய்யும் போது சில தரப்பினர் பலத்த அழுத்தம் பிரயோகித்து கைது செய்வதைத் தடுக்க முயன்றனர்.

கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள தரவு அமைப்பு இருந் தும், டுபாயில் பாதாள உலகக் குழுவினர் தயாரித்த போலி கடவுச்சீட்டிலும் உண்மையான கடவுச்சீட்டிலும் ஒரே கைரே கையை ஊழல் அதிகாரிகள் பதித் துள்ளனர்.

கோடிக்கணக்கான மதிப்புள்ள தரவு அமைப்புகளை வாங்குவதில் எந்தப் பயனும் இல்லை எனவும் அவர்கள் பணத்திற்காக தரவு அமைப்புகளையும் மாற்றுவதாக மூத்த பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (அ)

# பொது இடங்களில் சோதனை

கொழும்பு, ஜூன் 02

பொது இடங்கள் மற்றும் பொதுப் போக்குவரத்து என்பவற்றில் இடம்பெறும் திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்களை கைது செய்வதற்காக பொலி ஸார் விசேட சோதனை நடவடிக்கைகளை ஆரம்பித்துள் ளனர்.

பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் நிஹால் தல்துவ இதனைக் குறிப்பிட்டார்.

இதற்காக பொலிஸார் மற்றும் புலனாய்வு அதிகாரி கள் சிவில் உடையில் சோதனை நடவடிக்கையில் ஈடு படுத்தப்பட்டுள்ளனர். (அ)

# வணிகவியலில் யாழ். இந்து மகளிர் மாணவி மாவட்டத்தில் முதலிடம்!

யாழ்ப்பாணம், ஜூன் 01

வெளியான க.பொ.த உயர் தரப் பரீட்சை பெறுபேறுகளில் வணிகவியலில் யாழ். இந்து மகளிர் கல்லூரி மாணவி கிர்த் திகா பத்மலோஜன் யாழ். மாவட்டத்தில் முதல் நிலை யைப் பெற்றுள்ளார்.

யாழ். இந்து மகளிர் கல்லூ ரியில் இருந்து பரீட்சைக் குத் தோற்றியவர்களில் 90 மாணவி கள் விஞ்ஞான, கலை, வணிக வியல் துறைகளில் சிறப்புப் பெறுபேறுக ளைப் பெற்று பல்கலைக்கழகங்களுக்கு தகுதி பெற்றள்ளதாகவும்,வணிகவிய லில் முதலாம் நிலை மற்றும் கலைத் துறையில் ஐந்தாம் இடம் உட்பட 24 பேர் 3ஏ சித்திக ளையும், 18 பேர் 2ஏ,பி சித்திகளையும், 6 பேர் 2ஏ, சீ சித்திகளையும் பெற்று பாட சாலைக்கு பெருமை சேர்த்துள் ளனர் எனவும் தெரிவிக்கப்பட் டுள்ளது. (அ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 03.09.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.